இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள்: 28

சுடர் 32 | கதிர் 245 | வள்ளுவர் ஆண்டு 2048 | ஆடி 13 சனிக்கிழமை 29.07.2017

மகாராஜா பொதிகள் சேவை

எந்த ஒரு வெளிநாடுகளுக்கும் கடலுணவுப் பொருட்கள், பழவகைகள் மற்றும் மரக்கறிவகைகளை எந்தவித மேலதிக கட்டணமின்றி அனுப்ப இன்றே நாடுங்கள்

GTV Express

இல 225, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 - 2224338 / 021-4925024
இல 25, கந்தசாமி கோவில் வீதி, வவுனியா.
024 - 4930200 / 076 - 6908961

# பன்னாட்டு அழுத்தமே தீர்வுக்கு மிக அவசியம்

## கனேடியத் தூதுவரிடம் நேற்று சம்பந்தன் நேரில் வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 29

"தமிழரின் பிரச்சினைகளுக்கு அரசு இழுத்தடிக்காமல் விரைவாகத் தீர்வை வழங்கவேண்டும். அதற்குப் பன்னாட்டு அழுத்தமே மிக அவசியம்" என்று கனேடியத் தூதுவரிடம் நேற்று வலியுறுத்தினார் எதிர்க்கட்சித்தலைவரும்தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன்.

இலங்கைக்கான கனேடியத் தூதுவர் ஷெல்லி >> 25



## எதிர்பாராத மின்தடைகள் ஏற்படலாம்

*மின்சார சபை அறிவிப்பு*

கொழும்பு, ஜூலை 29

நாட்டின் சகல பாகங்களிலும் அவ்வப்போது மின் தடைகள் ஏற்ப >> 25

## அம்பாந்தோட்டை உடன்பாடு இன்று கைச்சாத்து

ரணில் திட்டவட்டம்

கொழும்பு, ஜூலை 29

அம்பாந்தோட்டைத் துறைமுக உடன்பாடு இன்று கைச்சாத்திடப்படும் எனத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுத் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

கடன்பெறும் இன >> 25

வித்தியா படுகொலை வழக்கு:

## சி.ஐ.டியின் விசாரணைக்கு சமுகமளிக்காத விஜயகலா

யாழ்ப்பாணம், ஜூலை 29

புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை வழக்கின் முதன்மைச் சந்தேகநபரான சுவிஸ்குமாரைத் தப்பிக்க வைத்தமை தொடர்பான விசாரணையில்வாக்கு மூலம் வழங்க, இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா >> 25

## வித்தியா படுகொலையில் பெரிய இரண்டு கழுகுகள் கைதுசெய்யப்படாதது ஏன்?

கூட்டமைப்பு கேள்வி

யாழ்ப்பாணம், ஜூலை 29

யாழ்ப்பாணம் புங்குடுதீவு மாணவி வித்தியா கொடூரமானமுறையில்படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தில் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ள 10 பேருக்கும் அப்பால் பெரிய இரண்டு கழுகு >> 25

## விடுதலைப் புலிகளின் நிதி விடுவிக்கப்படாது

அது முடக்கப்பட்டே இருக்கும் என்கிறது ஐரோப்பிய ஒன்றியம்

கொழும்பு, ஜூலை 29

ஐரோப்பிய நாடுகளில், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் நிதி தொடர்ந்தும் முடக்கப்பட்டே இருக்கும் என்று ஐரோப்பிய ஒன்றியம் நேற்று வெளியிட்டுள்ள சிறப்பு அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

ஐரோப்பிய ஒ்ன்றி >> 25

## 600 பொலிஸார் நல்லூரில் கடமை

யாழ்.ஜூலை 29

யாழ்ப்பாணம் நல்லூர் ஆலய வருடாந்தத் திருவிழாவில் 600 பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

நல்லூர் ஆலயத் திருவிழா கொடியேற்றத்துடன் நேற்று ஆரம்பமாகியது. அங்கு குற்றச் செயல்களைத் தவிர்க்கப் பொலிஸார் கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர் என்று யாழ்ப்பாணப் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் எஸ். ஸ்ரெனிஸ்லஸ் தெரிவித்தார்.

விரிவு பக். 06

கொலன்னாவை தாக்குதல்;

## சபையில் நேற்றும் கடும் அமளிதுமளி

4ஆம் திகதி வரை நாடாளுமன்றம் ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூலை 29

கொலன்னாவை எரிபொருள் களஞ்சிய சாலை வளாகத்துக்குள் குண்டர்குழு களமிறங்கித் தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பில் சபையில் நேற்றும் கடும் அமளிதுமளி ஏற்பட்டதால் நாடாளுமன்றம் எதிர்வரும் 4 ஆம் திகதிவரை ஒத்தி >> 25

## உடன்பாட்டைச் செயற்படுத்த ஒருபோதும் இடமளியோம்

அரசுக்கு ஜே.வி.பி. எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 29

அம்பாந்தோட்டை துறைமுகத்தைச் சீனாவின் மேர்ச்சன்ட்ஸ் ஹோல்டிங்ஸ் நிறுவனத்துக்குக் குத்தகைக்கு வழங்கும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டாலும் அதை நாட்டினுள் நடைமுறைப்படுத்துவதற்கு இடமளிக்கமாட்டோம் என்றும், அந்தத் திட்டத்துக்கு எதிராகக் கடுமையாக நடவடிக்கைகளை எடுக்கப்போவதாகவும் ஜே.வி.பி. அறிவித்தது.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அந்தக் கட்சியின் தலைவரான அநுரகுமார திஸாநாயக்க இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் >> 24



விரிவு பக். 02

## இந்திய மீனவர்கள் 77 பேர் விடுதலை

படகுகளுக்குத் தடை நீடிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 29

இலங்கைச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 77 இந்திய மீனவர்கள் சட்டமா அதிபர் திணைக்கள அறிவுறுத்தலுக்கு அமைய விடுதலை செய்யப்பட்டனர்.

ஊர்காவற்றுறை, பருத்தித்துறை, மன்னார் ஆகிய நீதிமன்றங்களுக்குச் சட்டமா அதிபர் திணைக்களம் அறிவுறுத்தியதற்கு அமைய அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

அதன்படி ஊர்காவற்றுறை நீதி >> 25

## நாடாளுமன்றக் குழு கூட்டத்தை நேற்று தவிர்த்த சித்தார்த்தன்

யாழ்ப்பாணம், ஜூலை 29

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நேற்றுநடைபெற்றது அதில் புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன் பங்கேற்கவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் >> 25

## செங்கோல் இன்றி நேற்று இயங்கியது நாடாளுமன்று

சபாநாயகரையும் நியமித்து மகிந்த அணி அட்டகாசம்

கொழும்பு, ஜூலை 29

நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்ட பின்னர், செங்கோல் இன்றிச் சபைஅமர்வை நடத்திய மகிந்த அணி, சபாநாயகர் ஒருவரை நியமித்து, உரையும் நிகழ்த்திய விசித்திரச் சம்பவமொன்று நேற்று நடைபெற்றது.

நாடாளுமன்றம் நேற்றுப் முற்பகல் 10.30 மணிக்குச் சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் கூடியது.

தினப்பணிகள் முடிவடைந்த பின்னர் அத்தியாவசியப் பொதுச்சேவைகள் சட்டத்தின்கீழ், எரிபொருள் வழங்கல் மற்றும் விநியோகம் ஆகியவற்றை அத்தியாவசிய சேவை >> 23

## மீண்டும் ஈ.பி.ஆர்.எல்.எவ்வுக்கே சுழற்சிமுறை நியமன ஆசனமா?

கொதிப்புடன் சம்பந்தனுக்கு சித்தார்த்தன் கடிதம்

யாழ்ப்பாணம்,ஜூலை 29

வடக்குமாகாண சபையின்சுழற்சி முறையிலான நியமன ஆசனத்தை ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சிக்கு இரண்டாவது தடவையாக வழங்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கையைக் கைவிடுமாறு, புளொட் தலைவர் த.சித்தார்த்தன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்குச் சீற்றத்துடன் கடிதம் எழுதியுள்ளார். >> 24

## மாந்தைப் புதைகுழி வழக்கை விசாரிக்கும் நீதிவானுக்கு எதிராக சி.ஐ.டி. முறைப்பாடு

மன்னார், ஜூலை 29

மன்னார் மாந்தைப் புதைகுழி வழக்கில் மன்னார் நீதிமன்றின் தற்போதைய நீதிவானும், முன்னர் பணியாற்றிய நீதிவானும் பக்கச் சார்பாகச் செயற்பட்டுள்ளனர் என்று குற்றஞ்சாட்டி, கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிச் சேவைகள் ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர்.

மன்னார் மாந்தைப் புதை >> 24




நல்லூர் கந்தன்
அழகைக் காண
கண் ஆயிரம் வேண்டுமே

நல்லூர் கந்தன்
உற்சவக் காட்சிகள்
தினமும்

newuthayan.com இல்

## காரைநகர் கடற்கரையில் சடலம் மீட்பு

காரைநகர், ஜூலை 29
காரைநகர் கடற்கரையில் ஆணொருவரின் சடலம் நேற்று கரையொதுங்கியுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். நேற்று முற்பகல் 11 மணியளவில் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. 30 தொடக்கம் 40 வயதுடைய ஒருவரின் சடலமே கரையொதுங்கியது. அவர் உயிரிழந்து 2 அல்லது 3 நாள்கள் கடந்திருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

# இலங்கைக்கு கொரியா மனிதாபிமான உதவி

கொழும்பு, ஜூலை 29
இலங்கையின் வறட்சி நிவாரணப் பணிகளுக்கு தென் கொரியா மனிதாபிமான உதவிகளை வழங்கியது. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை தென் கொரிய நாடாளுமன்றத் தூதுக்குழுவினர் அரசதலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று சந்தித்தனர். இதன் போது எட்டுதண்ணீர் பவுசர்கள் உள்ளிட்ட நிவாரணப் பொருள்களை குழு வினர் கையளித்தனர்.

கொரியநாடாளுமன்றதூதுக்குழுவின் தலைவர்களான கொரியதேசியபேரவையின் மூத்த உறுப்பினர்கள் பவுசர்களை திறப்புகளை அரச தலைவரிடம்கையளித்தனர் என்று அரசதலைவர் ஊடகப் பிரிவு தெரிவித்தது. வறட்சியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ முன் வந்தமைக்காக தென்கொரிய அரசுக்கும், மக்களுக்கும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நன்றி தெரிவித்தார்.

"நாட்டில் சுமார் மூன்றில் இரண்டு பகுதி வறட்சியால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. கொரிய அரசால் அன்பளிப்புச் செய்யப்பட்ட இந்த பவுசர்கள் மிகவும் பயனுடையதாகும். இந்த பவுசர்கள் வறட்சியால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணம், கிளிநொச்சி, அநுராதபுரம், பொலன்னறுவை மற்றும் திருகோணமலை மாவட்டங்களுக்கு உடனடியாக அனுப்பி வைக்கப்படும்" என்று அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார். (ஐ-10)



## சாரணர் சங்கத் தலைமை ஆணையாளர் பதவியேற்பு

கொழும்பு, ஜூலை 29
இலங்கை சாரணர் சங்கத்தின் 19 ஆவது தலைமை ஆணையாளராக மெரில்ஜி ஏ குணதிலக தெரிவு செய்யப்பட்டுள்ளார். அவர் கொழும்பில் அமைந்துள்ள தேசிய சாரண தலைமையகத்தில் நேற்று தனது பதவியை உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொண்டார். இலங்கையின் தலைமை சாரணரான, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் இந்தப் பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளது. நிகழ்வில் அமைச்சர் விஜயதாச ராஜபக்ச, ரஞ்சித் சியம்பலாபிட்டிய, பாட்டலி சம்பிக்க ரணவக்க, அஜித் பெரேரா, பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர உட்பட முப்படை அதிகாரிகள் கலந்துகொண்டனர். (ஐ)

# பண்டாரநாயக்க மண்டபத்தில் சமையல் கண்காட்சி ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 29
சிறந்த சமையல் கலைஞர்களின் திறமையை வெளிக்காட்டும் சமையல் கண்காட்சி மற்றும் போட்டி கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில், அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவால் நேற்று ஆரம்பிக்கப்பட்டது. இலங்கை சமையல் கலைஞர்கள் சங்கத்தால் 17 ஆவது முறையாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தக் கண்காட்சி எதிர்வரும் 30 ஆம் திகதி வரை நடைபெறும் என்று அரசதலைவர் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

நாடாளவிய ரீதியில் உள்ள ஆயிரத்து 800க்கும் மேற்பட்ட சமையல்கலைஞர்கள் இந்த உணவு தயாரிப்புப் போட்டியில் பங்குபற்றுகின்றனர். உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நடுவர்களால் வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படுவர். (ஐ-10)






## கணவனால் தாக்கப்பட்ட பெண் அயலவர்களால் மீட்பு

தென்மராட்சி, ஜூலை 29
மிருசுவில் விடத்தற்பளைப் பகுதியில் மனைவியைக்கட்டிவைத்து இரவிரவாகத்தாக்கியுள்ளார் கணவர். அந்தப் பெண்ணை அயலவர்கள் மீட்டு நேற்று அதிகாலை சாவகச்சேரி மருத்துவனையில் சேர்ப்பித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது. கணவனால் தாக்கப்பட்ட மனைவி காயங்களுடன் மரத்தில் கட்டப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டார். அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்போதனா மருத்துவமனைக்குமாற்றப்பட்டுள்ளார். சம்பவம்தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். என்றறம் தெரிவிக்கப்பட்டது. (ஐ)





வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்தப் பெருவிழா நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. இதில் பெருந்திரளான பக்தர்கள் கலந்து கொண்டு தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினர். தொடர்ந்து இடம்பெறும் திருவிழாக்களில் எதிர்வரும் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ஐ)

## புதுக்குடியிருப்பில் அன்னாசி அறுவடை விழா

முல்லைத்தீவு, ஜூலை 29
முல்லைத்தீவு மாவட்டத்தின் அன்னாசி அறுவடை வயல் விழா புதுக்குடியிருப்பு திம்பிலிப் பகுதியில் நேற்று நடைபெற்றது. நிகழ்வில் அன்னாசிச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் அறுவடை செய்த அன்னாசிகளை அதிகாரிகளுக்குக் காண்பித்தனர். "விசாயிகளுக்கு சிறந்த வருமானத்தை ஈட்டிக் கொடுக்கும்



திட்டங்களில் இதுவும் ஒன்று. இந்தத் திட்டத்தினூடாக பல விவசாயிகள் நன்மையடைந்துள்ளனர். ஊக்கமடைந்துள்ளனர்" என்று பிரதி விவாசாய பணிப்பாளர் பெ.அற்புதச்செல்வன் தெரிவித்தார். இந்த நிகழ்வில் மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் பெ.அற்புதச்செல்வன், வட மாகாண பணிப்பாளர் சி.சிவகுமார் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் எம்.பிரதீபன் ஆகியோருடன் பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர்.
(ஐ-10)



# இரணைமடுக் குளத்தின் முதன்மை வாய்க்கால் விவசாயிகளால் சீரமைப்பு

### நிதி ஒதுக்கீடு கிடைக்காததால் களத்தில் இறங்கினர்

கிளிநொச்சி, ஜூலை 29
கிளிநொச்சி இரணைமடு குளத்தின் நீர்மட்டம் குறைவடைந்துள்ளதால், குளத்தின் முதன்மை வாய்க்காலை ஆழப்படுத்தும் பணியை மாவட்ட விவசாயிகள் நேற்று ஆரம்பித்தனர். உழவு இயந்திரங்களைப் பயன்படுத்தி விவசாயிகள் வாய்க்காலை ஆழப்படுத்தி வருகின்றனர். இந்தமுறை சிறுபோகச் செய்கை மட்டுப்படுத்தப்பட்டு இரணைமடுக் குளத்தின் கீழ் 800 ஏக்கர் செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த நிலையில் குளத்தின் நீர்மட்டம் வெகுவாகக்



குறைவடைந்துள்ளது. அதனால் பயிர்செய்கை நிலங்களுக்கு நீர் வழங்குவதற்கு விவசாயிகள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். பயிர்ச் செய்கைகள் நீர் இல்லாமல் அழிவடையும் நிலையையும் எதிர்கொண்டுள்ளன. அதனால் இரணைமடுத் திட்ட விவசாயிகள் இணைந்து குளத்தின் முதன்மை வாய்க்காலை ஆழப்படுத்தும் நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர். "இந்த வாய்க்காலை ஆழமாக்கும் பணியில் விசாயிகளும் மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களமும் ஈடுபட்டுள்ளது. இதற்கென அரசு நிதி ஒதுக்கவில்லை. ஆழமாக்கும் பணியில் விவசாயிகள் முழுமூச்சுடன் ஈடுபட்டுள்ளனர். விவசாயச்செய்கையைப் பாதுகாப்பதற்கு இந்த அவசர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது" என்று இரணைமடு விவசாய சம்மேளனத்தை சேர்ந்த மு.சிவமோகன் தெரிவித்தார்.
(ஐ-4,6,35)

## தமிழர்கள் என்பதாலா எமக்குப் பொருத்து வீடு

### சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. கேள்வி

மன்னார், ஜூலை 29
வடக்கு மாகாணத்தில் சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களுக்கு வழங்கப்படுகின்ற வீடுகள் கல் வீடுகளாகக் காணப்படுகின்றன. ஆனால் தமிழ் மக்களுக்கு மட்டும் ஏன் பொருத்து வீடுகளை வழங்க முயற்சிக்கின்றீர்கள்.

இவ்வாறு தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் கேள்வி எழுப்பினார்.

பொருத்து வீட்டுத்திட்டம் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும் ஊடகச் சந்திப்பு நேற்றுக் காலை மன்னாரில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினரின் அலுவலகத்தில் இடம் பெற்றது.

அதில் அவர் தெரிவித்ததாவது, வடக்கு மக்களின்



மீள் குடியமர்வு தொடர்பாக பல சர்ச்சைகள் இடம் பெற்று வருகின்றன. மீள் குடியமர்வுக்கு வழங்கப்படுகின்ற வீட்டுத்திட்டத்தில் 6 ஆயிரம் வீடுகளை பொருத்து வீடுகளாக அமைத்துக் கொடுப்பதற்கு மீள் குடியேற்ற அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

நாட்டில் பல இடங்களில் வீட்டுத்திட்டங்கள் நடைமுறையில் இருக்கின்றன. தென் பகுதியில் மக்களுக்கு வழங்கப்படுகின்ற வீடுகள் நிரந்தர கல் வீடுகளாகக் காணப்படுகின்றன. வடக்கில் சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களுக்கு வழங்கப்படுகின்ற வீடுகள் கல் வீடுகளாக உள்ளன அப்படியான சூழ்நிலையில் தமிழ் மக்களுக்கு மட்டும் ஏன் பொருத்து வீடுகள் வழங்குகின்றீர்கள்? அவர்கள் இந்த நாட்டின் நிரந்தரக் குடியிருப்பாளர்கள் இல்லையா? அமைச்சர் சுவாமிநாதன், அமைச்சர் றிசாத் பதியுதீன், நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் பொருத்து வீட்டுத்திட்டம் தொடர்பாக மிகவும் ஆர்வமாக இருக்கின்றனர்.

தமிழ் மக்களுக்கு வடக்கில் வழங்கப்படுகின்ற இந்தப் பொருத்து வீடுகளை ஏன் நீங்கள் சிங்கள மக்களுக்கோ அல்லது முஸ்லிம் மக்களுக்கோ வழங்குவதற்கு முயற்சி செய்யவில்லை.

ஏன் என்றால் அவர்களுக்குத் தெரியும் குறித்த பொருத்து வீடுகள் நிரந்தரமான வீடுகள் இல்லை என்று. அந்த வீடுகளைத் தங்களுடைய மக்களுக்கு கொண்டு செல்வதற்கு அவர்கள் விரும்பவில்லை. இந்த நடவடிக்கைகளை நான் வன்மையாக கண்டிக்கின்றேன்.

அனைத்து மக்களும் இலங்கையில் சமத்துவமாக வாழ்வதற்கு இப்படியான பாரபட்ச அபிவிருத்திகள் எங்களுடைய மக்களுக்கு வேதனையளிக்கின்றது. அவர்களுக்கு நீங்கள் கட்சி ரீதியாக வீடுகள் வழங்கினாலும் நிரந்தரக் கல் வீடுகளை வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றேன்.- என்றார்.
(ஐ-10, 56)

## வாழைச்சேனை கடதாசி ஆலை விரைவில் மறுசீரமைக்கப்படும்

### ஆலை அதிகாரிகளிடம் கிழக்கு ஆளுநர் உறுதி



வாழைச்சேனை, ஜூலை 29
வாழைச்சேனை கடதாசி ஆலை விரைவில் மறு சீரமைக்கப்படும். மக்களுக்கு நன்மை தரும் வகையில் கிழக்கு மாகாண சபையின் ஊடாக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று கிழக்கு மாகாண ஆளுநர் றோஹித போகொல்லாகம உறுதியளித்தார்.

கிழக்கு மாகாண ஆளுநர் வாழைச்சேனை கடதாசி ஆலையை நேற்று நேரில் சென்று பார்வையிட்டார். கடதாசி ஆலையின் நிர்வாகத்தினருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார். கடதாசி ஆலையின் அபிவிருத்திகள் தொடர்பாக பல விடயங்கள் கலந்து ஆலோசிக்கப்பட்டன.

"கடதாசி ஆலையின் அபிவிருத்திக்காக நானும், கிழக்கு மாகாண முதலமைச்சரும், மாகாண சபை உறுப்பினர்களும் இணைந்து செயற்படுவோம். இதன் மூலமாக பல வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ள முடியும" என்று ஆளுநர் தெரிவித்தார். ஆளுநரின் செயலாளர் கடதாசி ஆலை உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.
(ஐ-10)

## செயற்கை முறை வாழ்க்கையால் மனித ஆரோக்கியத்துக்குக் கேடு

### வடக்கு முதலமைச்சர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 29
இயற்கை முறையிலான வாழ்க்கையை மறந்து, செயற்கையின் பிடிக்குள் சிக்கி எமது ஆரோக்கியத்தைத் தொலைத்து விட்டோம். இதனால் எதிர்காலத்தில் பல்வேறு உடல் ரீதியான உபாதைகளைச் சந்திக்க நேரிடும் . இவ்வாறு வடக்கு மாகாண முதல மைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண பனை அபிவிருத்திக் கண்காட்சி நல்லூர் சங்கிலியன் பூங்காவில் நேற்று ஆரம்பிக்கப்பட்டது. நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:
பனைசார் மூலப் பொருள்களில் இருந்து பல்வேறு விதமான பொருள்களை தயாரிக்கலாம். பனையுடன் சார்ந்த உற்பத்தி பொருள்கள் எமது வாழ்வுன் பின்னிப் பிணைந்து முக்கியத்துவம் பெறுகின்றன. பனம்பழ உணவுகள் உடலுக்கு எந்தவிதக் கெடுதல்களையும் விளைவிக்காது. அந்தக் கால மக்களுக்கு விஞ்ஞான ரீதியான உணவு பதப்படுத்தும் முறைகள் தெரிந்திராத போதும், உணவைக் கெட்டுப் போகாமல் சுத்தமுடன் பாதுகாக்கின்ற உணவுப் பாதுகாப்பு முறை தெரிந்திருந்தது. அதனால்தான் எமது மக்கள் நோய் நொடியற்ற தேக ஆரோக்கியத்துடன் நீண்ட காலம் வாழமுடிந்தது. இன்று அந்த நிலை தலை கீழாக மாறிவிட்டது.

அவசர உலகில் உணவுகளும் அவசர அவசரமாகத் தயாரிக்கப்படுகின்றன. 40 வயதிலேயே நீரிழிவு நோய், உயர் குருதி அமுக்கம், கொலஸ்ரோல் என்ற தொற்றா வருத்தங்கள் எம்மைத் தொற்றிக் கொண்டுள்ளன. பொலித்தீன் பைகள், பொலித்தீன் சம்பந்தப்பட்ட பொருள்கள் ஆகியவற்றைப் பிரதியீடு செய்வதற்கு ஏற்ற தயாரிப்புக்கள், விரைந்து உற்பத்தி செய்யப்படல் வேண்டும். - என்றார்.
(ஐ-10)

## காட்டு யானை தாக்கி குடும்பத் தலைவர் சாவு

மட்டக்களப்பு, ஜூலை 29
மட்டக்களப்பு மாவட்டம் வெல்லாவெளியில் குடும்பத் தலைவர் ஒருவர் காட்டுயானை தாக்கி உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது. 5 பிள்ளைகளின் தந்தையான 50 வயதுடைய நாகமணி இராசதுரை என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

38 ஆம் கிராமத்தில் கால்நடைகளை மேய்ப்பதற்காக அவர் சென்றுள்ளார். அருகிலிருந்த பற்றைக் காட்டுக்குள் மறைந்து நின்ற காட்டு யானை அவரைத் தாக்கியது. அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்று கூறப்பட்டது. பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஐ-10, 46)



# இனியும் எம்மை ஏமாற்றாதீர்கள்

## கேப்பாப்பிலவு மக்கள் குமுறல்

முல்லைத்தீவு, ஜூலை 29

"எமது சொந்த நிலத்தை மீட்பதற்காக ஐந்துமாதங்கள்தொடர்ச்சியாகவீதியில்இருந்தது போதும். இனியும் எங்களை ஏமாற்றாமல் தமிழ் அரசியல் தலைமைகள் எமக்குத் தீர்க்கமான முடிவைப் பெற்றுத்தரவேண்டும். அந்தநம்பிக்கையுடன் காத்திருக்கிறோம். இவ்வாறு கேப்பாபுலவு இராணுவத்தலைமையகத்துக்கு முன்பாகக்கூடாரம்அமைத்துபோராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவித்தனர்.

அவர்கள் தெரிவித்ததாவது,

"மீள்குடியேற்ற அமைச்சர் கூறியதால் எமது சொந்த நிலங்கள் விடுவிக்கப்படும் என்ற ஆவலுடன்கடந்த 26ஆம்திகதி கொழும்புக்குச் சென்றோம். ஆனால் இராணுவம் எமது காணிகளை விடுவிக்க பெருந்தொகை பணத்தையும் காலஅவகாசத்தையும் கேட்கின்றது. எமது காணிகளை விடுவிக்க ஏன் கால அவகாசம் ? மே மாத நடுப்பகுதியில் விடுவிக்கப்படும்என்றுசொல்லப் பட்டகாலஅவகாசகத்துக்குள்ளன நடந்தது?

நாம் தொடர்ந்தும் ஏமாற்றப்படுகின்றோம். பலமுறை பல காரணங்களைக் கூறி எம்மை இந்த வீதியில் தொடர்ந்தும் இருக்க வைக்கவே எல்லோரும் விரும்புகின்றனர்.

இன்றுடன் ஐந்து மாதங்களைத் தாண்டி நாம் போராடி வருகின்றோம். இந்த வீதியில் கொளுத்தும் வெயிலுக்கு மத்தியில் பல இன்னல்களுக்கு முகம்கொடுத்தபடி வாழ்கின்றோம். சிறுவர்கள், குழந்தை, முதியவர்கள்எனநாம் படும் அவலத்தை அறியாதது போல அனைவரும் இருக்கின்றார்கள். மாதக்கணக்கில்வீதியில் இருப்பதால்எமதுபிள்ளைகளும் கல்வியில் பின்னடைவை எதிர்நோக்கவேண்டியநிலைஉருவாகியுள்ளது. தற்போது தவணைப் பரீட்சைகள் நடைபெற்றுவரும் நிலையில் இந்த வீதியில் இருந்தபடி இப்படி எமது பிள்ளைகளைக் கல்வியில் முன்னேற்றம் பெற வைக்க முடியும். 10 நாள்களுக்கு நல்லமுடிவைப்பெற்றுதருவதாக எதிர்க்கட்சி தலைவர் சம்பந்தன் ஐயா கூறியுள்ளார். அதுவரை நாம்பொறுமையாகஎமதுசொந்த நிலம் செல்லும் ஆவலுடன் இருக்கின்றோம்.

இந்த முறையும் எம்மை ஏமாற்ற நினைக்க வேண்டாம்" என்றானர்.

138 குடும்பங்களுக்குச் சொந்தமான 482 ஏக்கர் காணிகளை விடுவிக்கு மாறு வலியுறுத்தி அந்தப் பகுதி மக்கள் தொடர் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ-10)




தீவகம் வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. (ஐ)

## ஆழ்கடல் கண்காணிப்பு ரோந்துக் கப்பல் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தது

கொழும்பு, ஜூலை 29

இந்தியாவின் கோவா கப்பல் கட்டும் நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட தொழில்நுட்ப ஆழ்கடல் கண்காணிப்பு ரோந்து கப்பல் நேற்றுமுற்பகல்09.30மணிக்கு கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது. இலங்கைக் கடற்படையின்நடவடிக்கைகளைவிரிவாக்கும் நோக்குடன் உருவாக்கப்பட்ட கப்பலை இலங்கைக் கடற்படையினர் வரவேற்றனர்.



நவீன போர்க்கப்பலான இந்தக் கப்பல் இலங்கைக்கடற்படைவரலாற்றில் புதிதாக வாங்கப்பட்ட முதல் கப்பலாகும. கப்பலைத் தயாரிப்பதற்கு சுமார் 66.55 மில்லியன் அமெரிக்க டொலர் செலவிடப்பட்டது என்று தெரிவிக்கப் பட்டது.

இந்த நிகழ்வில் கடற்படை பணிப்பாளர் ரியர் அட்மிரல் பியல் த சில்வா, மேற்குக் கடற்படை கட்டளையின் தளபதி ரியர் அட்மிரல் நிராஜ் ஆடிகல கொடி அதிகாரி, கடற்படை கட்டளை ரியர் அட்மிரல் கபில சமரவீர , மின் மற்றும் மின்னணுபொறியியல்பணிப்பாளர்ரியர்அட்மிரல் உபுல்ஏக்கநாயக்க ஆகிய மூத்த அதிகாரிகள் உட்பட கடற்படைத் தலைமையகம் மற்றும் மேற்கு கடற்படைக் கட்டளைப்பிளமின் பல அதிகாரிகள்கலந்துகொண்டனர். (ஐ-10)

## உயிருடன் மீட்கப்பட்டது சிறு முதலை

ஏறாவூர், ஜூலை 29

ஏறாவூர் - மாவடி வீதியில் சுமார் 3 அடி நீளமான சிறிய முதலை மின் கம்பத்தில் கட்டப்பட்டிருந்த நிலையில் நேற்றுக்காலைஉயிருடன்மீட்கப்பட்டது.

அந்தப் பகுதியில் முதலையொன்று அநாதரவாகக் கட்டப்பட்டு இருந்தமை தொடர்பாகப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது. அதனையடுத்துபொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று முதலையை மீட்டனர். மீட்கப்பட்ட முதலை மட்டக்களப்பு வனஜீவராசிகள்திணைக்கள அதிகாரிகளால் பாதுகாப்பாக எடுத்துச் செல்லப்பட்டது. (ஐ-10)

## 40வயது வரையான பட்டதாரிகள்மட்டுமே ஆசிரியர்சேவைக்கு

மட்டக்களப்பு, ஜூலை 29

40வயதுவரையானபட்டதாரிகளை மட்டுமே, ஆசிரியர் சேவையில் இணைத்துக் கொள்வதற்குநடவடிக்கைஎடுக்குமாறு கிழக்கு மாகாண ஆளுநர் அறிவித்துள்ளார் என்று கிழக்கு மாகாணசபை உறுப்பினர் இரா. துரைரெட்ணம் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது, வேலையற்ற பட்டதாரிகளை ஆசிரிய சேவையில் இணைத்துக் கொள்வதற்காக கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவால் விரைவில் போட்டிப்பரீட்சை நடத்தப்படும். அதன்பின்னர்நியமனம் வழங்கப்படும்.

40வயதுவரையான பட்டதாரிகள்மட்டுமேதெரிவு செய்யப்படுவர். பொதுச் சேவை ஆணைக்குழு, கல்வி அமைச்சுக்கு இதனை அறிவித்துள்ளது. அதனால் கிழக்கு மாகாணத்தில் உள்ள 40க்கும் 45 வயதுக்கும் இடைப்பட்ட 70க்கும் மேற்பட்ட பட்டதாரிகள் பாதிப்பை எதிர்கொள்ள வேண்டிஏற்படும். கிழக்கு மாகாணவேலைதேடும் பட்டதாரிகளும் அரசநியமனஎல்லையை45ஆக உயர்த்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர். அவர்களது கோரிக்கையும்நியாயமானது. அதற்கேற்ற வகையில் 45வயது வரை வயதெல்லையைஅதிகரித்து, ஆசிரியர் நியமனம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இது தொடர்பில் கிழக்குமுதலமைச்சரும், கல்வி அமைச்சரும் விரைந்து செயற்பட வேண்டும். - என்றார். (ஐ-10)

## கடமைகளைப் பொறுப்பேற்றார் வடமராட்சிக் கல்விப் பணிப்பாளர்

வடமராட்சி, ஜூலை 29

வடமராட்சிக்கல்விவலயத்தின் புதிய கல்விப்பணிப்பாளராக சிவபாதம் நந்தகுமார் நேற்று உத்தியோகபூர்வமாகத் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார். வடமராட்சிகல்விஅலுவலகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் அலுவலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். வடமாகாண கல்வி அமைச்சால்அவருக்கானநியமனக்கடிதம்வழங்கப்பட்டிருந்தது. வடமராட்சிக் கல்விப்பணிப்பாளர் சி. புஸ்பலிங்கம் ஓய்வு



பெற்றார். அதனையடுத்து பணிப்பாளர் பதவிக்கான வெற்றிடத்துக்கு நந்தகுமார் நியமிக்கப்பட்டார். (ஐ,26)

## வடக்குப் பெண்கள் எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பில் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 29

போருக்குப்பின்னரானசூழலில்வடபகுதிப்பெண்கள் எதிர்நோக்கும் சவால்கள் என்ற தலைப்பில் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நேற்று கருத்தரங்கு நடைபெற்றது. யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தால் இந்தக் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

இணையத்தின்தலைவர்தே.தேவானந்ததலைமையில்நடைபெற்றகருத்தரங்கில்நாடாளுமன்ற உறுப்



பினர் எம்.ஏ.சுமந்திரன் வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொண்டு உரையாற்றினர்.

பேராசிரியர்தயா.சோமசுந்தரம், வாசுகிஜெய்சங்கர், கலாநிதிஎஸ்.ஜீவசுதன்மற்றும்உதயனிநவரட்ணம் மற்றும் பொன்னம்பலம் ஜமுனாதேவி ஆகியோர் கலந்துகொண்டுபோருக்குப்பின்பெண்களின்நிலை தொடர்பாகவும் அவர்களின் முன்னேற்றத்தை எவ்வாறு மேற்கொள்ளலாம் என்பது தொடர்பாக கருத்துக்களை வழங்கினர்.

கருத்தரங்கில் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த மகளிர் அமைப்புக்களின் பிரதிநிதிகளும், போரால் பாதிப்புக்களை எதிர்நோக்கிய பெண்களும் கலந்து கொண்டனர். (ற)

## அனைத்துப் பாடசாலைகளிலும் சிரமதானம் முன்னெடுப்பு

கொழும்பு, ஜூலை 29

நாடளாவிய ரீதியில் பாடசாலை மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும் டெங்கு ஒழிப்பு சிரமதான நடவடிக்கைகள் அனைத்துப்பாடசாலைகளிலும் நேற்று ஆரம்பிக்கப்பட்டன.

நாட்டில் வேகமாகப் பரவிவரும் டெங்குத் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் ஆகியோருடன் இணைந்து முப்படையினரும் சிரமதான நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். கல்வி அமைச்சால் விடுக்கப்பட்ட அறிவித்தலுக்கு அமைவாக இவை முன்னெடுக்கப்பட்டன. பாடசாலை வளாகம், கால்வாய் உட்பட்ட பல பகுதிகளில் சிரமதானப் பணிகளை மாணவர்கள், ஆசிரியர்கள் இணைந்து முன்னெடுத்தனர். சில பாடசாலைகளில் புகை விசிறும் நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டன. சிரமதானப் பணிகள் இன்றும் நாளையும் முன்னெடுக்கப்படவுள்ளன. (ஐ-10)



# இலவச பயிற்சி நெறிக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஜூலை 29
தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் கீழ் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பத்தில் சான்றிதழை பெறுவதற்கான இலவசப் பயிற்சி நெறிக்கு யாழ்ப்பாணம், மானிப்பாய் பயிற்சி நிலையங்களுக்கும், கணிணி வன்பொருள் தொழில்நுட்பவியலாளர் பயிற்சி நெறியில் தேசிய தொழில் தகைமைச் சான்றிதழைப் பெறுவதற்கு யாழ்ப்பாணம் பயிற்சி நிலையத்துக்கும் விண்ணபங்கள் கோரப்பட்டுள்ளன.

தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பத்தில் சான்றிதழை பெறுவதற்கு கல்வித் தகைமையாக க.பொ.த சாதாரண தரத்தில் கணிதம் சி, ஆங்கிலம் சி, உள்ளடங்கலாக 6 பாடங்களிலும் அல்லது கணிதம் எஸ், ஆங்கிலம் எஸ், உள்ளடங்களாக 6 பாடங்களில் சித்தியும் க.பொ.த உயர்தரத்தில் இரண்டு பாடங்களில் சித்தி பெற்றிருத்தலும் வேண்டும். விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுத் திகதியன்று 25 வயதுக்கு உட்பட்டவராக இருக்கவேண்டும். கணிணி வன்பொருள் தொழில்நுட்பவியலாளர் பயிற்சி நெறியில் தேசிய தொழில் தகைமைச் சான்றிதழைப் பெறுவதற்கு கல்வித்தகைமையாக க.பொ.த சாதாரண தரம் வரை கற்றிருத்தல் வேண்டும். விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுத் திகதியன்று 16 தொடக்கம் 25 வயதுக்கு உட்பட்டவராக இருக்க வேண்டும்.

தகுதி உடையவர்கள் முழுப் பெயர், முகவரி, பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித்தகைமைகள், தொலைபேசி இலக்கம், என்பவற்றைக் குறிப்பிட்டுச் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை மாவட்ட முகாமையாளர் நைற்றா, இல 44 சோமசுந்தரம் வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். அத்துடன் காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் கணணி வன்பொருள் கற்கை நெறிக்கான விண்ணப்பம் எனத் தவறாது குறிப்பிடப்பட வேண்டும். என யாழ்ப்பாண மாவட்ட அலுவலர் கி.கிருஷ்ண பாலன் தெரிவித்துள்ளார். (21)

# குழாய்நீரைச் சிக்கனமாக்க சென்சர் முறை அறிமுகம்

## வடக்கில் உள்ள பாடசாலைகளில் விரைவில் அறிமுகமாகவுள்ளன

யாழ்ப்பாணம், ஜூலை 29
குழாய் மூலமான தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தக் கூடியதாக சென்சர் முறையிலான குழாய் மாதிரி அமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதனை முதற்கட்டமாக வடக்கு மாகாணத்தில் உள்ள 50 பாடசாலைகளுக்குப் பொருத்தத் தீர்மானித்துள்ளதாக மாகாணக் கல்வித் திணைக்களம் தெரிவித்தது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மொரட்டுவப் பல்கலைக் கழகத்தில் பயிலும் மாணவர்கள் இவற்றை உருவாக்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

வடக்கு மாகாணத்தில் தற்போது நிலவும் வறட்சியான கால நிலையால் குழாய் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தக்கூடியவாறு சென்சர் முறையில் அவை அமைக்கப்படுகின்றன.

யாழ்ப்பாணப் பிரதேசத்தைச் சேர்ந்த மாணவர்கள் இந்தக் குழாய் மாதிரி அமைப்பை வடிவமைத்துள்ளனர். இதற்கான அறிமுகநிகழ்வு வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்றது.

இந்தத் திட்டம் பயனளிக்கக் கூடிய வகையில் அமையும் என்ற நோக்கில், முதற்கட்டமாக மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாகவுள்ள 50 பாடசாலைகளில் பொருத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று கல்வித் திணைக்களத்தினர் மேலும் தெரிவித்தனர். (4,ரி)

# மாணிக்க வாசகர் குருபூசை நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 29
மாணிக்க வாசகர் சுவாமிகள் குருபூசை நிகழ்வுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு யாழ்ப்பாணம், ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயத்தில் வித்தியாலய பிராத்தனை மண்டபத்தில் இடம்பெற உள்ளதாக அதிபர் எஸ்.சத்தியவரதன் அறிவித்துள்ளார். செல்வன் பா.சிவராம் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற உள்ளதாக அவர் மேலும் அறிவித்துள்ளார். (21)

# பொதுக்கூட்டம்

தென்மராட்சி, ஜூலை 29
தென்மராட்சி பிரதேச கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச்சங்கங்கப் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப 2 மணிக்கு தென்மராட்சி பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறும்.

சங்கத்தலைவர் செ.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் கூட்டத்துக்கு தலைமை விருந்தினராக தென்மராட்சி உதவிப் பிரதேச செயலர் செல்வி ரஞ்சனா நவரத்தினமும் சிறப்புவிருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட உதவி கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பொ.மோகனும் கலந்து கொள்வர் என அறிவிக்கப்பட்டது. (21,9)

++++++++++ +++++++++++

யாழ்ப்பாணம், ஜூலை 29
யாழ்ப்பாணம் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியின் பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கல்லூரியின் முதன்மை மண்டபத்தில் நடைபெறும் என்று கல்லூரியின் அதிபர் ரி.வரதன் தெரிவித்தார்.

பழைய மாணவர்களைத் தவறாது கலந்து கொண்டு புதிய நிர்வாகத் தெரிவிற்கும், பாடசாலையின் எதிர்கால அபிவிருத்தித்திற்கும் ஆலோசனைகளை வழங்கி உதவுமாறும் அவர் மேலும் தெரிவித்தார். (21-ரி)

# அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம்,ஜூலை 29
வடவரணி அருள்மிகு கூளாநின்ற புல முருகமூர்த்தி ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது. என்று அறிவிக்கப்பட்டது. (21,12)

# பெயர் பட்டியலை பார்வையிடலாம்

யாழ்ப்பாணம், ஜூலை 29
தென்மராட்சி பிரதேசத்தில் மீளாய்வு செய்யப்பட்ட சமுர்திபயனாளிகளின்பட்டியல் இன்று காட்சிப்படுத்தப்படவுள்ளது.

பிரதேச செயலகத்தின் சமுர்தி அபிவிருத்தி அலுவர் பிரிவுகளிலும், பிரிவு கிராம அலுவர் அலுவலகங்களிலும் பெயர்பட்டியல் காட்சிப்படுத்தப்படும் என பிரதேச செயலர் தே.பாபு அறிவித்தார். மீளாய்வின் போது பயனாளிகள் தெரிவில் பெயர் நீர்க்கப்பட்டவர்கள், இணைக்கப்படாதவர்கள் எதிர்வரும் 15 தினங்களில் எழுத்துமூலம் அறிவிக்குமாறு அவர் கேட்டுகொண்டார். (21,9)

# 80ஆம் ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 29
தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியில் சாரணர் அமைப்பு உருவாக்கப்பட்டு 80 ஆவது ஆண்டு நிறைவையொட்டிய நிகழ்வுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வுகளில் கல்லூரியின் பழைய சாரணர்கள் மற்றும் தற்போதைய சாரணர்கள் ஆசிரியர்கள் ஆகியோரைக் கலந்து கொள்ளுமாறு கல்லூரிச் சாரண ஆசிரியை அறிவித்துள்ளார். (21,9)

# விபத்தில் இருவர் காயம்

ஹயேஸ் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானது. மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் காயமடைந்தனர். வரணி பகுதியில் நேற்று மாலை விபத்து இடம்பெற்றது.

வரணி நாவற்காட்டைச்சேர்ந்த சிவகுமார் அனுசன் (வயது 17) வரணி இயற்றாலையைச் சேர்ந்த ஜெகநாதன் பிரசிகன் (வயது 17) என்ற இருவரும், காயமடைந்து சாவகச்சேரி மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டனர். வரணி இயற்றாலைச் சாலை வளைவில் பயணித்த .ஹைஎஸ் வானின் பின்பகுதியில் மோட்டார் சைக்கிள் மோதி விபத்து இடம்பெற்றது எனப் பொலிஸார் தெரிவித்தனர். விபத்து தொடர்பான விசாரணைகளையும் பொலிஸார் ஆரம்பித்திருந்தனர்.

# குருபூசை தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை நடாத்தும் சுந்தர மூர்த்தி சுவாமிகள் குருபூசை தின நிகழ்வுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும்.

சபையின் தலைவர் இ.வசந்தசேனன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வின் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளர் சிதம்பரபிள்ளை மாணிக்கராசா கலந்து சிறப்பிக்கவுள்ளார். அத்துடன் ஆண்மீக அருளுரைகள், நாடகம் என்பன நடைபெறும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (21,ரி,173)

# வருடாந்தத் திருவிழா

வடமராட்சி,ஜூலை 29
பருத்தித்துறை மேலைப்புலோலி ஆலடி அருள்மிகு சித்தி விநாயகர் கோயில் வருடாந்தத் திருவிழா இன்று சனிக்கிழமை பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். என அறிவிக்கப்பட்டது.

தொடர்ந்து பத்துத்தினங்கள் இடம்பெறும் இந்தத்திருவிழாவின் தேர்த்திருவிழா எதிர்வரும் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் தீர்த்தத்திருவிழா 7ஆம் திகதி திங்கட்கிழமையும் இடம்பறும் எனவும் அறிவிக்கப்பட்டது. (21,173)

++++++++++

பருத்தித்துறை மருதடி குறுமணல் அருள்மிகு முருகன் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டது. தொடர்ந்து பத்துத்தினங்கள் இடம்பெறும் இந்தத்திருவிழாவின் தேர்த்திருவிழா எதிர்வரும் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் தீர்த்தத்திருவிழா 7ஆம் திகதி திங்கட்கிழமையும் இடம்பறும் எனவும் திருவிழாவை நெல்லியடி தடங்கள் புளியடி முருக மூர்த்தி கோயில் குரு சிவஸ்ரீரா.ரெங்கசாமிக்குருக்கள் தலைமைக் குருவாக இருந்து நடத்தி வைப்பார் எனவும் அறிவிக்கப்பட்டது. (21,173)

# சாரதி, வாகனம் மீது தாக்கியவருக்கு மறியல்

தென்மராட்சி, ஜூலை 29
சாலையில் சென்ற வாகனத்தையும் அதன் சாரதியையும் தாக்கிய இளைஞர் சாவகச்சேரி நீதிவான் மன்றினால் நேற்று விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

மட்டுவில் பகுதியைச்சேர்ந்த இளைஞர் சைகைகள் எதுவுமின்றி கைதடி நுணாவில் பகுதியில் உள்ள ஒழுங்கையிலிருந்துஏ9முதன்மைச்சாலைக்கு மோட்டார்சைக்கிளை ஏற்றுவதற்கு முற்பட்டார், முதன்மைச் சாலையில் வந்த கார்ச் சாரதி அவருடன் முறண்பட்டார். ஆத்திரமடைந்த இளைஞன் காரை துரத்திச் சென்று தலைக்கவசத்தால் தாக்கி சாரதியையும் தாக்கினார். சம்பவம் கைதடிப்பாலத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்றது. இது தொடர்பாக கார்ச் சாரதி சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். இதனை அடுத்து அந்த இளைஞர் கைது செய்யப்பட்டார். என சாவகச்சேரிப் பொலிஸார் தெரிவித்தனர். சந்தேக நபர் நேற்று சாவகச்சேரி நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டார். வழக்கை விசாரித்த நீதிவான் இளைஞரை எதிர்வரும் 11ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (21,9)

# தெய்வீகச் சிறப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜூலை 29
நல்லூர் கந்தசுவாமி ஆலயத் திருவிழாவை முன்னிட்டு "சைவ வாழ்வியலை மக்கள் தம் வாழ்வியல் நெறியாகக் கைக்கொள்ள வேண்டும்." என்ற எண்ணக்கருவுடன் இலங்கை உலக சைவத் திருச்சபை நடத்தும் தெய்வீகச் சிறப்பு நிகழ்வுகள் நேற்று வெள்ளிக் கிழமை ஆரம்பமாகியது.

இந்த நிகழ்வு எதிர்வரும் 21ஆம் வரை மாலை 6.45 மணி தொடக்கம் 7.45 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கனடா உலக சைவத்திருச் சபை, பெரிய சிவனாலய தர்மகர்த்தா கலாநிதி அடியார் விபுலானந்தா கலந்து கொள்கிறார். (21)

# நல்லூர் திருவிழா நாள்களில் 600 பொலிஸார் கடமையில்

## பிற மாவட்டங்களிலிருந்தும் வந்தனர்

யாழ்ப்பாணம், ஜூலை 29

யாழ்ப்பாணம் நல்லூர் ஆலய வருடாந்தத் திருவிழாவில் 600 பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று யாழ்ப்பாணப் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் எஸ். ஸ்ரெனிஸ்லஸ் தெரிவித்தார்.

நல்லூர் ஆலயத் திருவிழா கொடியேற்றத்துடன் நேற்று ஆரம்பமாகியது. அங்கு பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. கோவில்சூழலைச்சுற்றிப்பொது மக்களுக்குப் பாதுக்கப்பு வழங்கும் வகையில் சுமார் 600 பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதற்கென யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பொலிஸ் நிலையங்களிலிருந்தும்பிறமாவட்டங்களில் இருந்தும் பொலிஸார் வரவழைக்கப்பட்டுள்ளனர்.

பொதுவாக நல்லூர்த் திருவிழா வுக்கு இலங்கையின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் புலம்பெயர் நாடுகளில் இருந்தும்இலட்சக்கணக்கான பக்தர்கள் வருவது வழமை. கோவிலில் குற்றச் செயல்களைத் தடுக்கும் வகையில் பொலிஸார் பாதுகாப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கடந்த வருடம் நல்லூர்கோவில்திருவிழாவுக்குப் பாதுகாப்பு வழங்குவதற்காக 500 பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இந்தமுறைஎண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது. கடந்த வருடத்தைவிட இந்தமுறை அதிகமான பக்தர்கள் வருகை தருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதால் பொலிஸாரின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது - என்று மேலும் தெரிவித்தார். (4-8)

## சான்றுப் பொருள்களின் ஏலவிற்பனை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 29

ஊர்காவற்துறைநீதிமன்றில்இன்றுசனிக்கிழமைஇடம்பெறவிருந்த ஏலவிற்பனை தவிர்க்க முடியாத காரணத்தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக நீதிமன்றப் பதிவாளர் அறிவித்தார். நீதிமன்ற சான்றுப் பொருள்களின் ஏலவிற்பனை இன்று இடம்பெறவிருந்தது என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டது. (4)

## போதையில் வாகனம் ஓடியோரின் சாரதிப் பத்திரங்கள் இடைநிறுத்தம்

*ரூபா 7,500 தண்டம் விதிக்கப்பட்டு*
*100 மணித்தியாலங்கள் சமூகசேவைக்கும் பணிப்பு*

மதுபோதையில் வாகனம் செலுத்திய இருவருக்குத் தலா 7ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதித்தது யாழ்ப்பாண நீதிவான் மன்று. அவர்களது சாரதி அனுமதிப் பத்திரங்களை ஒரு வருடத்துக்குத் தடுத்து வைக்கவும் நீதிமன்று பணித்தது.

யாழ்ப்பாணப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் மதுபோதையில் வாகனம் மற்றும் மோட்டார் கார் செலுத்திய குற்றச்சாட்டில் இரண்டு பேருக்கு எதிராகக் குற்றஞ்சாட்டப் பட்டு வழக்குப் பதிவு செய்யப்பட்டது. அவர்கள் மீதான வழக்கு யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் நீதிவான் சி.சதீஸ்தரன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது. குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தம்மீதான குற்றங்களை ஏற்றுக்கொண்டனர். தலா 7ஆயிரத்து 500 ரூபா வீதம் அவர்களுக்குத் தண்டம் விதிக்கப்பட்டது.

இருவருடைய சாரதி அனுமதிப்பத்திரங்களும் ஒரு வருடத்துக்கு நிறுத்தி வைக்கவும் மன்று பணித்தது.

இருவரும் தலா 100 மணித்தியாலயங்கள் சமூகப்பணியில் ஈடுபட வேண்டும் எனவும் நீதிவான் தனது கட்டளையில் தெரிவித்தார். (4-12)

## ஆடிப்பூர கஞ்சிக் கலய ஊர்வலமும் பாலாபிஷேகமும்

யாழ்ப்பாணம் ஜூலை 29

யாழ்ப்பாணம் மேல் மருவத்தூர் சுயம்பு ஆதி பராசக்தி வார வழிபாட்டு மன்றத்தின் ஆடிப்பூரக் கஞ்சிக் கலய ஊர்வலமும் பாலாபிஷேகமும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7மணிக்கு நடைபெறும் என்று மன்றத்தின் செயலாளர் தெரிவித்தார்.

மழைக்கு முக்கியத்தும் கொடுக்கும் வகையில் திருநெல்வேலி முத்துமாரி அம்பாள் ஆலய முன்றலில் தயாரிக்கப்படும் கஞ்சி, சிறிய மண் பானைகளில் நிரப்பப்படும். பக்தர்கள் அதைச் சுமந்தவாறு ஆலயத்தை வலம் வருவர், தொடர்ந்து அம்பாளின் கருவறைக்கு எதிரே உள்ள மண்டபத்தில் அது படைக்கப்பட்டு பூசை வழிபாடுகள் இடம்பெறும்.

பின்னர் ஆதிபராசக்தியின் திருவுருவப்படங்களைத் தாங்கியவாறும், கஞ்சிக்கலயங்களைச் சுமந்தவாறும் ஆலயத்தில் இருந்து மாரியம்மன் சாலையூடாக புறப்படும் ஊர்வலம் கல்வியங்காட்டு மன்றத்தைச் சென்றடையும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (21,ரி)

## கீழடி தமிழர்களின் நகரமே அமெ. நிறுவனம் தெரிவிப்பு



சென்னை, ஜூலை 29

தமிழகத்தின் கீழடி என்றும் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளநகரம்தமிழர்களின்நகரமே என்பதுஉறுதிப்படுத்தப்பட்டுள்ள தகவல் நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடந்த விவாதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி எழுப்பிய கேள்விக்குப் பதில் வழங்கிய மத்திய கலாசாரம் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் இந்தத் தகவலை தெரிவித்தார்.


கீழடி அகழ்வாரச்சிப் பணியின் போது கணடெடுக்கப்பட்ட பொருள்கள் சில அமெரிக்காவில் உள்ள தொல்பொரள் ஆராய்ச்சி நிறுவனத்துக்கு அனுப்பப்பட்டது. இந்த நிறுவனம் நடத்தி சோதனையில் அது இற்றைக்கு சுமார் 2ஆயிரத்து 100 ஆண்டுகளுக்கு முன்னைய காலத்துக்கானது என்பதும், தமிழர்களின் வாழ்வியலுடன் தொடர்புபட்டது என்பதும் தெரியவந்துள்ளது. கீழடி பகுதியில் இருந்து சுமார் 5ஆயிரம் வரையிலான பண்டைய் காலப் பொருள்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவை தொடர்பிலும் ஆய்வு நடைபெற்று வருகின்றன' என அவர் மேலும் தெரிவித்தார்.

முன்னதாக கீழடியில் கடந்த மே மாதம் கண்டெடுக்கப்பட்ட பொருள் ஒன்று சுமார் 5ஆயிரத்து 300 வருடங்களுக்கு முற்பட்ட காலத்துக்குரியது என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இரண்டு கட்ட ஆய்வுப் பணிகள் அங்கு முடிவடைந்து தற்போது மூன்றாம் கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

### மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 60 | 80 | 80 | 60 | 60 |
| கத்தரி | 120 | 140 | 120 | 160 | 120 |
| மரவள்ளி | 70 | 80 | 80 | 60 | 80 |
| பயிற்றை | 120 | 60 | 120 | 120 | 120 |
| பாகல் | 180 | 220 | 240 | 200 | 180 |
| க.கிழங்கு | 140 | | 140 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 90 | 100 | 100 | 90 |
| சி.வெங்காயம் | 150 | 150 | 160 | 160 | 120 |
| பூசணி | 100 | 100 | 100 | 100 | 80 |
| தக்காளி | 100 | 150 | 140 | 150 | 140 |
| வாழைக்காய் | 100 | 100 | 80 | 80 | 100 |
| கீரை | 30 | 30 | 40 | 15 | 30 |
| பொன்னாங்காணி | 25 | 20 | 30 | 30 | 30 |
| ப.மிளகாய் | 500 | 300 | 300 | 300 | 200 |
| புடோல் | 100 | 80 | 100 | 80 | 80 |
| கோவா | 140 | 180 | 140 | 120 | 120 |
| வெண்டி | 100 | 80 | 100 | 100 | 60 |
| போஞ்சி | 150 | 120 | 180 | 100 | 180 |
| லீக்ஸ் | 100 | 130 | 120 | 120 | 120 |
| தேங்காய் | 60 | 60 | 70 | 60 | 60 |
| உ.கிழங்கு | 100 | 100 | 100 | 120 | 120 |
| தேசிக்காய் | 70 | 70 | 80 | 40 | 70 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 15 |
| கறிமிளகாய் | 200 | 240 | 180 | 180 | 220 |
| கரட் | 250 | | | 240 | 240 |
| முருங்கைக்காய் | 200 | 120 | 240 | 120 | 160 |

### கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 600 | 800 | 1000 | – |
| நண்டு | 300 | 300 | 400 | – |
| கணவாய் | 600 | 700 | 800 | – |
| பாரை | 600 | 600 | 600 | – |
| சுறா | 500 | 700 | 1000 | – |
| சீலா | 400 | 500 | 500 | – |
| விளை. | 600 | 400 | 500 | – |
| முரல் | 400 | 500 | 400 | – |
| கும்பிளா | 400 | 400 | 400 | – |
| கிளாக்கன் | 800 | – | 600 | – |
| ஓரா | 350 | 400 | 500 | – |
| திரளி | 300 | 200 | 200 | – |
| நகரை | 300 | 150 | 400 | – |
| சூடை | 150 | 100 | 200 | – |
| ஒட்டி | 200 | 300 | 300 | – |
| திருக்கை | 300 | 250 | 400 | – |
| மதனம் | 200 | 150 | 250 | – |
| கொய் | 150 | 60 | 80 | – |
| பாலை | 200 | 250 | 500 | – |
| வாழை | 150 | 200 | 400 | – |




பெண்களுக்கான பஞ்சாபி வகைகள் தற்போது நவீன வடிவில் சந்தைக்கு வந்துள்ளன. இவை 7 ஆயிரம் ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.

## 50,100 மணித்தியாலம் அரச அலுவலர்களுக்கு சிங்கள மொழிப் பயிற்சி

யாழ்ப்பாணம், ஜூலை 29
நாடு தழுவிய ரீதியில் அரச அலுவலர்களுக்கு 50 ஆயிரத்து 100 மணித்தியாலங்கள் கொண்ட சிங்கள மொழிப் பயிற்சி நடத்தப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.
வடக்கு மாகாணத்தில் தேசிய மொழி, கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி அலகுடன் இணைந்த வகையில் இதனை நடத்தவுள்ளது.
வடக்கு மாகாண பிரதித் தலைமைச் செயலாளர் (ஆளணியும் பயிற்சியும்) அ.சிவபாலசுந்தரன் இதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்.
இதில் வகை I இல் 31.01.2017 இல் 50 வயதை பூர்த்தி செய்தவர்களுக்கு 100 மணித்தியால பயிற்சி வழங்கப்படும் வகை II இல் ஆரம்ப வகுதியை சேர்ந்தவர்களுக்குச் சிங்கள மொழித் தேர்ச்சி அடைய வேண்டிய மட்டம் IV இற்குரிய அனைத்து பகுதியினருக்கும் 50 மணித்தியால சிங்களமொழிப் பயிற்சி வழங்கப்படும்.
ஆர்வமுள்ள சகலரும் செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் திணைக்கள தலைவர் ஊடாக விண்ணப்பிக்னுமாறு கோரப்பட்டுள்ளது. (4,50)

### வடக்கு மாகாணத்தில்

# 253 அரச பேருந்துகள் பயனின்றி முடக்கம்

### 19 பேருந்துகளுக்கு ஆளணியில்லை போக்குவரத்துச் சபையினர் கூறுகின்றனர்

யாழ்ப்பாணம், ஜூலை 29
வடக்கு மாகாணத்தில் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குரிய 7 சாலைகளிலும் 325 பேருந்துகள் உள்ளன. அவற்றில் 253 பேருந்துகள் மட்டுமே பயன்பாட்டில் உள்ளன என்று இலங்கைப் போக்குவரத்துச் சபையினர் தெரிவித்தனர்.
7சாலைகளிலும்உள்ளவற்றில்குறிப்பிட்டளவுபேருந்துகள்பழுதடைந்துள்ளன. அதனால் அவற்றைப் பயன்படுத்த முடியவில்லை. இன்னும்சிலபேருந்துகள்பயன்படுத்தக்கூடிய நிலையில் உள்ள போதும் அதற்கான ஆளணி இல்லாததால் பயன்படுத்தப்படவில்லைஎன்றும்அவர்கள்தெரிவிக்கின்றனர்.
யாழ்ப்பாணமாவட்டத்தின்கோண்டாவில் சாலையில்தற்போது96பேருந்துகள்உள்ளபோதும்70பேரூந்துகள்மட்டுமேபயன்படுத்தப்படுகின்றன. ஏனைய 26 பேருந்துகளில் 16 பேருந்துகள் பழுது காரணமாகவும் எஞ்சிய 10 பேருந்துகள் ஆளணி இன்மையாலும் பயன்படுத்தப்படவில்லை. பருத்தித்துறைச் சாலையில் 48 பேருந்துகள் உள்ளபோதும் 39பேருந்துகள் பயன்படுத்தப்படுகின்றன. 8 பேருந்துகள் பழுதடைந்துள்ளன. ஆளணி இல்லாது ஒரு பேருந்து உள்ளது.
காரைநகர்ச் சாலையில் 30 பேரூந்துகள் உள்ளன. 26 பேருந்துகள் பயன்படுத்தப்படுகின்றன. பழுது காரணமாக 4 பேருந்துகள் பயன்படுத்தப்படவில்லை.
கிளிநொச்சிச் சாலையில் 30 பேருந்துகள் உள்ளன. அவற்றில் 23 பேருந்துகள் பயன்படுத்தப்படுகின்றன. 4 பேருந்துகள் பழுதடைந்துள்ளன. 3 பேருந்துகளுக்கு ஆளணி இல்லை.
முல்லைத்தீவுமாவட்டத்திலும்26பேரூந்துகள்உள்ளன. அவற்றில்21பேருந்துகள் பயன்படுத்தப்படுகின்றன. 3 பேருந்துகள் திருத்தப்பணிக்காக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. 2 பேருந்துகளுக்கு ஆளணி இல்லை. மன்னார் மாவட்டத்தில் 50 பேருந்துகள் உள்ளபோதும் 39 பேருந்துகளேபயன்படுத்தப்படுகின்றன. 10பேருந்துகள் பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றன. ஒரு பேருந்துக்கு ஆளணி இல்லை.
வவுனியாமாவட்டஇலங்கைப்போக்குவரத்துச்சபைக்குரியசாலையில் 45பேருந்துகள் உள்ளன. 35 பேருந்துகள் பயன்படுத்தப்படுகின்றன. 8 பேருந்துகள் பழுதடைந்துள்ளன. 2 பேருந்துகளுக்கு ஆளணி இல்லை.
இவற்றின் அடிப்படையில் தற்போது வடக்குமாகாணத்தில்உள்ளஇலங்கைப் போக்குவரத்துச் சபையில் 325 பேருந்துகள்உள்ளன. அவற்றில்253பேருந்துகள் பயன்படுத்தப்படுகின்றன. எஞ்சிய 72 பேருந்துகளில் 53 பேருந்துகள் திருத்தம் காரணமாகநிறுத்திவைக்கப்பட்டுள்ளன. மிகுதி19பேருந்துகளும்ஆளணிஇல்லாத காரணத்தால் பயன்படுத்தப்படவில்லை என்று சபையின் வடக்கு மாகாண அதிகாரிகள் தெரிவித்தனர். (4,101)



# உஆம் திருவிழா

### குழந்தாய் வேலா

கலியுக தெய்வமே
கருணை வடிவேலா
எம் துணை காக்க
மயிலேறி வா முருகா
நாம் செய்த
பாவம் தனை
காத்திட வா முருகா
உன் நாமம்
நாம் சொல்ல
மனமுருகுது
வடிவேலா

—சுபானுஜன்.

### வேண்டிய வரமெல்லாம் தந்திடுவாய் நல்லைக் கந்தா

நல்லைக் குமரனின்
மலரடி தொழுதால்
வேண்டிய வரங்களையே
தந்திடுவாள்
(நல்லை குமரனின்)

வண்ண மயில் மீதேறி நீ
வீதியுலா வருகையிலு
நெஞ்சமெல்லாம் உருகி
நினைவெல்லாம் மருளுதடி
(நல்லைக்குமரனின்)

நாடியே வந்திடுவேன் நலம்
பல அளித்திடுவாய்
கூடியே பக்தர்களின்
குரலொலி மேலோங்க
வேண்டியே வந்திடுவாய்
வரமெல்லாம் தந்திடுவாய்
வேண்டிய வேண்டியபடி
நம்குறைகளைத்
தீர்த்திடுவாய்
(நல்லைக்குமரனின்)

—திருமதி மலர்விழி கனகசபை.

### கலைபெருக்கும் அழகன்

**பல்லவி**
யாருமிருக்கப் பயமேன்?
சொன்னவன் முருகன்
யாழ்நகர் நல்லூரில்
கலைபெருக்கும் அழகன்
ஓமெனும் ரீங்காரச்
சொரூபியாய் மகிழும்
ஒரு ரூபா போதுமென்ற
நாமமதில் திகழும்

**அனுபல்லவி**
நாமிருக்கும் இடமெல்லாம்
நல்லூராகும்
நமைவருத்தும் நோய்க்கெ
லாம் மருந்தவனாகும்

**சரணம்**
ஈவிரக்கம் இல்லா போர்
உலகில்
இனியொரு போர்
ஒருபோதும் ஆகாது
தாயிருக்கும் இடமெல்லாம்
நீயிருந்து
தாண்டவமாடும் கொலை
களை நீ நிறுத்து

—கே.எஸ்.சிவஞானராஜா.

# பயிருக்கு உரமிடுவது போன்றே விமர்சனங்கள் இருக்கவேண்டும்

### சபை பற்றிக் கூறுபவர்கள் உணரவேண்டும் என்கிறார் ஐங்கரநேசன்

யாழ்ப்பாணம், ஜூலை 29
"விமர்சனங்கள் ஒரு பயிருக்கு உரம் இடுவது போன்று இருக்க வேண்டுமே தவிர, அதன் வேரையே அறுத்து விடுவதாக இருக்கக்கூடாது. வடக்கு மாகாணசபை மீது முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள், விமர்சனங்கள் மாகாணசபையைவளப்படுத்தும் நோக்கிலோ, வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்லும் நோக்கிலோ வைக்கப்படவில்லை. மாறாக பலவீனப்படுத்துவதாகவும், சபை தொடர்பில் மக்கள் மத்தியில் அபகீர்த்தியை ஏற்படுத்துவதாகவுமே உள்ளன"
இவ்வாறுவடக்குமாகாண சபைஉறுப்பினர்பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.
அராலிமேற்கில்முத்தமிழ் சனசமூகநிலையத்தில்மக்கள்சந்திப்பைமேற்கொண்டிருந்தபோதுஇவ்வாறுதெரிவித்ததாக அவர் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:
வடக்கு மாகாணசபை மூன்றரைவருடங்களைக் கடந்துவிட்டபோதும் ஊழல்கள் செய்ததைத் தவிர வேறு எதனையும் சாதிக்கவில்லை, பிரேரணைகளை நிறைவேற்றியுள்ளதே தவிர வினைத்திறனாகச் செயற்படல்லை என்றுசிலர்மாகாணசபையிலேயே குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றனர். இவர்கள் மக்களிடமும் இதே கருத்துகளைப் பரப்பிவருகிறார்கள்.
வடக்கு மாகாண சபை வினைத்திறன் அற்றதென்று விமர்சிப்பவர்கள் திட்டமிட்டு அரசியல் உள்நோக்கத்துடனேயே அதனைச்செய்துவருகிறார்கள்.
இலங்கையின் ஒன்பது மாகாண சபைகளில் வடக்கு மாகாணசபையே ஆகக் குறைந்த வயதுடைய மாகாணசபை. வடக்கு மாகாணசபை இப்போதுதான் மூன்றரை வருடங்களைக்கடந்துவந்திருக்கிறது. ஏனைய மாகாணசபைகள் 30வருடங்களை எட்டியுள்ளன. ஏனைய மாகாணசபைகளுடன் ஒப்பிட்டு வடக்கு மாகாண சபை எதுவுமே செய்யவில்லை என்று குற்றஞ்சாட்டுவது அறிவிலித்தனமானது.
தென் இலங்கை மாகாண சபைகள் வயதால் மூத்தவை மாத்திரம் அல்ல. கொழும்புஅரசின்ஆசீர்வாதமும் பெற்றவை. முழுமையான அதிகாரப்பகிர்வு அந்த மாகாணங்களுக்கு அவசியம்இல்லாதஒன்று. ஆனால், வடக்கு மாகாண சபைக்கு அவ்வாறான நிலை இல்லை. எந்த அபிவிருத்தியை அல்லது வேலைத் திட்டத்தை முன்னெடுத்தாலும் நாம் விரும்பிய விதத்தில் விரும்பிய நேரத்தில் அவற்றை முடிக்க முடியாதவாறு கொழும்பு அரசின் அதிகாரத் தலையீடுகள் பெரும் தடைகளாகவுள்ளன.
வடக்குமாகாணம்மூன்று தசாப்த காலப்போரில் சமூக, அரசியல், பொருளாதாரக் கட்டுமானங்கள் யாவும் சிதைவடைந்த நிலையிலேயே உள்ளது. இவற்றைச்சீரமைப்பதற்கு மூன்றுதசாப்தகாலம்கூடப் போதாது. இந்தநிலையில், மூன்றரை வயதுடைய மாகாணசபையை, அதன் அமைச்சர்களை, முதலமைச்சரை கையாலாகாதவர்களாக விமர்சிப்பது, மக்களிடமிருந்து எம்மை அந்நியப்படுத்தும் உள்நோக்கம் கொண்டது.

**வடக்கு மாகாணசபை காலில் குத்தும் முள்**

முதலமைச்சர் விக்னேஸ்வரன் தலைமையிலான வடக்குமாகாணசபையைத் தங்களது காலில் குத்துகின்ற ஒரு முள்ளாகவே தென்இலங்கை அரசியல் வாதிகள்உணருகிறார்கள். வடக்கு மாகாணசபை தமிழ்மக்களின்தன்னாட்சி உரிமைக்கோரிக்கைக்குப் பலம் சேர்த்து விடுமோ என்ற அச்சம் அவர்களில் தொற்றிக் கொண்டுள்ளது. இதனாலேயே எம்மவர்கள் சிலரைக் கொண்டே. வடக்கு மாகாணசபை நிர்வாகத்தின் மீது மக்களை வெறுப்படைய வைக்கும் விதமான விசமத்தன விமர்சனங்கள்முன்வைக்கப்பட்டுவருகின்றன - என்றுள்ளது. (4)



## இனிப்பூட்டிய பானங்கள்

★இவற்றை அடிக்கடி அருந்துவதனால், பற்சூத்தை, மற்றும் பல் சம்பந்தமான பிரச்சினைகள், வயிற்றுக் கோளாறுகள், பசியின்மை, இரைப்பைப்புண், கவனச்சிதறல், தலையிடி என்பன ஏற்படும் எது நிலை அதிகரிக்கின்றது அத்துடன் நீண்ட காலத்தில் நீரிழிவு, இதயநோய், உயர்இரத்த அழுத்தம் மற்றும் கொலஸ்ரோல் போன்ற தொற்றா நோய்கள் ஏற்படும் அபாய நிலை அதிகமாகும்.

★சீனி மெல்லக் கொல்லும் நஞ்சு



*தகவல்*
*சு.வை.அ.பணிமனை,*
*யாழ்.மாநகர சபை.*

# வடக்கு வைத்தியசாலைகளை மேலும் தரமுயர்த்த நடவடிக்கை

## விவரங்களைச் சமர்ப்பிக்குமாறு அமைச்சர் ராஜித பணித்தார்

யாழ்ப்பாணம், ஜூலை 29

வடக்கு மாகாணத்தில் உள்ள சில வைத்தியசாலைகள் தற்போதுள்ள நிலையிலிருந்து மேலும் ஒருபடி தரமுயர்த்தப்படவுள்ளன. ஏனைய வைத்தியசாலைகளுக்கு மேலும் சில வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளன. கொழும்பு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன அவை தொடர்பான தகவல்களைக் கோரியுள்ளார்.



இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் சி.திருவாகரன் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

கொழும்பில் சுகாதார அமைச்சருக்கும் மாகாண சுகாதார அமைச்சுகளுக்கும் இடையில் அமைச்சு சார்ந்த அபி விருத்தி மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் சிலநாள்களுக்கு முன்னர் கலந்துரையாடப்பட்டன.

வடக்கு மாகாணத்தில் உள்ள வைத்தியசாலைகளைத் தற்போதைய நிலையில் இருந்து மேலும் ஒருபடி முன்னேற்றித் தரம் கூடிய வைத்தியசாலையாக மாற்ற உதவிகள் வழங்குவதாகக் கலந்துரையாடலின்போது அமைச்சர் ராஜித சேனாரத்ன உறுதியளித்துள்ளார்.

அதன்படி வடக்கு மாகாணத்தில் உள்ள வைத்தியசாலைகளில் உள்ள குறைபாடுகள் மற்றும் அதனை அபிவிருத்தி செய்து தரம் உயர்த்துவதற்குத் தேவையான அனைத்து விபரங்களையும் கொண்ட அறிக்கையை எதிர்வரும் 3 ஆம் திகதி சமர்ப்பித்து அது தொடர்பான மேலதிக விளக்கத்தை வழங்குமாறு அமைச்சர் பணித்துள்ளார்.

அந்த அறிக்கை தற்போது தயார் செய்யப்படுகிறது. 3ஆம் திகதி மாகாணப் பணிப்பாளர் இந்த அறிக்கையைச் சமர்ப்பிக்கவுள்ளார். அதன் பின்னர் எமது அறிக்கை ஆராயப்பட்டு வடக்கு மாகாணத்தில் உள்ள வைத்தியசாலைகளின் தரம் உயரத்தப்படுவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என்று செயலாளர் கூறினார். (4.ரி)

## டெங்கு பரவாத சூழலுடைய வடக்கு பாடசாலைகள் கௌரவிக்கப்படவுள்ளன

### சுகாதாரப் பிரிவு பணியை ஆரம்பித்தது

யாழ்ப்பாணம், ஜூலை 29

வடக்கு மாகாணத்தில் டெங்குத் தொற்று இல்லாத சூழலைக் கொண்டுள்ள சிறந்த பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு கௌரவிக்கப்படவுள்ளன. அதன் ஆரம்பமாக யாழ்ப்பாண மாநகர சுகாதாரப் பிரிவில் உள்ள பாடசாலைகள் பரிசீலிக்கப்படவுள்ளன.

இவ்வாறு சுகாதாரப்பிரிவினர் தெரிவித்தனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது,

யாழ்ப்பாணம் மாநகர சபையின் சுகாதார மருத்துவ பணிமனையினால் டெங்கு அற்ற பாடசாலைத் தெரிவு இடம்பெறவுள்ளது.

டெங்கு ஒளிப்புச் செயற்பாடுகள் தற்போது பாடசாலைகளில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. டெங்கு அற்ற பாடசாலையைத் தெரிவு செய்வதன் மூலமாக ஏனைய பாடசாலைகளுக்கும் இவ்வாறான செயற்பாடு ஒரு உந்து சக்தியாக அமையும்.

இது தொடர்பான அறிக்கையினை அனைத்து பாடசாலைகளுக்கும் குறித்த வலயத்தின் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பாடசாலையும் டெங்கு ஒழிப்புச் செயற்பாட்டில் ஈடுபட வேண்டும். ஒவ்வொரு சுகாதார பிரிவுக்கும் உட்பட்ட பாடசாலைகளில் 3 பாடசாலைகள் தெரிவு செய்யப்படவுள்ளன.

பின்னர் மாவட்ட ரீதியாகவும் தொடர்ந்து மாகாண ரீதியாகவும் இறுதியாகத் தேசிய ரீதியாகவும் ஒவ்வொரு மட்டத்திலும் பாடசாலைகள் டெங்கு ஒழிப்பைச் சிறப்பாக முன்னெடுத்துள்ள பாடசாலைகள் கௌரவிக்கப்படவுள்ளன. இதற்காக சுகாதாரப் பரிசோதகர் பொலிஸார் உள்ளிட்ட குழுவினர் நியமிக்கப்பட்டுள்ளனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (4.ரி)

## விரல் பதிவுள்ள பாடசாலைகளுக்கு சிலர் தாமதமாகவே செல்கின்றனர்

### மாற்றுவழி தொடர்பில் ஆராயப்படுவதாக கல்விச் அமைச்சுச் செயலர் கூறுகிறார்

யாழ்ப்பாணம் ஜூலை 29

வடக்கு மாகாணத்தில் உள்ள பெரும்பாலான பாடசாலைகளில் விரல் அடையாள பதிவு இயந்திரம் பொருத்தப்பட்டுள்ளன. ஆனால் பேருந்துப் போக்குவரத்து மந்தமாக நடைபெறும் இடங்களில் ஆசிரியர்கள் நேரம் தாமதமாகச் செல்வது அவதானிக்கப்பட்டுள்ளது. அதனைக் கருத்தில் கொண்டு சாதகமான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இவ்வாறு வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

அரச நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் வலயத்துக்குட்பட்ட சகல பாடசாலைகளுக்கும் விரல் அடையாளப் பதிவு இயந்திரத்தை உபயோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பாடசாலைகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதற்கு அமைய 1ஏ பி மற்றும் சி தரப் பாடசாலைகள் தற்போது இந்த விரல் அடையாள இயந்திரத்தை பொறுத்தியுள்ளனர். 3 ஆம் தர பாடசாலைகள் சில இந்த இயந்திரங்களைப் பொருத்தவில்லை. பாடசாலையின் அபிவிருத்தி நிதியைப் பெற்று இந்த இயந்திரத்தைப் பொருத்த நடவடிக்கை எடுப்போம் என்று பாடசாலை நிர்வாகத்தினர் கூறியுள்ளனர்.

ஆனால் இந்த இயந்திரம் பொருத்தப்பட்டமையால் சில பிரதேசங்களில் இருந்து நீண்ட தூரம் பேருந்தில் பயணிக்கும் ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. இவர்கள் பணிபுரியும் பாடசாலைகள் வெகு தொலைவில் உள்ளதால் பேருந்தில் பயணம் செய்கின்றனர். குறிப்பிட்ட தூரத்துக்கு இவர்கள் போக்குவரத்துக்கு செய்வதற்கு வசதிகள் இல்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஆகவே இவர்களுக்கு மனிதாபிமான ரீதியாக நடவடிக்கை எடுக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். போக்குவரத்துக் காரணங்களால் நேரம் தாமதமாகச் சென்று விரல் அடையாள இயந்திரத்தில் பதிவு செய்யும் ஆசிரியர்கள் பற்றிய விவரங்களை உரிய வலயத்தின் ஊடாக எமது அமைச்சுக்குத் தெரியப்படுத்துமாறும் பணித்துள்ளோம்.

அதற்கு அமைவாகக் குறித்த ஆசிரியர்களுக்குச் சாதகமான நடைமுறையைப் பின்பற்ற நடவடிக்கை எடுப்போம் என்றார். (4.ரி)

## பிட்டுக்குள் அலைபேசிகள்: யாழ்.சிறைச்சாலைக்கு நுணுக்கமாகக் கடத்திய பெண்ணுக்கு மறியல்

யாழ்ப்பாணம், ஜீலை 29

யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்குள் பிட்டுவாளிக்குள் அலைபேசிகளையும் அதற்குரிய சார்ச்சர்களையும் கொண்டு சென்ற பெண் காவலரின் பரிசோதனையில் மாட்டினார்.

அவரை விளக்கமறியல் வைக்குமாறு நீதிமன்று பணித்தது. சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. சிறைச்சாலைக்குள் உள்ள உறவுக்காரரைப் பார்வையிடக் குறித்த பெண் சென்றார்.

சிறைச்சாலைக் காவலர்கள் வழமை போன்று பொருள்களைச் சோதனையிட்டபோது அதிர்ந்தனர். குறித்த வாளியின் அடிப்பகுதியில் அவற்றை வைத்து அதன்மேல் அதே வர்ணமுடைய, வகையுடைய பிளாஸ்ரிக் வாளியின் பகுதியால் இறுக்கமாக மூடி அதன் மேல் அலைபேசிகளை வைத்து அவற்றின் மேல் பிட்டு வைத்துக் கொண்டு சென்றமை தெரியவந்தது என்று சிறைச்சாலைத் தகவல்கள் தெரிவித்தன. மண்டைதீவைச் சேர்ந்த குறித்த பெண் கைதுசெய்யப்பட்டு யாழ்ப்பாண நீதிவான் மன்றில் நீதிவான் சி.சதீஸ்தரன் முன்னிலையில் நேற்று முற்படுத்தப்பட்டார். அவரை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 11ஆம்திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (4,12)

# நல்லூரில் பாடி ஆடியது தவறா?

## பொலிஸாரால் கைதாகிய பெண் நீதிமன்றில் கேட்டுக் குழப்பம்

யாழ்ப்பாணம்,ஜூலை 29

யாழ்ப்பாணம் நல்லூர் ஆலய வளாகத்துக்குள் குழப்பம் விளைவித்த குற்றச்சாட்டில் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவர் யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டபோது விளக்கமறியலில் வைக்குமாறும் தெல்லிப்பளை மருத்துவமனையில் முற்படுத்தி மருத்துவச் சான்றிழ் பெறுமாறும் மன்று பணித்தது.

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருடாந்தத் திருவிழா நேற்றுக் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

அங்கு பொலிஸார் கடமையில் ஈடுபட்டுள்ளனர். அங்கு நின்ற பெண் ஒருவர் பாட்டுப்பாடி ஆடி ஆடை கலையும் வகையில் குழப்பம் செய்தார் என்ற பொலிஸார் குற்றஞ்சாட்டி அவரைக் கைது செய்தனர்.

யாழ்ப்பாண நீதிவான் மன்றுக்கு மதியம் அவர் கொண்டு வரப்பட்டார். அவரை மன்றிலுள்ள சிறைக்கூண்டுக்குள் செல்லுமாறு கூறியபோது மறுத்துச் சத்தமிட்டார்.

"நான் குற்றமெதுவும் செய்யவில்லை. ஆகவே அந்தக் கூண்டுக்குள் செல்லமாட்டேன். நான் நீதிபதி ஐயாவுடன் கதைக்க வேண்டும். நான் என்ன பிழை செய்தேன் என்று கேட்க வேண்டும்" என்று பல தடவைகள் சத்தமிட்டார். அவரது சத்தத்தால் நீதிமன்றில் அமைதிக்குலைவு ஏற்பட்டது. சகலரது கவனமும் அந்தப் பெண்ணின் மீது பதிந்தது.

சிறிது நேரத்தில் மன்றின் செயற்பாடுகள் ஆரம்பமாகியது. குறித்த பெண் திறந்த மன்றில் நீதிவான் சி.சதீஸ்தரனிடம் முற்படுத்தப்பட்டார்.

அங்குள்ள எதிரிக்கூண்டுக்குள் ஏறிய குறித்த பெண், "நீதிபதி ஐயாவே நீங்கள் கேளுங்கள் ஐயா நான் பதில் கூறுகின்றேன். நீ ஏன் இங்கு வந்தாய்? நீ என்ன பிழை செய்தாய் என்று கேளுங்கள் நீதிபதி ஐயாவே" என்றார்.

அதற்கு நீதிவான், "நீங்கள் என்ன செய்தீர்கள் என்று கூறுங்கள்" என்று கேட்டார். அதற்கு அந்தப் பெண், " நான் நல்லூர்க் கந்தனிடம் சென்றேன். அங்கு எனது சேலைத்தாவணியை எடுத்துக் கீழே இறக்கிவிட்டுப் பாட்டுப்பாடி நடனமாடினேன். நான் செய்தது தவறா நீதிபதி ஐயா? நான் ஆடிப்பாடியதுதான் தவறா? இவர்கள் யாரும் (பொலிஸார்) என்னுடன் கதைக்கக் கூடாது. நீங்கள் மட்டும் கதையுங்கள் ஐயா. நான் செய்தது தவறா என்று திரும்பத் திரும்பக் கேட்டார். பின்னர் அந்தப் பெண் நீதிமன்றில் தகாத வார்த்தைகளைப் பிரயோகித்தார். நீதிவான் அதற்கு இடங்கொடுக்கவில்லை.

அவரை மன்றிலிருந்து வெளியேற்றுமாறு பணித்தார். அவர் செல்லவில்லை. அதனால் எதிரிக்கூண்டுக்குள் சென்ற பெண் பொலிஸ் உத்தியோகத்தர் குறித்த பெண்ணை மன்றில் தடுத்து வைக்கும் கூண்டுக்குள் அழைத்துச் சென்றார்.

அதன்போதும் அங்கு வரமாட்டேன் என்று அவர் சத்தமிட்டார்.

அதன்பின்னர், குறித்த பெண்ணைத் தெல்லிப்பளை வைத்தியசாலைக்கு அனுப்பி மருத்துவ அறிக்கை சமர்ப்பிக்குமாறு சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கு நீதிவான் கட்டளையிட்டார். (4-12)

# போதைப் பொருள் குற்றச் செயல்களை தடுக்க தனிப் பிரிவு

## அமைச்சர் சாகல தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 29
போதைப் பொருள் தடுப்புப் பணியகம் மற்றும் திட்டமிடப் பட்ட குற்றச்செயல்கள் தடுப் புப்பிரிவு ஆகிய இரண்டை யும் இணைத்து மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஒருவ ரின் கீழ் சிறப்புத் தனிப்பிரிவு ஒன்றை அமைக்க நடவ டிக்கை எடுக்கப்பட உள்ளதா கச் சட்டம் ஒழுங்கு அமைச் சர் சாகல ரட்னாயக்க தெரி வித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்த தாவது:
இதனை அமைக்க அனுமதி கோரி தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிடம் விண் ணப்பிக்கப்படவுள்ளது.
போதைப்பொருள் சீனிக் கொள்கலனில் கொண்டு வரப்படுவதானது அரசுக்கு பிரச்சினைக்குரிய விடய மாக உள்ளது.
பல்வேறு சோதனை நடவ டிக்கைகள் மேற்கொள்ளப்ப டுகின்ற போதிலும் அந்தச் சோதனைகளுக்கு அதிக காலம் எடுக்கின்றன.
இவ்வாறு சோதனைக்குக் கால அவகாசம் எடுக்கும் போது சந்தையில் சீனிக் கையிருப்புக்கு பிரச்சினை ஏற்படுவதால், சோதனை நட வடிக்கைகளில் புதிய தொழில் நுட்ப உதவிகளைப் பெறுவது தொடர்பில் ஆலோ சிக்கப்பட்டுள்ளது-என்றார்.
(த-ய)

# மாலபே வைத்தியசாலையின் நிர்வாகத்துக்கு குழு நியமிப்பு

கொழும்பு, ஜூலை 29
மாலபே, நெவில் பெர்னாண்டோ வைத்தியசாலையின் நிர்வாகத் துக்கென முன்னாள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் யூ.ஏ.அஜித் மெண்டிஸ் தலை மையில் குழுவொன்று நியமிக் கப்பட்டுள்ளது.
இந்தக் குழுவின் ஏனைய அங் கத்தினர்களாக பேராசிரியர் சரத் விஜேசூரிய, சிறப்பு வைத்திய நிபுணர்களான ஜயசுந்தர பண் டார, பந்துல சமரவிக்கிரம, லால் வீரசிங்க, தீபால் வீரசேகர ஆகி யோருடன் தினேஷ் வீரக்கொடி மற்றும் சைட்டம் நிறுவனத்தின் பீடாதிபதி ஒருவரும் நியமிக்கப் பட்டுள்ளனர்.
நாடாளுமன்றத்தில் இந்த வைத் தியசாலையின் நிர்வாகத்துக்காக் கான நிரந்தர ஒழுங்குகள் செய் யப்படும் வரை இந்தக் குழு அந்த வைத்தியசாலையின் முகாமைத் துவத்துக்கும் நிர்வாகத்துக்கும் பொறுப்பாக இருக்கும்.
ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் இந்தக் குழு தனது பணி களை ஆரம்பிக்கும் எனவும், அதன் நிர்வாகச் செலவுகளுக் காக மாதாந்தம் 20 கோடி ரூபாவை வழங்க அமைச்ச ரவை அனுமதி வழங்கியிருப்ப தாகவும் தெரியவருகின்றது. (த)

# டிரான் வெளிநாடு செல்வதற்கு அனுமதி


கொழும்பு, ஜூலை 29
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸ் வெளிநாட்டுப் பயணம் மேற்கொள்ள மேல் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.
மருத்துவ சிகிச்சைக்காக ஒரு மாத காலம் அவர் சிங்கப்பூர் செல்ல கொழும்பு மேல்நீதி மன்ற நீதிபதி விகும் களுவாராச்சி அனுமதி வழங்கியுள்ளார்.
200 மில்லியன் ரூபா பணத்தை மோசடி செய்தார் என டிரான் அலஸ் மீது குற்றம் சுமத்தி வழக்குத் தொடரப்பட்டுள்ளது.
ஆழிப்பேரலை வீடமைப்புத் திட்டத்தில் இவ் வாறு மோசடி இடம்பெற்றுள்ளதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.
பத்து லட்சம் ரூபா தனிப்பட்ட பிணையின் அடிப்படையில் டிரான் அலஸின் கடவுச்சீட்டு விடுவிக்கப்படவுள்ளது.
இதேவேளை, கடவுச்சீட்டை மீளவும் எதிர்வ ரும் செப்ரெம்பர் மாதம் 8ஆம் திகதி நீதிமன் றில் ஒப்படைக்கவேண்டுமென நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
(த)

# தனித்துக் களமிறங்கியிருப்பின் மகிந்தவே தலைமை அமைச்சர்

## கூறுகின்றார் பிரசன்ன ரணதுங்க

கொழும்பு, ஜூலை 29
கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் மகிந்த ராஜபக்ச தனிக் கட்சியில் போட்டியிட்டிருந்தால் அவர் தலைமை அமைச் சராகவோ அல்லது எதிக்கட்சித் தலைவராகவோ ஆகி இருப்பார் என்று மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பி னர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
இந்த அரசு வீழ்ச்சியை நோக்கிப் போய்க்கொண்டிருக் கின்றது. அரசின் பிழையானமக்கள் விரோதச் செயற்பா டுகள் காரணமாக அரசில் இருந்து பல அமைச்சர்கள் விலகி எம்முடன் இணையவுள்ளனர். அரசின் ஆயுட் காலம் சுருங்கியுள்ளது. அரசில் இருந்து விலகினாலும் எமது அணியில் இருந்து பலர் அரசுடன் இணைந்து அந்த வெற்றிடத்தை நிரப்புவதற்குத் தயாராக இருக்கின் றனர் என்று அரசு கூறுகின்றது. ஒருபோதும் அப்படி நடக்காது.
இன்று மக்கள் விரும்பும் ஓரேயொரு தலைவன் மகிந்த தான். மகிந்தவுக்கு இருக்கின்ற மக்கள் செல்வாக்கு ரணிலுக்கோ மைத்திரிக்கோ இல்லை. கடந்த நாடாளு மன்றத் தேர்தலில் மகிந்த ராஜபக்ச தனிக் கட்சியில் போட்டியிட்டிருந்தால் அவர் தலைமை அமைச்சராகவோ அல்லது எதிக்கட்சித் தலைவராகவோ ஆகி இருப்பார். தனிக் கட்சியில் போட்டியிடுமாறு நான் மகிந்தவிடம் கூறினேன். கேட்கவில்லை.
இப்போது மக்கள் மகிந்த ஆட்சிக்கு வர வேண்டும் என்று விரும்புகின்றனர். அதற்கான சந்தர்ப்பத்தை மகிந்தவுக்கு வழங்குவதற்கு மக்கள் காத்துக்கொண்டு இருக்கின்றனர். நாட்டில் ஏற்பட்டுள்ள எந்தவொரு பிரச் சினைக்கும் இந்த அரசிடம் தீர்வு கிடையாது. ஆட்சி மாற்றமே எல்லாவற்றுக்கும் ஒரே தீர்வு.
10லட்சம் தொழில் வாய்ப்புகள் வழங்கப்படும் என்று அரசு வாக்குறுகி வழங்கினாலும்கூட அதற்கான தேவை அரசுக்கு இல்லை. இளைஞர்கள் இன்று போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ளனர். அவர்கள் வேலை வாய்ப்புகள் கேட்டுப் போராடும் நிலை யில் இல்லை. இதனால் அரசுக்குத்தான் லாபம்-என் றார்.
(த-3)

## மரண அறிவித்தல்



### கதிரிப்பிள்ளை துரைசிங்கம்

யாழ்ப்பாணம் மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் வவுனியா நெடுங்குளத்தை வதிவிடமாகவும் கொண்ட . கதிரிப்பிள்ளை துரைசிங்கம் (லொறி கிளி - மயிலிட்டி முன்னாள் Singan அரிசி ஆலை (SRM)உரிமையாளர்) நேற்று (28.07.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரிப்பிள்ளை - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கனகரத்தினம் - திரிபுரசுந்தரி தம்பதியரின் அன்பு மருமகனும், செல்வகுமாரி (ஆசிரியர் - வவுனியா, இரம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம்)யின் அன்புக் கணவரும், பவநீதன், கோபிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுப்பிரமணியம், சிவலிங்கம், நடராஜா, இராசரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், பாலச்சந்திரன், வசந்தகுமாரி, இராமச்சந்திரன், விஜயகுமாரி, இதயகுமாரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தெல்லிப்பழை 8 ஆம் கட்டை வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நாளை (30.07.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மயிலிட்டி கொட்டுப்புலம் மயானதுக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**8 ஆம் கட்டை வீதி,**
**தெல்லிப்பழை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

### திருமதி சுகந்தினிதேவி (ராசாத்தி) தவராஜசுந்தரம்



யாழ்.திருநெல்வேலியைப் பிறப்பிட மாகவும், புதுமுறிப்பு, கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுகந்தினிதேவி (ராசாத்தி) தவராஜசுந்த ரம் கடந்த 26.07.2017 புதன்கிழமை அகாலமரணமடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற இரா சையா மற்றும் இலட்சுமி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்க ளான கார்த்திகேசு - இலட்சுமி தம்ப திகளின் அன்பு மருமகளும், தவராஜ சுந்தரம் (காந்தன் - கிளி/ அக்கராயன் ம.வி, ஆசிரியர்) அவர்களின் பாசமிகு துணைவியும், மாலினி (சந்திரா), ஜெகதீஸ்வரன் (சூரி), சாந்தினிதேவி, லவகேஸ்வரன் (ஈசன் - கனடா), இராஜேஸ்வரன் (வெள்ளை), இலங் கேஸ்வரன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், நவரட்ணம் (முன்னாள் பணியாளர் - கரைச்சி தெற்கு ப.நோ.கூ.ச), மோகனாம்பாள் செல்வானந்தம், தனலட்சுமி (கனடா), சாந்தினி, யசோதா (ஆஸ்திரேலியா), கனகசுந்தரம் (பிரான்ஸ்), சௌந்தர்ராஜா (ஜேர்மனி), காலஞ்சென்றவர்களான சிவபாதசுந்தரம், பாலசுந்தரம், சிவயோகசுந்தரம் ஆகியோரின் அன்பு மைத் துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.07.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக உருத்திரபுரம் பொதுமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற் றுக்கொள்ளவும்.

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

**077 864 9347**

# இலங்கையில் முதலிட வெளிநாடுகள் தயக்கம்

## அதிகாரிகளின் கெடுபிடிகளே காரணம் என்கிறது இலங்கை சட்டத்தரணிகள் சங்கம்

கொழும்பு, ஜூலை 29
வெளிநாட்டவர்கள் இலங்கையில் முதலீடு செய்வதற்கு தயங்குவதற்கு இங்குள்ள ஒரு சில அதிகாரிகளின் கெடுபிடிகளும் நடைமுறைக்கு ஒவ்வாத நிபந்தனைகளுமே காரணமென இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் யூ.ஆர்.டி.சில்வா தெரிவித்தார்.

வெளிநாட்டவர்களின் ஆவணங்கள் நூலிழை பிசகாமல் நூறு வீதம் சரியாக இருக்கவேண்டுமெனப் பிடிவாதம் பிடிக்கும் இந்த அதிகாரிகள் நடைமுறைக்குச் சாத்தியமற்ற பல நிபந்தனைகளையும் விதிப்பதால் முதலீட்டாளர்கள் இங்கு வரத் தயங்குகிறார்கள் எனவும், அதற்குப் பதிலாக இத்தகைய கெடுபிடிகள் இல்லாத ஜப்பான், சிங்கப்பூர் போன்ற நாடுகளில் முதலீடு செய்வதில் அவர்கள் ஆர்வம் காட்டி வருகிறார்கள் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

முதலீட்டாளர்களைக் கையாளும் அதிகாரிகள் முதலீடுகள் தொடர்பான சட்டவரைமுறைகளை நன்கு அறிந்து வைத்திருக்கவேண்டும் எனவும், அண்மையில் கோல்பேஸ் ஹோட்டலில் நடந்த ஆசிய பசுபிக் நாடுகளின் சட்டத்தரணிகள் மாநாட்டில் கலந்துகொண்ட தலைமை அமைச்சர் ரணில் விக்கிரம சிங்கவுக்கு இந்த விடயம் தொடர்பில்தான் விரிவாக விளக்கிக் கூறியதாகவும் அவர் தெரிவித்தார். (த)

# ஆதாரங்களைத் திட்டமிட்டு மறைக்கிறாரா அலோசியஸ்?

## மேலதிக மன்றாடியார் அதிபதி முறையீடு

கொழும்பு, ஜூலை 29
பிணைமுறி மோசடி விசாரணை ஆணைக்குழுவின் உத்தரவின்படி பெர்பெச்சுவல் ட்ரஸ்ரிஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் அலோசியஸ் ஆணைக்குழுவின் புலனாய்வு அதிகாரிகளிடம் ஒப்படைத்திருப்பது அவர் சமீப காலத்தில் பயன்படுத்திய கைபேசிகளும், மடிக்கணினிகளுமே எனவும், அவை பிணைமுறி மோசடி நடந்த காலப் பகுதியில் பயன்படுத்தியமை அல்ல எனவும் ஆணைக்குழுவின் முன்னிலையில் பிரசன்னமாகி யிருந்த மூத்த மேலதிக மன்றாடியார் அதிபதி யசந்த கோதாகொட முறையிட்டுள்ளார்.

அவர் ஆணைக்குழுவின் முன்னிலையில் தெரிவித்த ஏனைய விவரங்கள் வருமாறு:

பிணைமுறி மோசடி நடந்ததாகக் கூறப்படும் 2015/2016ஆம் ஆண்டு காலப்பகுதியில் அலோசியஸ் பாவித்ததாகக் கூறப்படும் கைபேசியை அவரது மகன் சிங்கப்பூரிலுள்ள நீச்சல் தடாகமொன்றில் கை தவறிவிட்டுவிட்டார் எனவும், அதன் காரணமாக அந்தத் தொலைபேசி பழுதாகிவிட்டதாகவும் அலோசியஸ் ஆணைக்குழுவின் முன்னிலையில் தெரிவித்திருந்தார்.

இத்தகைய ஒன்றுக்கொன்று முரணான சாட்சிகளால் அலோசியஸ் நடந்த உண்மைகளை வேண்டுமென்றே மறைக்க முயற்சிக்கிறார் - என்றார். (த)

# மகிந்த பெற்ற கடனை அடைப்பதற்கு மட்டும் 3.2 ட்ரில்லியன் தேவை

## அமைச்சர் மங்கள கூறுகிறார்

கொழும்பு, ஜூலை29
மகிந்த ராஜபக்ச அரசு பெற்றுக் கொண்ட கடன்களை மீளச் செலுத்த 2019ஆம் ஆண்டு 3.2 ட்ரில்லியன் ரூபா தேவைப்படுவதாக நிதியமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரசு பதவியேற்ற பின்னர், பன்னாட்டு அரங்கிலிருந்து மனித உரிமைப் பிரச்சினை, பெரும் கடன்சுமை, ஊழல் மோசடி, குப்பைப் பிரச்சினை எனப் பல்வேறு குப்பை மேடுகளைச் சுமக்க வேண்டி ஏற்பட்டது.

கடந்த ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பில் எவருக்கும் எதிராக நடவடிக்கை எடுக்கப்படவில்லையென்ற குற்றச்சாட்டு காணப்படுகிறது.

ராஜபக்ச குடும்பத்தில் வீடு வாங்கியமை, கறுப்புப் பணப் புழக்கமென 3.1 பில்லியன் ரூபா பெறுமதியான மோசடி குறித்த தகவல்கள் நீதிமன்றத்துக்கு வழங்கப்பட்டு வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளன. எனினும் வெளிநாட்டில் மறைத்து வைக்கப்பட்ட நிதி தொடர்பான விவரங்களைப் பெறமுடியாதுள்ளது.

நாட்டின் கடன்சுமைகளுக்காக இந்த வருடத்தில் அரசு 2,085 மில்லியன் டொலர்களைச் செலுத்தியுள்ளது. இதில் 72 வீதம் கடந்த அரசின் காலத்தில் பெறப்பட்ட கடன்களுக்கான கொடுப்பனவாகும்.

2019ஆம் ஆண்டாகும்போது வருடத்துக்கான கடன் மீள் கொடுப்பனவுக்காக 3.2 ட்ரில்லியன் ரூபா தேவைப்படுகிறது. இதில் 82 வீதமானது கடந்த அரசின் காலத்தில் பெறப்பட்டதாகும். இது வருமானத்தைவிட மூன்று மடங்கு அதிகமானதாகும். 2020 ஆம் ஆண்டாகும் போது 3752 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலுத்த வேண்டியிருக்கும். 2022 ஆம் ஆண்டு தலையைத் தூக்க முடியாதளவுக்குக் கடன் பெறப்பட்டுள்ளது.

பன்னாட்டு நாணய நிதியம் எமது நிதி நிலைமைகளின் பலத்தை அறிந்து உதவி வருகிறது. இவ்வாறான நிலையிலேயே வெளிநாட்டுச் செலாவணியைத் தாராளமயப்படுத்தும் வகையிலான சட்டத்தை அரசு கொண்டுவந்துள்ளது. இதனூடாக வெளிநாட்டு மூலதன முதலீடுகளை நாட்டுக்குள் கொண்டுவர முடியும்- என்றார். (த-ய)

# கிண்ணியா பள்ளிவாசலை புனரமைக்க 10 லட்சம் ரூபா

திருமலை, ஜூலை 29
போரால் பாதிக்கப்பட்ட கிண்ணியா துறையடி தக்கியத்துன் நூர் பள்ளிவாசலைப் புனரமைப்பதற்காக 10 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சால் போரால் சேதமடைந்த மதத் தலங்களுக்கு இழப்பீடு வழங்குகின்ற வேலைத்திட்டத்திற்கு அமைய குறித்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக இரண்டரை லட்சம் ரூபாவுக்கான காசோலை இராஜாங்க அமைச்சர் எம். எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாவினால் பள்ளிவாசல் தலைவர் ஏ.ஜி.எம். ஜிஹாதிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இராஜாங்க அமைச்சின் காரியாலயத்தில் வைத்து மேற்படி நிதி கையளிக்கப்பட்டுள்ளது. (த-ய)

# 7 கோடி ரூபாவுக்கு தொல்பொருள்கள் விற்பதற்கு முயன்ற ஐந்து பேர் சிக்கினர்

கொழும்பு, ஜூலை 29
மினுவாங்கொடை தேவலபொல பிரதேசத்தில் தொல்லியல் பெறுமதி மிக்க உலோகத்தால் செய்யப்பட்ட தெய்வச் சிலைகள் மற்றும் விலங்குகளின் சிலைகளை ஏழு கோடி ரூபாவுக்கு விற்பனை செய்ய முயற்சித்த 5 பேரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். பாணந்துறை வலான மோசடி தடுப்புப் பிரிவுப் பொலிஸார் இவர்களைக் கைது செய்துள்ளனர்.

சிலைகளைக் கொள்வனவு செய்யும் வர்த்தகர்கள் போன்று சென்ற பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேக நபர்களிடம் இருந்த பெறுமதி மிக்க சிலைகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (த-ய)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



கருவினுள்
12 . 05 . 1969

கர்த்தருக்குள்
29 . 06 . 2017

### அருட்திரு P.M. தேவசேனன்
(மெதடிஸ்த திருச்சபை)

அப்பாவின் அழகு முகம்
அவனியிலே எங்கு காண்பேன்?
அன்பான அவர் மொழியை
அனுதினமும் எங்கு கேட்பேன்?
அரவணைப்பில் அகமகிழ்ந்து
சொர்க்கத்தைக் கண்டிருந்தேன்
சோகத்தை விதைத்துவிட்டு
சொல்லாமல் சென்றதேனோ?
சொல்லியழ யாருமில்லை
சோதரரும் இங்கு எனக்கில்லை

தனித்திருந்து நாம் இங்கு
நாளாது தவிக்கின்றோம்
புவியிசை வாழ்வுதனை
புரியாது வெறுக்கின்றோம்
கர்த்தர் கூட கருணையின்றி
உங்கள் உயிரைப் பறித்ததேனோ?
விரைவில் உம்மை நாம்
முகமுகமாய் சந்திப்போம்
அதுவரையும் காத்திருக்கும்............

தர்ஷி, ஆன் (மனைவி, மகள்)

அன்னாருக்கு இறுதி அஞ்சலி செலுத்திய அனைவருக்கும் எமது நன்றிகள். அத்துடன் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை 01.08.2017 மாலை 5 மணியளவில் பரி.பேதுரு மெதடிஸ்த ஆலயத்தில் நடைபெறும் நன்றி செலுத்தும் வழிபாட்டிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் இரவு ஐக்கிய உணவிலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இதைத் தயவு செய்து தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

குடும்பத்தினர்.



## வீட்டுக்கிருத்திய அழைப்பு



மலர்வு
21 . 10 . 1933

உதிர்வு
16 . 07 . 2017

கடந்த (16.07.2017) ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பவிளக்கு

### அமரர் வேதாரணியம் வெற்றிவேலு
(குணிகாசலம் ஐயா)

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (30.07.2017) ஞாயிற்றுக்கிழமை 7.00 மணிக்கும் சபிண்டீகரணக்கிரியைகள் நாளை மறுதினம் (31.07.2017) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவிலும் அன்னாரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

கரம்பைக்குறிச்சி மேற்கு,
குருக்கள் குடியிருப்பு, வறணி.

குடும்பத்தினர்.

# கருத்தரங்குகளில் பங்கேற்காத அதிகாரிகளுக்குப் பணித் தடை

## பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 29

நடைபெறவுள்ள ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் மற்றும் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை ஆகியவை குறித்து நாட்டின் 38 பிரதேசங்களில் நடத்தப்பட்டு வரும் கருத்தரங்குகளுக்குச் சமுகமளிக்கத் தவறும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர்கள், உதவி மேற்பார்வையாளர்கள் மற்றும் இணைப்பதிகாரிகள் ஆகியோர் பரீட்சைப் பணிகளில் நியமிக்கப்பட மாட்டார்கள் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

இவ்விரு பரீட்சைகளும் நடத்தப்பட வேண்டிய விதம் மற்றும் மோசடிகளைத் தவிர்ப்பதற்கு எடுக்கவேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் போன்ற விடயங்கள் இந்தக் கருத்தரங்குகள் மூலம் தெளிவுபடுத்தப்படுவதாகவும், எனவே, அந்தக் கருத்தரங்குகளைத் தவிர்ப்பவர்கள் பரீட்சைப் பணிகளில் ஈடுபட அனுமதிக்கப்படமாட்டார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமான இந்தக் கருத்தரங்குகள் ஓகஸ்ட் 3ஆம் திகதி வரை தொடரவுள்ளதாகவும், நாடெங்கும் பரீட்சைப் பணிக்காக 11 ஆயிரம் அதிகாரிகள் நியமிக்கப்படவுள்ளார்கள் எனவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் கூறினார். (த)



## ஆசிய நோபல் விருது பெறும் இலங்கைத் தமிழ்ப் பெண்மணி

கொழும்பு, ஜூலை 29

ஆசியாவின் நோபல் பரிசு என்று அழைக்கப்படும் ராமன் மக்சாசே விருதுக்கு 82 வயதுடைய இலங்கைத் தமிழ்ப் பெண் சமூகச் செயற்பாட்டாளரான கெத்சி சண்முகத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

பிலிப்பைன்ஸ் அதிபராக இருந்து 1957ஆம் ஆண்டு விமான விபத்து ஒன்றில் மரணமான ராமன் மக்சாசே நினைவாக, ராமன் மக்சாசே விருது வழங்கப்பட்டு வருகின்றது.

மக்சாசே அறக்கட்டளையால் ஆண்டு தோறும் ஆறு துறைகளுக்கு இந்த விருது வழங்கப்படுகிறது. இது ஆசியாவின் நோபல் பரிசு என்று வர்ணிக்கப்படுகிறது.

இந்த ஆண்டுக்கான விருது இலங்கைத் தமிழ்ப் பெண்ணான கெத்சி சண்முகம் உள்ளிட்ட 6 பேருக்கு வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

30 ஆண்டு காலப் போரினால், பாதிக்கப்பட்ட கணவனை இழந்த பெண்கள், சிறுவர்கள், ஆதரவற்றவர்களுக்கும், போர் வலயத்தில் குண்டு வீச்சுகள் மற்றும் கைது ஆபத்தை எதிர்கொண்டவர்களுக்கும் உளவியல் ஆலோசனைகளை வழங்குபவராகவும், ஆசிரியராகவும் சிறப்பான பணியை ஆற்றியுள்ளமைக்காகவே இந்த விருது கெத்சி சண்முகத்துக்கு வழங்கப்படுவதாக மக்சாசே அறக்கட்டளை அறிவித்துள்ளது.

இந்த விருது மணிலாவில் வரும் ஓகஸ்ட் 31 ஆம் திகதி நடைபெறும் நிகழ்வில் வழங்கப்படும். (த)

# தேர்தல் ஒத்திவைப்பை எதிர்த்து நீதிமன்றத்தை நாடவுள்ள மகிந்த அணி

## தேர்தல்கள் ஆணையகத் தலைவருக்கு எழுத்து மூலம் அறிவித்தல்

கொழும்பு, ஜூலை 29

மூன்று மாகாண சபைத் தேர்தல்களை ஒத்திவைப்பதற்கு அமைச்சரவை மேற்கொண்டுள்ள தீர்மானத்துக்கு எதிராக நீதிமன்றம் செல்லவுள்ளதாக மகிந்த அணி தெரிவித்துள்ளது.

இது குறித்து தேர்தல்கள் ஆணையகத் தலைவர் மகிந்த தேசப்பிரியவுக்கு எழுத்துமூல அறிவித்தல் ஒன்றையும் அது அனுப்பியுள்ளது.

மகிந்த அணி சார்பில் முன்னாள் அயலுறவு அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், அரச தலைவர் சட்டத்தரணி ரொமேஷ் டீ சில்வாவின் மூலம் தேர்தல்கள் ஆணையாளருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில், இந்த வருடத்தின் செப்ரெம்பர், ஒக்ரோபர் மாதங்களில் பதவிக்காலம் நிறைவடையவுள்ள மூன்று மாகாண சபைத் தேர்தல்களும் உடனடியாக நடத்தப்படவேண்டுமெனவும், எந்தக் காரணத்தைக் கொண்டும் அந்தத் தேர்தல்கள் தாமதிக்கப்பட்டால் மேலதிக அறிவித்தல்கள் எதுவுமின்றி தாங்கள் நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தொடரவிருப்பதாகவும் குறிப்பிடப் பட்டுள்ளது.

நாட்டின் ஒன்பது மாகாண சபைத் தேர்தல்களையும் ஒரே நேரத்தில் நடத்தப்போவதாகக் காரணங்காட்டிப் பதவிக்காலம் முடிவடையவுள்ள மூன்று மாகாண சபைத் தேர்தல்களையும் அரசு ஒத்திவைத்திருக்கும் நிலையில், மகிந்த நீதிமன்றத்தை நாடுவது முக்கியதிருப்பமாகுமென அரசியல்அவதானிகள் கருத்து தெரிவித்துள்ளனர். (த)

## மருத்துவப் பணியாளர்களுக்கு நுளம்புக் கடித் தடுப்பு மருந்து

கொழும்பு, ஜூலை 29

அரச வைத்தியசாலைகளில் பணிபுரியும் மருத்துவர்கள் தாதியர் மற்றும் ஊழியர்கள் டெங்கு நுளம்புகளின் தாக்கத்திலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக அவர்களுக்கு உடம்பில் தடவிக்கொள்ளக்கூடிய கிரீம் வகையொன்று வழங்கப்பட்டுள்ளதாகச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

உள்நாட்டுத் தனியார் நிறுவனமொன்று தயாரித்துள்ள இந்தப் பூச்சுமருந்தின் 11,250 ரியூப்கள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஜயசுந்தர பண்டாரவிடம் கையளிக்கப்பட்டுள்ளன: டெங்கு நோயாளர்களுக்குச் சிகிச்சையளிக்கும் மருத்துவர்களும், தாதியர்களும் ஏனைய ஊழியர்களும் முன்னெச்சரிக்கையாக இந்த மருந்தை உடலில் தடவிக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனரெனவும், பொதுமக்களும் இந்த மருந்தைப் பாவிப்பது நல்லதெனவும் மருத்துவர் ஜயசுந்தர பண்டார கூறினார். (த)

# வன்புணர்வு வழக்கில் இருவருக்கு தலா 20 ஆண்டுகள் கடூழியச் சிறை

## 17 வருடங்களுக்குப் பின்னர் தீர்ப்பு

கொழும்பு, ஜூலை 29

பெண்ணொருவரை வன்புணர்வு செய்தனர் என்ற குற்றச்சாட்டின்கீழ் வழக்கு தொடரப்பட்டிருந்த இருவருக்கு கம்பகா மேல் நீதிமன்ற நீதியரசர் பிரியந்த பெர்னாண்டோ தலா இருபது ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளார்.

அத்துடன், பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு இருவரும் ஐந்து இலட்சம் ரூபாவை இழப்பீடாகச் செலுத்தவேண்டுமெனவும், அவ்வாறு செலுத்தத் தவறினால் மேலும் ஓராண்டு சிறைத் தண்டனையை அனுபவிக்கவேண்டுமெனவும் தீர்ப்பளிக்கப் பட்டது.

2002 செப்ரெம்பர் 2ஆம் திகதி லலித் பிரேமகுமார (வயது-47), இந்திக்க சம்பத் (வயது 37) ஆகிய இவர்கள் இருவரும் 49 வயதான பெண்ணொருவரை ஓட்டோவொன்றில் பலவந்தமாகக் கடத்திச்சென்று வன்புணர்வு செய்தனர் என குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. (த-ய)

**பெயர்மாற்றம்**

செம்மலை, அளம்பில், முல்லைத்தீவை வசிப்பிடமாகக் கொண்ட **செல்லையா குணமணி** ஆகிய நான் எனது பெயரை **செல்லையா சிவமணி** எனப் பெயர்மாற்றம் செய்வதோடு இனிவரும் எல்லா ஆவணங்களிலும் இப்பெயரையே பயன்படுத்துவேன் எனவும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத் தருகின்றேன்.

- **செல்லையா சிவமணி** -

**பெயர் மாற்றம்**

வீரசிங்கம் வீதி சாவகச்சேரியில் வசிக்கும் **செல்லாச்சி** ஆகிய நான் இன்றிலிருந்து எனது பெயரை **செல்லம்மா** என்று பெயர் மாற்றம் செய்தோடு இதுதொடர்பான சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**ஆ.செல்லம்மா**

**வாடகைக்கு விடப்படும்**

Tata Super ACE
வாகனம் சாரதியுடன்
வாடகைக்கு விடப்படும்.
**077 921 3835**



**நல்லூர்க் கந்தன் திருமண சேவை**

எல்லா மதம், எல்லா இனம், வெளிநாடு, உள்நாடு ஆகிய சகல திருமணங்களும் எம்மால் செய்து கொடுக்கப்படும். **நல்லூர் 25நாள் திருவிழாவை முன்னிட்டு பதிவுக் கட்டணம் அறவிடப்படமாட்டாது.**

**இல.303,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.**

**வி.ஜெயந்தி**
T.P: 077 9733 183
021 227 1468

**சாரதி தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் பிரபல நிறுவனத்துக்கு பின்வரும் பணியாளர் தேவை.

**01) சாரதி** *(Heavy Vehicle)*

தகைமையுடையவர்கள் எதிர்வரும் 31.07.2017 திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சுயவிவரக் கோவையுடன் நேரில் வருகை தரவும்

**Jaffna Electricals**
No.94(06) Stanly Road, Jaffna
T.P:- 021 222 2353 - Fax:- 021 222 1302

**வீடு வாடகைக்கு**

கோண்டாவில் கிழக்கில் சகல வசதியும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.
**076 930 1805**

**Spoken English**

சுலபமாக ஆங்கிலத்தில் கதைக்கப் பயில ஆசிரியர் **ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி** (Dip in English and Science London) வகுப்புக்கள்.
[illegible]

**கேள்வி அறிவித்தல்**
**மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்**

தவிசாளர், பெறுகைக்குழு மாவட்டச் செயலகம் சார்பாக அரசாங்க அதிபர் / மாவட்ட செயலரால் 28.07.2017 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட படகுக்கான வெளி இணைப்பு இயந்திரம் தொடர்பான கேள்வி அறிவித்தலின் முதலாவது பந்தியில் குறிப்பிடப்பட்ட சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் வாழ்வாதார உதவித் திட்டம் என்பதற்குப் பதிலாக தேசிய ஒருங்கிணைப்பு நல்லிணக்க அமைச்சின் வாழ்வாதார உதவித் திட்டம் என திருத்தம் செய்யப்படுகின்றது.

**நா.வேதநாயகன்,**
**அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலர், யாழ்.மாவட்டம்.**

சிவமயம்



**மிருசுவில் படித்த மகளிர் திட்டம் "துர்க்காபுரம்"**
**அருள்மிகு ஸ்ரீ ஞானதுர்க்கை அம்மன் தேவஸ்தான**
**அலங்கார உற்சவ விஞ்ஞாபனம் - 2017**

**ஞானதுர்க்கை அம்மன் அடியார்களே !**

தன்னை நம்பி வழிபடும் அடியார்களை காலந்தோறும் பாதுகாத்து நல்லருள் பாலித்து மிருசுவில் படித்த மகளிர் திட்டத்தில் "துர்க்காபுரம்" என்னும் ஸ்தலத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் அன்னை ஸ்ரீ ஞானதுர்க்கை அம்மனுக்கு ஏவிளம்பி வருடம் பத்து நாள்கள் அலங்கார உற்சவம் நடைபெற எல்லாம் வல்ல அம்பிகை திருவருள் ஈர்ந்துள்ளார்.

ஏவிளம்பி வருடம் ஆடி மாதம் 5ஆம் நாள் (29.07.2017) சனிக்கிழமை ஆரம்பமாகி ஆடி மாதம் 14 ஆம் நாள் (07.08.2017) திங்கட்கிழமை இறுதி நாள் தீர்த்த உற்சவத்துடன் பத்து நாள்கள் நடை பெறவுள்ளன. தினந்தோறும் காலை 9.00 மணி தொடக்கம் ஸ்தாப அபிஷேகம், பூஜை, திருவிழா என்பனவும் அதனைத் தொடர்ந்து அம்பாள் திருவீதியுலா, மகேஸ்வர பூஜையும் இடம்பெறும்.

*அடியார்கள் இவ்விழாக்காலங்களில் வருகை தந்து எல்லாம் வல்ல ஸ்ரீ ஞானதுர்க்கை அம்மன் பாதாரவிந்தத்தினை தொழுது திருவருள் பெற்று நல்வாழ்வு வாழும் வண்ணம் அழைக்கின்றோம்.*

**" துர்க்காபுரம் "**
**(படித்த மகளிர் திட்டம்**
**மிருசுவில்)**

**ஆலய தர்மகர்த்தா**
**சிவத்திரு.சின்னத்தம்பி**
**நவரத்தினம் ஐயா**

# உள்ளூராட்சித் தேர்தல்களை பிற்போட அரசு சதித் திட்டம்

## உதய கம்பன்பில குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 29
பெண் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதாகக் கூறி, உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களைப் பிற்போட



அரசு சதித்திட்டம் தீட்டி வருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில குற்றஞ்சாட்டியுள்ளார்.
உள்ளூராட்சிமன்றங்களில் பெண் பிரதிநிதித்துவத்தை 30 சதவீமாக அல்ல 50 சதவீதமாக உயர்த்தினாலும், அதனை நாம் வரவேற்போம். எனினும், பெண் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதாகக் கூறி, உள்ளூராட்சி மன்றத் தேர்தலை அரசு பிற்போடுகின்றதோ என்ற சந்தேகம் எழுந்துள்ளது என்று அவர் மேலும் கூறினார்.
(த-ய)



## ஓசன் லேடி கப்பல் வழக்கு;

# கனேடிய உயர்நீதிமன்றினால் நான்கு தமிழர்கள் விடுதலை

கொழும்பு, ஜூலை 29
எம்.வி.ஓசன் லேடி கப்பலில் இலங்கைத் தமிழ் அகதிகளை கனடாவுக்கு ஏற்றி வந்தார்கள் என்று குற்றம் சாட்டப்பட்ட நான்கு தமிழர்களும், குற்றவாளிகள் இல்லை என்று பிரிட்டிஷ் கொலம்பிய உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
இந்த வழக்கில் நேற்று முன்தினம் தீர்ப்பளித்த நீதிபதி ஆர்னே சில்வர்மன், இந்தக் கடத்தல் நடவடிக்கை ஒருங்கிணைந்த குற்றம் என்பதற்கான சாட்சியங்கள் உள்ளபோதிலும், குற்றம்சாட்டப்பட்ட நால்வரும் எந்தக் குற்றங்களிலும் தொடர்புபட்டிருந்தார்கள் என்று சந்தேகத்துக்கு அப்பாற்பட்ட வகையில் நிரூபிக்கப்படவில்லை என்று கூறியுள்ளார்.
பிரான்சிஸ் அந்தோனிமுத்து அப்புலோனப்பு, கமல்ராஜ் கந்தசாமி, ஜெயச்சந்திரன் கனகராஜ், விக்னராஜா தேவராஜ் ஆகிய நால்வருமே குற்றச்சாட்டுகளில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர்.
2009 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் ஓசன் லேடி கப்பலில் இவர்கள் கனடாவில் தஞ்சமடைந்திருந்தனர்.
நீதிபதி தீர்ப்பை அறிவித்ததும் இவர்கள் புன்னகைத்தபடி தமது சட்டவாளர்களுடன் கைகுலுக்கிக் கொண்டனர்.
கனடாவில் அடைக்கலம் தேடும் அகதிகளை இலாப நோக்கில் கடத்துவதற்கு இவர்கள் பொறுப்பாக இருந்தனர் என்று அரச தரப்புச் சட்டவாளர் வாதிட்டிருந்தார்.
ஆனால் இந்தக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை என்று நீதிபதி சில்வர்மன் தெரிவித்தார்.
ஓசன் லேடி கப்பல் 79 தமிழர்களுடன் 2009 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா கரையை அடைந்தமை குறிப்பிடத்தக்கது.
(த)

# கோத்தா பறித்த வீட்டை மீள ஒப்படைக்க உத்தரவு

## அதன் உரிமையாளரான தமிழருக்கு 5 லட்சம் நட்ட ஈடு வழங்கவும் பணிப்பு


கொழும்பில் தமிழருக்குச் சொந்தமான மூன்று மாடி வீட்டைச் சிறப்பு வர்த்தமானி அறிவிப்பின் மூலம், பாதுகாப்பு அமைச்சு சுவீகரித்தமை அடிப்படை உரிமை மீறல் என்று தீர்ப்பளித்துள்ள உயர்நீதிமன்றம், அதன் உரிமையாளருக்கு 5 இலட்சம் ரூபாவை இழப்பீடாக வழங்குமாறும் உத்தரவிட்டுள்ளது. வெள்ளவத்தையில் உள்ள மூன்று மாடி வீட்டை, 2009 ஆம் ஆண்டு டிசெம்பர் 17ஆம் திகதி வெளியிடப்பட்ட சிறப்பு வர்த்தமானி அறிவிப்பின் மூலம் பாதுகாப்பு அமைச்சு சுவீகரித்தது.
விடுதலைப் புலிகளின் போராளிகளுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்கப் பயன்படுத்தப்பட்டது என்ற சந்தேகத்தில், இந்த வீட்டில் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் தேடுதல் நடத்தியிருந்தனர். இதன் பின்னரே, பாதுகாப்பு அமைச்சினால் இந்த வீடு சுவீகரிக்கப்பட்டது.
இதற்கு எதிராக, வீட்டின் உரிமையாளர்களான சண்முகம் சிவராஜா நாகராஜா, மற்றும் அவரது மனைவி சிவராசா சரோஜினி ஆகியோர் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுத் தாக்கல் செய்திருந்தனர்.
இந்த வழக்கை விசாரித்த தலைமை நீதியரசர் பிரியசாத் டெப், நீதியரசர்கள் புவனேக அலுவிகார, அனில் குணரத்ன ஆகியோரைக் கொண்ட ஆயம், நேற்றுமுன்தினம் தீர்ப்பை அளித்தது.
இதன்படி, வெள்ளவத்தையில் உள்ள மூன்று மாடி வீட்டைச் சுவீகரித்த விடயத்தில் உரிமையாளர்களின் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளது என்றும், இதற்கு இழப்பீடாக 5 இலட்சம் ரூபாவை வழங்க வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது. தற்போது சுவிட்சர்லாந்தில் வசிக்கும் வீட்டின் உரிமையாளர்களிடம், எட்டு வாரங்களுக்குள் அதனை ஒப்படைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
பாதுகாப்புச் செயலராக கோத்தபாய ராஜபக்ச பதவி வகித்தபோதே, இந்த வீடு சுவீகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.
(த)



யாழ். வரணி குடமியன் அருள்மிகு ஆதிசிவன் தேவஸ்தான
வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் - 29.07.2017
ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான ஏவிளம்பி வருஷம் ஆடிமாத பௌர்ணமியை
முன்னிட்டு 29.07.2017 ஆடிமாதம் 13 ஆம் நாள் சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன்
ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினம் உற்சவம் இடம்பெறும் மறுநாள் பூங்காவனம்
தினசரி உற்சவம்
காலை
காலை : 9.00 மணிக்கு கும்பபூஜை
முற்பகல் : 10.30 மணிக்கு மூலஸ்தானபூஜை
முற்பகல் : 11.30 மணிக்கு வசந்த மண்டபபூஜை சுவாமி உள் வீதி வலம் வருதல்
பிற்பகல் : 1.00 மணிக்கு அன்னதானம்
மாலை
மாலை : 6.30 மணிக்கு மூலஸ்தான பூஜை
இரவு : 8.00 மணிக்கு வசந்த மண்டப பூஜை சுவாமி உள் வீதி வெளி வீதி வலம் வருதல்
05.08.2017 - சனிக்கிழமை வேட்டை சப்பரம்
06.08.2017 - ஞாயிற்றுக்கிழமை தேர் சுவாமி தேரில் 10.30 மணிக்கு ஆரோகணிப்பார்
07.08.2017 - திங்கட்கிழமை தீர்த்தோற்சவம் 10.30 மணிக்கு இடம்பெறும்
08.08.2017 - செவ்வாய்கிழமை திருக்கல்யாணம், பூங்காவனம்
சிவஸ்ரீ கதி இராமலிங்க ஐயா
ஆசியுடன்- ஆலய பிரதிஷடா உற்சவகுரு தென் இந்திய பயிற்சி குருமணி
சிவஸ்ரீ இராம. ஸ்ரீரங்கக்குருக்கள் - கொடிகாமம்
குடமியன் ஆதிசிவன் தேவஸ்தானம்
ஆலய தர்மகர்த்தா - சி.குமாரசாமி

# ஆயுதமுனையில் மைத்திரி ஆட்சி

## நல்லாட்சியின் முகம் அம்பலம் என்று மகிந்த அணி கடும் சாடல்



கொழும்பு, ஜூலை 29
மக்கள் செல்வாக்கை இழந்துள்ளதால் ஆயுத பலத்தைக்காட்டி ஆட்சியை முன்னெடுக்க வேண்டிய நிலை அரசுக்கு ஏற்பட்டுள்ளது என்றும், தொழிற்சங்கப் போராட்டங்கள் முடக்கப்படுவதால் ஜனநாயகம் கேள்விக்குறியாகியுள்ளது என்றும் மகிந்த அணி தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற அத்தியாவசிய பொதுச்சேவைகள் சட்டத்தின்கீழ், எரிபொருள் வழங்கல் மற்றும் விநியோகம் ஆகியவற்றை அத்தியாவசிய சேவையாக அறிவிக்கும் பிரகடனம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மகிந்த அணி நாடாளுமன்றக் குழுத்தலைவரான தினேஷ் குணவர்தன மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

குப்பைப் பிரச்சினை தலைதூக்கியபோது அத்தியாவசிய பொதுச்சேவைகள் சட்டத்தின் கீழ்அறிவிப்புவிடுக்கவேண்டிய நிலை அரசுக்கு ஏற்பட்டது. தற்போது தொழிற்சங்கப் போராட்டத்தைமுடக்குவதற்காக அந்தச் சட்டத்தின்கீழ் மற்றுமொரு பிரகடனம் வெளியிடப்பட்டுள்ளது.

அத்தியாவசிய சேவைகளுக்கு எரிபொருள் விநியோகிப்பதற்கு பெற்றோலிய தொழிற்சங்கத்தினர் தயாராகவே இருந்தனர். எனினும், தொழிற்சங்க நடவடிக்கையை முடக்குவதற்காகவும், இராணுவத்தை களமிறக்குவதற்காகவுமே இந்த அத்தியாவசிய மக்கள் பாதுகாப்புச் சட்டம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

தொழிற்சங்கத் தலைவர்கள் கைதுசெய்யப்பட்டுப்பொலிஸாரால் தாக்கப்பட்டுள்ளனர். வெல்லம்பிட்டிய பொலிஸாரே இந்த விடயத்தைக்கையாண்டிருக்கவேண்டும். எனினும், வெலிக்கடை பொலிஸுக்குக் கொண்டுசெல்லப்பட்டனர்.

தொழிற்சங்கத் தலைவர்கள் மீது குண்டர்குழுவை ஏவிவிட்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. கீழ்த்தரமான முறையில் அவர்கள் நடத்தப்பட்டுள்ளனர். ஆகவே, குறித்த பிரகடனத்தை அரசு திரும்பப் பெற வேண்டும் என்பதுடன், தொழிற்சங்கத்துடன் பேச்சுகளை நடத்திய பின்னரே பிரச்சினை களுக்குத் தீர்வைக் காண முன்வர வேண்டும்.

அதேவேளை, ஜனநாயகத்தைப் பற்றிப் பேசி ஆட்சிக்கு வந்த அரசின் உண்மை முகம் அம்பலமாகியுள்ளது. நல்லாட்சி நிர்வாணமாகியுள்ளது. மக்கள் செல்வாக்கை அரசு இழந்துவிட்டது. ஆயுத பலத்தால் ஆட்சி செய்யவேண்டிய நிலையே இருக்கின்றது. இதனால்தான் குண்டர் குழுவை ஏவிவிட்டுத்தாக்குதல் நடத்தப்படுகின்றது. அத்துடன், உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை நடத்தாமல் அரசு ஏகாதிபத்தியத்தை நோக்கிப் பயணித்துக்கொண்டிருக்கின்றது - என்றார். (த)

# ரணிலும் ரவியும் உடன் பதவி விலகவேண்டும்

## நாமல் எம்.பி. வலியுறுத்து



கொழும்பு, ஜூலை 29
முன்னாள் நிதி அமைச்சரும் தற்போதைய அயலுறவு அமைச்சருமான ரவி கருணாநாயக்கவின் தில்லுமுல்லுகள் பிணைமுறி மோசடி விசாரணை ஆணைக் குழுவில் அம்பலமாகியிருப்பதால் அவரும் அவருக்குத் துணைநின்ற தலைமை அமைச்சர் ரணில் விக்கிரம சிங்கவும் உடனடியாகப் பதவி விலகவேண்டும்.

இவ்வாறு மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் மூத்த மகனுமான நாமல் ராஜபக்ச வலியுறுத்தியுள்ளார்.

பிணைமுறி மோசடி விவகாரத்தில் பிரதான சூத்திரதாரியான பேர்பெச்சுவல் ட்ரஸ்ரிஸ் நிறுவனத்தின் உரிமையாளரான அர்ஜுன் அலோசியஸ், ரவி கருணாநாயக்கவுக்குத் தனது நன்றிக் கடனாக இரண்டு அதி சொகுசு வீடுகளுக்கான பெருந்தொகைக் குத்தகைப் பணத்தைச் செலுத்தியிருக்கிறார் எனவும், பொதுமக்களின் பணத்தை மோசடி செய்ததுடன், இவ்வாறு துஸ்பிரயோகம் செய்திருக்கும் ரவி கருணாநாயக்கவும் அவரின் தில்லுமுல்லுகள் தெரிந்திருந்தும் கண்டும் காணாதது போல் நடந்துகொண்ட தலைமை அமைச்சரும் தொடர்ந்தும் தங்களது பதவிகளை வக்க தகுதியற்றவர்கள் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் சாடியுள்ளார்.

ரவியின் மீது சுமத்தப்பட்டிருக்கும் இந்தக் குற்றச்சாட்டுகள் ராஜபக்ச குடும்பத்தினர் மீது சுமத்தப்பட்டிருந்தால் இந்த நேரம் அவர்கள் தயவுதாட்சண்யமின்றிச் சிறையில் தள்ளப்பட்டி ருப்பார்கள் எனவும், ரவிக்கு ஒரு நீதி, ராஜபக்சவுக்கு ஒரு நீதி என்ற தாற்பரியத்தை அரசு கைவிட்டுவிட்டுக் குற்றவாளிகளுக்கு எதிராகப் பாரபட்சமற்ற சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (த)

வாசகர்களே!!!
ஜூலை இதழ் வெளிவந்துவிட்டது
குடும்ப முன்னேற்றத்துக்கான அனைத்து ஆக்கங்களும் ஒரே சஞ்சிகையில்!
தரம் - 5
சிங்கள
மொழி
பெயர்ப்பு
வினாத்தாள்கள்
(1 + 11)
ஆசிரியர் உதயந்தி அமரதுங்க
(மௌபிம சிங்கள பத்திரிகை)
திருத்தல் சேவையுடன்
Free
மருத்துவ உணவு கையேடு
போட்டிப்பரீட்சை கையேடு




- ஆற்றல்களைத் தூண்டி சாதனைக்கு உரமூட்டுவோம்
- நாணல்
- வாருங்கள் பேசலாம் வாழ்க்கை பற்றி!
- உடற்பயிற்சி மூலம் நாம் வாழும் காலத்தை அதிகரிக்க முடியும்
- மலையகத்தை மகிமைப்படுத்திய பாரதப் பிரதமர் மோடி
- பாதங்களைப் பாதுகாப்போம்
- என் முகம்தான் என் கவிதைகளின் முகம்!
- நான் சொல்வதை கேள்

* நடைமுறை பொது அறிவு
* பொது விவேக பயிற்சிகள்
* தரம் 5 பெறுபேறுகள்

பாரதியாரின் பிள்ளைக்காதல்
இனிமை தரும் இல்லறம்

பிரதிகளைப் பெற்றுக்கொள்ள: கொழும்பு- 071- 8628372 வடக்கு: 077-6569617/071-8628369, கிழக்கு: 071-8724057, வவுனியா: 077-2772726, மலையகம்: 071 - 8724056, ஏனைய மாவட்டங்கள்: 071 - 4114990
உதயன், சுடர்ஒளி முகவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.



# பாதுகாப்புச் செயலருடன் அமெ. அலோசகர் சந்திப்பு

'கொழும்பு, ஜூலை 29
கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தில் இராணுவ ஆலோசகராகப் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள லெப்.கேணல் டக்ளஸ் ஹெஸ் பாதுகாப்புச் செயலர் கபில வைத்தியரத்னவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சில் நேற்று முன் தினம் இந்தச் சந்திப்பு இடம் பெற்றது. இரு தரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்கள் தொடர்பாக இந்தச் சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டது.

இந்தச் சந்திப்பில் பாதுகாப்பு அமைச்சின் இராணுவ இணைப்பு அதிகாரியான மேஜர் ஜெனரல் ரணவக்கவும் பங்கேற்றார்.

லெப்.கேணல் டக்ளஸ் ஹெஸ் சில நாள்களுக்கு முன்னரே, அமெரிக்க தூதரகத்தில் பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (த)



சிரியாவின் அலெப்போ நகர் போரின் எச்சக்களுடன் படிப்படியாக இயல்பு நிலைக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றது என்று பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் செய்தி வெளியிட்டது. இது தொடர்பிலான ஒளிப்படங்களையும் அது வெளியிட்டுள்ளது. (ம)

# பாக். தலைமை ...

# நவாஸ் ...
# பதவி வி...

பனாமா கேட் விவகாரத்...
குற்றவாளி என்று குறிப்பி...
அந்த நாட்டு உச்ச நீதிமன்...

இஸ்லாமபாத், ஜூலை 29
பனாமா கேட் ஊழல் வழக்கில் பாகிஸ்தான் தலைமை அமைச்சர் நவாஸ் ஷெரிப் குற்றவாளி என்று குறிப்பிட்ட பாகிஸ்தான் உச்ச நீதிமன்றம், அவர் தனது பதவியில் இருந்து விலக வேண்டும் என்றும் கட்டளை பிறப்பித்ததை அடுத்து அவர் பதவி விலகினார்.
பனாமா நாட்டில் உள்ள புகழ் பெற்ற, 'மொசாக் பொன்சேகா' சட்ட நிறுவனத்தின் உதவியுடன், பல்வேறு நாடுகளின் முக்கிய பிரமுகர்கள், வெளிநாடுகளில் சட்ட விரோதமாக முதலீடு செய்துள்ளனர்.
இதுதொடர்பான ஆவணங்கள், 'பனாமா பேப்பர்ஸ்' என்ற பெயரில் கடந்த ஆண்டு வெளியாகின. அந்த பட்டியலில் நவாஸ் ஷெரிப்பின் பெயரும் இருந்ததால், அவருக்கு எதிராக விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டது. இதன்படி பாகிஸ்தான் மத்திய புலனாய்வு அமைப்பான எப்.ஐ.ஏ.யின் கூடுதல் தலைமை இயக்குனர் வாஜித் ஜியா தலைமையில் 6 உறுப்பினர்களைக் கொண்ட கூட்டு புலனாய்வுக் குழு விசாரணை நடத்தி வந்தது. இந்த குழு முன்பாக நவாஸ்



ஷெரிப் அவரது இரு மகன்க... மகள் மற்றும் அவரது குடும்ப... தினர் பலரும் நேரில் முன்... லையாகி வாக்குமூலம் அளித்... னர்.
இதைத் தொடர்ந்து, சிறப்பு கூட்... புலனாய்வுக் குழு, தனது அறி... கையை உயர் நீதிமன்றத்துக்... அண்மையில் வழங்கியது... அதில், நவாஸ் ஷெரிப் மற்று... அவரது குடும்பத்தினர் மீதா... குற்றச்சாட்டுகள் உண்மை... தன்மை உடையன என்று தெ... விக்கப்பட்டிருந்தது. இந்த வழ... கின் தீர்ப்பு நேற்று அறிவிக்க... பட்டது. ஷெரிப் குற்றவா... என்று குறிப்பிட்ட மன்று அவ...

## பணக்கார நபர்கள் பட்டியலில் பின்தள்ளப்பட்டார் பில்கேட்ஸ்

### அமேசன் நிறுவுனர் ஜெப் முதலிடம்

நியூயோர்க், ஜூலை 29
உலகின் பணக்கார நபர்களின் பட்டியலை போர்ப்ஸ் இதழ் வெளியிட்டுள்ளது. பில்கேட்ஸைப் பின்தள்ளி முதலிடம் பிடித்தார் அமேசன் நிறுவுனர் ஜெப் பெசாஸ்.
53 வயதான பெசாஸின் சொத்து மதிப்பு சுமார் 90.6 பில்லியன் டொலர் என்று குறிப்பிடுகிறது போர்ப்ஸ். இரண்டாவது இடத்தில் பில்கேட்ஸ் உள்ளார். அவரின் சொத்து மதிப்பு 90.1 பில்லியன் அமெரிக்க டொலர். மூன்றாவது இடத்தில் ஸ்பெய்னின் தொழிலதிபர் அமெய்ன்கோ ஒட்டேகா உள்ளார். அவரின் சொத்துமதிப்பு சுமார் 83.5 பில்லியன் டொலர்கள். (ம)



ஜெப் பெசாஸ்



பில்கேட்ஸ்



அமெய்ன்கா

## கிழக்கு ஜெருசலேமில் தொடர்கிறது பதற்றம்

ஜெருசலேம், ஜூலை 29
கிழக்கு ஜெருசலேமில் இஸ்ரேலியப் பொலிஸாருக்கும் பலஸ்தீனர்களுக்கும் இடையில் தொடர்ந்தும் முறுகல் நிலை நீடித்து வருகிறது.
கிழக்கு ஜெருசலேமில் இஸ்லாமியர்களின் மூன்றாவது புனித மசூதியான அல் அக்சா மசூதி உள்ளது. இந்த மசூதிக்கு அருகில் கடந்த 14ஆம் திகதி இஸ்ரேலியப் பொலிஸார் இருவர் சுட்டுக் கொல்லப்பட்டனர். இது பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. பலஸ்தீனர்கள்தான் இந்தத் தாக்குதலை நடத்தினர் என்று குறிப்பிட்டது இஸ்ரேல். அல் அக்சா மசூதிக்குள் இருந்து சென்ற நபரே இந்தத் தாக்குதலை நடத்தினார் என்றும் தெரிவிக்கப்பட்டது. இதனால் மசூதிக்குள் ஆயுதங்களை அறிந்திடும் உலோக உணரிகளை இஸ்ரேல் பொருத்தியது. தமது புனித மசூதிக்குள் பொருத்தப்பட்ட குறித்த உணரியை இஸ்ரேல் அகற்ற வேண்டும் என்று தெரிவித்து பலஸ்தீனியர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். இந்தப் பின்னணியின் அடிப்படையிலேயே இந்தப் பதற்ற நிலை தோற்றம் பெற்றது. பின்னர் கடந்த 25ஆம் திகதி மசூதிக்குள் பூட்டப்பட்ட உலோக உணரிகளை அகற்றியது இஸ்ரேல். இதனால் கிழக்கு ஜெருசலேமில் இயல்புநிலை திரும்பும் என்று தெரிவிக்கப்பட்டபோதிலும் அங்கு பதற்றமான சூழலே தொடர்ந்தும் நடைபெற்று வருகிறது. மசூதியின் சுற்று வட்டாரப் பகுதியில் பாதுகாப்புப் பணியில் உள்ள இஸ்ரேலியப் பொலிஸாரை அங்கிருந்து திரும்பப் பெறவேண்டும் என்று பலஸ்தீனியர்களால் தற்போது வலியுறுத்தப்பட்டுள்ளது. (ம)



## வெனிசுலாவில் உள்ள அமெரிக்கர்க... நாடு திரும்புமாறு திடீர் அறிவுறுத்த...

கரஸ்கஸ், ஜூலை 29
வெனிசுலாவில் உள்ள அமெரிக்கத் தூதர்களும், ஏனைய அமெரிக்கர்களும் தத்தமது குடும்பத்துடன் நாடு திரும்ப வேண்டும் என்று வெள்ளைமாளிகை அறிவுறுத்தியது.
வெனிசுலாவில் ஆட்சி மாற்றத்தை வலியுறுத்தி பெரும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்று வருகின்றன. தலைநகர் கரஸ்கஸிலும் ஆர்ப்பாட்டம் பெரியளவில் நடைபெற்று வருகிறது. தனக்குச் சாதகமாக நாட்டின் சட்டதிட்டங்களை மாற்றவும் அந்த நாட்டின் அதிபர் மதுரோ முனைந்து வருகிறார். அரச சட்டங்களை மாற்றுவதற்கு என்றும் அங்கு தனிக் குழு உள்ளது. தற்போதுள்ள குழுவைக் கலைத்துவிட்டு புதிய குழுவுக்கான தேர்தலை நாளை நடத்துகிறார் மதுரோ. இதன் மூலம் தனக்கு ஆதரவான குழுவைக்கொண்டு வந்து தனக்குச் சாதகமான சட்டத்தை உருவாக்கிவிடலாம் என்பது மதுரோவின் என... ணம். இதனா... இன்றும் நா... யும் வெனிசு... பெரும் பதற்றநி... யில் இருக்கு... என்று எதிர்பார்க்... படுகிறது. எப்போ... வேண்டுமென்... லும் பெரியளவி... ஆர்ப்பாட்டங்க... வெடிக்கலாம் என்... நிலை. இந்தப் பி... னணியிலே... பாதுகாப்புக் கா... ணங்களுக்கா... அங்குள்ள அமெரி... கர்களை நாடு திரு... புமாறு வெள்ளை... மாளிகை பணி... துள்ளது. (ம)




## அமெரிக்காவுக்கு விரைவில் பதிலடி என்கிறார் புடின்

மொஸ்கோஇ ஜூலை 29
"அமெரிக்காவின் பொருளாதாரத் தடை அடாவடிக்குஇ ரஷ்யா பதிலடி கொடுக்கும்" இவ்வாறு தெரிவித்தார் ரஷ்ய அதிபர் புடின்.
கடந்த வருடம் நடைபெற்ற அமெரிக்க அதிபர் தேர்தலில் தலையிட்டமை, உக்ரைன், சிரியா ஆகிய நாடுகளில் தனது இராணுவத்தின் மூலம் ஆக்கிரமிப்பில் ஈடுபடுகின்றமை ஆகிய காரணங்களுக்காக ரஷ்யா மீது அண்மையில் பொருளாதத் தடை விதித்து தீர்மானம் நிறைவேற்றியது அமெரிக்க நாடாளுமன்றம். இந்தத் தடை தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே புடின் இவ்வாறு குறிப்பிட்டார்.
"நாங்கள் மிகவும் உணர்ச்சிவசப்படாமல்இ அமைதியான முறையில் நடந்து வருகிறோம். ஆனால் சில நிகழ்வுகளில் நாங்கள் பதிலடி கொடுக்க வேண்டியுள்ளது. அமெரிக்காவின் இந்த நடைமுறை ஏற்றுக் கொள்ளத்தக்கது அல்ல. நிச்சயம் பதிலடி கொடுக்கப்படும்" என புடின் மேலும் தெரிவித்தார். (ம)

# ம அமைச்சர் ஷெரிப் விலகல்

ரத்தில்
ப்பிட்டது
மன்றம்



மகன்கள்,
குடும்பத்
முன்னி
ம் அளித்த


தனது பதவியில் இருந்து விலகி விடவேண்டும் என்றும் உத்தர விட்டது. இதையடுத்தே அவர் பதவிவிலகினார். (ம)

றப்பு கூட்டு
னது அறிக்
ாறத்துக்கு
ங்கியது.
ப் மற்றும்
ர் மீதான
ண்மைத்
ன்று தெரி
ந்த வழக்
றிவிக்கப்
ற்றவாளி
ாறு அவர்

## ர்கள்
## த்தல்

எண்
இதனால்
நாளை
னிசுலா
ற்றநிலை
ருக்கும்
ர்பார்க்கப்
எப்போது
மென்றா
யளவில்
ட்டங்கள்
ாம் என்ற
ந்தப் பின்
லேயே
புக் கார
நக்கான
அமெரிக்
ாடுதிரும்
வள்ளை
பணித்
(ம)





## மடக்கிப் பிடிக்கப்பட்டது ஆபத்தான கடத்தல் குழு

தென்னமரிக்க நாடான எல்சல்வடோரில் 'மிகவும் ஆபத்தான போதைப் பொருள் கடத்தல் குழு' என்று அடையாளமிடப்பட்ட குழுவொன்றின் முக்கிய சூத்திரதாரிகள் நேற்றுமுன்தினம் மடக்கிப் பிடிக்கப்பட்டனர்.

தென்னமரிக்க நாடுகளின் முக்கிய பிரச்சினையாக போதைப் பொருள் கடத்தல் இருந்து வருகிறது. பிரேசில், வெனிசுலா, கொலம்பியா, எல் சல்வடோர், ஈக்குவாடோர், சிலி என்று எங்கு பார்த்தாலும் போதைப் பொருள் கடத்தல் அமோகமாக நடைபெறுகிறது. கடத்தலில் ஈடுபடும் குழுக்கள் அடையாளமிடப்பட்டு தேடப்பட்டு வந்தன. மாலா சல்வத்ருகா என்று குழுவும் மிகவும் ஆபத்தான குழுவாக அடையாளமிடப்பட்டது. இந்தக் குழு நேற்றுமுன்தினம் மடக்கிப் பிடிக்கப்பட்டது. அவர்களிடம் தொடர்ந்து விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. இந்தக் குழுவுடன் தொடர்புடைய வலையமைப்பு விரைவில் பிடிபட வாய்ப்புள்ளது என்று எல் சல்வடோர் பொலிஸார் தெரிவித்தனர். (ம)



## ஸ்டாலின் கைது

சென்னை, ஜூலை 29

தமிழக அரசையும், மத்திய அரசையும் கண்டித்து நடைபெறவிருந்த மனிதச் சங்கிலிப் போராட்டத்தில் பங்கேற்கச் சென்ற தி.மு. கழக செயல் தலைவர் ஸ்டாலின் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டார்.

நீட் தேர்வில் (தேசிய தகுதிகாண் நுழைவுப் பரீட்சை) இருந்து தமிழகத்துக்கு விலக்கு வழங்க வேண்டும் என்று தெரிவித்து தமிழகத்தில் பல்வேறு இடங்களில் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படுகின்றன. தி.மு. கழகத்தின் சார்பில் சேலம், ஈரோடு, நாமக்கல் ஆகிய இடங்களில் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இதில் பங்கெடுப்பதற்காகச் சென்ற தி.மு. கழகத்தின் செயல் தலைவரும், தமிழக சட்டசபை எதிர்கட்சித் தலைவருமான ஸ்டாலின் செல்லும் வழியில் வைத்துக் கைது செய்யப்பட்டார். (ம)



இந்தியாவின் குஜராத் மாநிலத்தின் ஆமதாபாத் பகுதியில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 115ஆக அதிகரித்துள்ளது. ஆமதாபாத்தின் பல பாகங்கள் வெள்ளக்காடாக மாறியுள்ளன. (ம)




உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# 30ஆம் ஆண்டு நினைவு தினம்

தமிழர்களின் அரசியல் வரலாற்றில் இன்றைய நாள் மிக முக்கியமானது. வரமாகவும், அதேநேரத்தில் சாபமாகவும் 30 வருடங்களுக்கு முன்னர் அந்த நாள் முகிழ்த்தது. 1987ஆம் ஆண்டு ஜுலை மாதம் 29ஆம் திகதி இந்திய இலங்கை ஒப்பந்தத்தில் இரு நாடுகளினதும் தலைவர்களும் கையெழுத்திட்டார்கள். இலங்கையின் சார்பில் அதன் அரச தலைவர் ஜே.ஆர்.ஜெவர்த்தனவும், இந்தியாவின் சார்பில் அதன் தலைமை அமைச்சர் ரஜீவ் காந்தியும் அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

இந்த ஒப்பந்தத்தின் விளைவாக ஏற்படுத்தப்பட்ட அரசமைப்பின் 13ஆவது திருத்தமும், அதன் வழி உருவான மாகாண சபைகளும் இன்றும் இருக்கின்றன. ஆனால், இந்திய இலங்கை ஒப்பந்தம் மட்டும் நடைமுறையில் இல்லை. ஒப்பந்தத்தின்படி அதனை முழுமையாக நிறைவேற்றும் பொறுப்பை இந்தியா கொண்டிருந்தபோதும், கடைசி வரையில் அந்தப் பொறுப்பு நிறைவேற்றப்படவேயில்லை. இரு நாடுகளுக்கு இடையிலான ஒரு ஒப்பந்தம் என்ற வகையில் இந்த பன்னாட்டு உடன்படிக்கையில் இருந்து விலகுவதாக இரு நாடுகளுமே உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை என்றாலும், உடன்படிக்கையை மெல்ல இறந்துபோகவிட்டு அவை வெறும் பார்வையாளர்களாகவே நின்றுகொண்டன. ஏனெனில், ஒப்பந்தத்தில் சம்பந்தப்பட்ட இரு தரப்புகளுக்குமே அந்த ஒப்பந்தம் மிக மிக அவசியமான ஒன்றாக இருக்கவில்லை. தமது நலன்களைத் திருப்திப்படுத்திக்கொள்ள மேற்கொள்ளப்பட்ட இராஜதந்திர நகர்வு என்ற அளவுடன் அவை இந்த விடயத்தைக் கடந்துபோய்விட்டன.

இந்த ஒப்பந்தம் மிக மோசமான விளைவுகளை ஈழத் தமிழர்களுக்குத் தந்தது என்பதில் சந்தேகமில்லை. அதேநேரம் அது சில நன்மைகளையும் செய்தது. தமிழர்களுக்கு எதிரான இனப் படுகொலைகளும் வன்முறைகளும் உலக அரங்கில் அனுதாபத்துடன் பார்க்கப்பட்டாலும், அது ஓர் உள்நாட்டு விவகாரம் என்பதாகவே ஏனைய அரசுகளால் குறுக்கப்பட்டிருந்தது. இந்திய இலங்கை உடன்படிக்கைதான் அந்த நிலையைத் தாண்டி, இலங்கைக்கு வெளியே உலக அரங்குக்கு ஈழத் தமிழர் பிரச்சினையை இழுத்தெடுத்தது.

இலங்கையில் தமிழர்கள் ஒரு தேசிய இனம் என்பதையும், வடக்கு கிழக்கு தமிழர்களின் தாயகம் என்பதையும் அந்த ஒப்பந்தம் அங்கீகரித்தது. கூட்டாட்சி ஒன்றுக்கான அடிப்படையையும் அது ஏற்படுத்தியது. எப்படியிருந்தாலும், தமிழர்களை ஓரளவுக்கு மேல் நசுக்குவது, முற்றான இன அழிப்பைச் செய்வது சாத்தியமானது இல்லை என்பதைக் கொழும்புக்கு ஆணித்தரமாகச் சொல்லி வைத்தது.

இப்படிச் சில சாதகமான பக்கங்களை இந்த ஒப்பந்தம் கொண்டிருந்தாலும், அதன் மூலம் தமிழர்களுக்குக் கிடைத்ததும் அவர்கள் அனுபவித்ததும் தாங்கொணாத் துயரம் என்பதை மறைத்துவிட முடியாது. தமிழர்களுக்கு ஆதரவாகத்தான் இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டது என்று கூறப்பட்டாலும், தமிழர்களின் எந்தத் தரப்பினதும் ஆலோசனையோ கருத்துக்களோ ஏற்கப்படாமலேயே அது செய்யப்பட்டது.

இளம் தலைவராக இருந்த ரஜீவ் காந்தியிடம் காணப்பட்ட ஆர்வக் கோளாறை இராஜதந்திர நரி எனவர்ணிக்கப்பட்ட ஜே.ஆர்.ஜெவர்த்தன நன்கு பயன்படுத்திக்கொண்டார். இந்தியாவைத் தமிழர்களுக்கு எதிராகத் திரும்ப வைத்தார். விளைவு, ரஜீவ் காந்தி படுகொலையாகியது. அதற்கான பழிவாங்கலாக முள்ளிவாய்க்கால் அவலத்தையும் நிகழ்த்தியது.

அந்த ஒப்பந்தம், தமிழர்களின் பெயரால் இந்திய நலன்களை மட்டுமே கருத்திலெடுத்தது என்பதால்தான் அதற்கூடாக எதிர்பார்க்கப்பட்ட தீர்வோ, பயனோ கடைசிவரை கிடைக்கவில்லை. தமிழர்களின் அரசியல் களநிலை இந்திய நலன்களுக்குப் பணிந்துபோகாத நிலை ஏற்பட்டபோது அந்த ஒப்பந்தம் உளுத்துச் செத்துப்போனது.

அழுதாலும் அவளேதான் பிள்ளையைப் பெற்றாக வேண்டும் என்பதற்கு இதுவொரு நல்ல பாடம்.

# முல்லை மாவட்ட குடியேற்றங்களால் தமிழர்களுக்கு பெரும் பாதிப்பு

இந்துமதி

முல்லைத்தீவு மாவட்டத்தின் இனப்பரம்பலைச் சீர்குலைக்கும் நோக்கத்துடன் குடியேற்றங்களை ஏற்படுத்துவதற்கான முன்னேற்பாடுகள் முழுவீச்சில் இடம்பெற்று வருவகின்றன என்று அங்கிருந்து கிடைக்கின்ற தகவல்கள் தெரிவிக்கின்றன. இதன் பின்னணியில் அமைச்சர் ஒருவரே உள்ளார் என்றும் தெரிய வருகின்றது.

வட மாகாணத்தைப் பொறுத்தவரையில், பிற இனத்தவர்கள் குடியேற்றப்படுவதால் பாதிக்கப்படுபவர்கள் தமிழர்களாகவே காணப்படுகின்றனர். இதில் முல்லைத்தீவு மாவட்டமே பெரிய அளவில் பாதிக்கப்பட்டு வருகின்றது. ஏற்கனவே திருகோணமலை மாவட்டத்துடனான எல்லைப்பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுவிட்டுள்ளன. மணலாறு என்ற பாரம்பரிய தமிழ்ப்பிரதேசம் சிங்களக் குடியேற்றங்களால் வெலிஓயாவெனச் சிங்களத்தில் பெயர் மாற்றம் செய்யப்பட்டு அவ்வாறே அழைக்கப்பட்டும் வருகின்றது. இதனால் முல்லைத்தீவு மாவட்டதினூடாகத் திருகோணமலைக்குப் பாதுகாப்பான பயணத்தைத் தமிழர்கள் மேற்கொள்ள முடியாத நிலை உருவாகியுள்ளது. இதைவிட அடாத்தான வகையில் தமிழர்களுக்குச் சொந்தமான காணிகள் அபகரிக்கப்பட்டுக் குடி யேற்றங்கள் ஏற்படுத்தப்படுவதோடு, பௌத்த விகாரைகளும் வகைதொகையின்றி அமைக்கப்பட்டு வருகின்றன. காலப்போக்கில் இந்த இடங்களில் தமிழர்கள் வாழ்ந்ததற்கான சான்றுகளே இல்லாமற் போய்விடும் என்பதைக் கூறத்தேவையில்லை.

## கேட்டுக் கேள்வியின்றி அழிக்கப்படும் காடுகள்

இந்த நிலையில்தான், முல்லைத்தீவு மாவட்டத்தில், பெருமளவு காடுகள் அழிக்கப்பட்டு முஸ்லிம் மக்களைக் குடியேற்றுகின்ற திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன என்று தெரிய வருகின்றது.

போர் காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பெருமளவு காடுகள் ஏற்கனவே அழிந்துபோய்விட்டன. போர் ஓய்ந்த பின்னரும் காடுகளைப் பெருமளவில் அழிக்கின்ற நடவடிக்கைகள் இடம்பெற்றன. பெருமளவு காட்டு மரங்கள் பாதுகாப்புக்குப் பொறுப்பானவர்களின் ஒத்துழைப்புடன் தென்பகுதிக்கு எடுத்துச்செல்லப்பட்டன. ஆனால் உள்ளூர் மக்கள் தமது வீட்டுத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு மரங்கள் கிடைக்காது அவதிப்பட்டுக்கொண்டிருக்கின்றனர். காடுகளிலிருந்து சிறிய தடிகளைக் கூட வெட்டி எடுத்து வருவதற்கு இவர்கள் அனுமதிக்கப்படுவதில்லை. தற்போது பெருமளவு காடுகளை அழித்து குடியேற்றத்திட்டங்கள் உருவாக்கப்படவிருப்பதால் ஏற்படப் போகின்ற எதிர்விளைவுகள் மிகவும் ஆபத்தானவை.

ஏற்கனவே முல்லைத்தீவு உட்பட வடக்கு மாவட்டங்கள் கடுமையான வறட்சியில் சிக்கித்தவிக்கின்றன. மழை வீழ்ச்சி குறைவாக இருப்பதே இதற்கான காரணமாகும். மழையை ஊக்குவிக்கும் காரணிகளில் பசுமை பிரதான பங்கை வகிக்கின்றது. மேலும் மேலும் மரங்கள் அழிக்கப்படும்போது மழைவீழ்ச்சியில் பாதிப்பு ஏற்படும். இதனால் கடுமையான வறட்சி ஏற்பட்டு நீருக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்படும். யாழ்ப்பாணம் பாலைவனமாக மாறிவிடுமென எதிர்வு கூறப்பட்டு வரும் நிலையில், வடக்கின் ஏனைய மாவட்டங்களும் இதே நிலைக்கு மாறிவிடாதென்பதை மறுக்கமுடியாது.

## திட்டமிட்ட குடியேற்றங்கள் ஆபத்தை ஏற்படுத்துபவை

இதைவிடத் திட்டமிட்ட குடியேற்றங்கள் மிகவும் ஆபத்தானவை. இதனால் அந்தப் பிரதேசத்தில் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த மக்களே பாதிப்புக்களை எதிர்கொள்கின்றனர். இது இலங்கைக்கு மட்டுமல்லாது வேறு நாடுகளுக்கும் பொருந்தும். இவ்வாறானதொரு நிலையில்தான் கிழக்குமாகாணம் தமிழர்களின் கைகளிலிருந்து பறிபோனது. வடக்குக்கும் அவ்வாறானதொரு அவலநிலை ஏற்படக்கூடிய சூழ்நிலைகள் உருவாகி வருகின்றன. இவற்றைத் தடுப்பதற்கான முயற்சிகள் எதிர்பார்த்த அளவுக்குப் பயனளிப்பதாகத் தோன்றவில்லை.


வடக்கைப் பொறுத்தவரையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாகாண சபையொன்று இயங்கி வருகின்றது. காணி தொடர்பான அதிகாரங்களைக் கொண்ட அமைச்சு முதலமைச்சர் வசமே உள்ளது. ஆனால் காணியதிகாரங்கள் வழங்கப்படவில்லையெனக் கூறிவிட்டு ஒதுங்கி நிற்கவே அவரால் முடிகின்றது. ஆனால் கண் முன்னே அநீதி இடம்பெறுவதைப் பார்த்துக்கொண்டு மாகாண சபை வாளாவிருக்க முடியாது. தம்மால் இயன்றவரை அதைத் தடுத்து நிறுத்துவதற்கு முயற்சிகளையாவது செய்தல் வேண்டும். மாகாண சபையின் சார்பில் அகிம்சைப் போராட்டங்களை நடத்தலாம். மக்களை ஒன்று திரட்டி இடம்பெற்றுக்கொண்டிருக்கின்ற அநியாயங்களை உலகுக்கு எடுத்துக் கூறலாம். தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் மாகாணசபை உறுப்பினர்களும் இதில் உடனடியாகத் தலையிட வேண்டும். தவறான செயல்கள் இடம்பெற்றால் உடனேயே தடுத்து நிறுத்த வேண்டும். இதைவிடுத்து இவர்கள் எதையுமே செய்யாது வாளாவிருந்தால் அது தமிழ் மக்களுக்கு இவர்கள் செய்கின்ற மிகப்பெரிய துரோகமாகவே கருதப்படும்.


## அரச உயர் அதிகாரிகள் அழுத்தங்களுக்கு இடம்கொடுக்காது செயற்பட வேண்டும்

முல்லைத்தீவிலுள்ள அரச உயர் அதிகாரிகள் எவரது அழுத்தங்களுக்கும் இடம்கொடாது தமது கடமைகளை நேர்மையுடன் நிறைவேற்ற வேண்டும். எவரது அழுத்தங்களுக்கும் இடம்கொடாது இவர்கள் செயற்படும் போதுதான் தமிழ் மக்களைப் பாதிப்பிலிருந்து இவர்களால் காப்பாற்றிக்கொள்ளமுடியும். அதிகாரத்தில் உள்ள அரசியல்வாதிகள் சிலரின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக ஒரு இனக் குழுமத்தைச் சேர்ந்த மக்கள் பாதிக்கப்படுவது எந்த வகையிலும் நியாயமானதல்ல.

முல்லைத்தீவின் சிங்களக் குடியேற்றத்திட்டங்கள் மகிந்த ராஜபக்ச காலத்திலேயே திட்டமிடப்பட்டன என்று கூறப்படுகின்றது. இதைத் தற்போதைய கூட்டாட்சி அரசும் அனுமதிக்க முடியாது. அதிகாரத்தில் உள்ளவர்கள் ஓர் இனத்தைப் பாதிக்கக்கூடிய வகையில் செயற்பட்டால், அது எதிர்காலத்தில் அவர்களுக்குப் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தி விடுமென்பதை நாம் ஏற்கனவே அனுபவபூர்வமாகக் கண்டறிந்துள்ளோம். இது திரும்பவும் தேவைதானா என்பதையும் சம்பந்தப்பட்ட அனைவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.







# அதிகாரத்தை கைப்பற்றுவது இளைஞர்களுக்கு எளிதானதா?

சேரலாதன்

அதிகாரங்களைக் கைப்பற்றுமாறு இளைஞர்களிடம் வடக்கு முதலமைச்சர் அறைகூவல் விடுத்தார் என்று பத்திரிகையொன்று தலைப்புச் செய்தியில் தெரிவித்திருந்தது.

இதுவொரு நல்ல விடயம்தான். இன்றைய இளைஞர்களே நாளைய தலைவர்கள் என்ற வகையில் அவர்களே நாளைக்கு அதிகாரத்தில் அமரப் போகின்றவர்கள். இதற்கு வழிவிட்டுக்கொடுப்பது மூத்த அதிகார வர்க்கத்தினரின் கடமையாகும். ஆனால் வயது முதிர்ந்த நிலையிலும் அதிகாரத்தைப் பிறருக்கு விட்டுக் கொடுக்காது அதைக்கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருப்பவர்களே எமது கண் முன்னால் காட்சி தருகின்றனர்.

இளைஞர்களுக்கு வழிவிட்டு விலகிக் கொள்ளும் எண்ணம் இவர்களது மனதில் துளியும் கிடையாது. தாமே தொடர்ந்து அதிகாரத்தில் அமர்ந்து கொள்ள வேண்டுமெனவே இவர்கள் விரும்புகின்றனர். பதவிகளில் தொடர்கின்றனர்.

அரச மற்றும் தனியார் துறைகளில் பதவிக்கு விண்ணப்பிப்பவர்களின் தகைமைகள் வரையறைசெய்யப்பட்டுள்ளன. இன்னபதவிக்கு இத்தகைய தகைமை இருக்க வேண்டுமெனவும் வகுக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த நாட்டை ஆளுகின்ற அரசியல்வாதிகளின் தகைமை தொடர்பாக எவருமே அலட்டிக் கொள்வதில்லை. அண்மையில் வெளியான தகவலின் பிரகாரம் இலங்கையின் நாடாளுமன்றத்தில் ஜி.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடையாத பலர் உறுப்பினர்களாக இருப்பது தெரிய வந்துள்ளது. அத்துடன் அரசியலில் வயதுக் கட்டுப்பாடு என எதுவுமே கிடையாது. ஆயுள் முடியும்வரைக்கும் அரசியல்வாதிகள் தமது பதவிகளில் தொடர முடியும். இதனால் வயது முதிர்ந்த பலர் அரசியல் அதிகாரங்களைக் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர்.

இந்த நிலையில், இளைஞர்கள் அதிகாரத்தைக் கைப்பற்றுவது என்பது முயற்கொம்பைத் தேடுவதற்கு ஒப்பானதான மாறிவிட்டது. அதிகாரத்தில் அமர்ந்துள்ள மூத்தவர்கள் வழிவிட்டு ஒதுங்கும் போதுதான் இளைஞர்கள் அதிகாரத்தில் அமர்ந்து கொள்ள முடியும்.

**இளவயது அரசியல்வாதிகள் எண்ணிக்கையில் குறைவானவர்களே**

இலங்கை நாடாளுமன்றத்தில் மட்டுமல்ல, வடக்கு மாகாண சபையிலும் இளைஞர்கள் என்று கூறத்தக்கவர்கள் மிகக் குறைந்த அளவிலேயே அங்கம் வகிக்கின்றனர். தமிழ்நாட்டின் அரசியல்வாதிகளில் பெரும் தலைவர் காமராசருக்குத் தனிச் சிறப்பு உள்ளது. எளிமையானவர். நேர்மையானவர். கல்விக் கண்களைத் திறந்தவர். ஏழை மாணவர்களின் பசிப்பிணியைப் போக்கியவர் என்றெல்லாம் இவர் புகழப்படுகின்றார்.

ஆனால் இவர் புரிந்த இன்னொரு சாதனையும் புகழ் பெற்றது. காமராசர் திட்டம் என அதற்குப் பெயரும் சூட்டப்பட்டது. இதன் பிரகாரம் அரசியல்வாதிகள் குறிப்பிட்ட வயதுக்கு மேல் பதவி வகிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டது. காமராசர் தாம் வகித்த பதவிகளையும் துறந்தார். இதை இளைஞர்களுக்கு அறைகூவல் விடுக்கின்ற வடக்கு முதலமைச்சர் கடைப்பிடித்தால் மிகச் சிறப்பானதாக இருக்கும். வயது முதிர்ந்த நிலையிலும் பதவிகளில் ஒட்டியிருந்து கொண்டு இளைஞர்களுக்கு அதிகாரத்தைக் கைப்பற்றுமாறு அறைகூவல் விடுப்பதால் எந்தப் பயனும் ஏற்பட்டு விடாது என்பதை அவர் முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

தமது அரசியல் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள இளைஞர்களது உதவி ஒத்தாசைகளைப் பெற்றுக் கொள்வதை அரசியல்வாதிகள் தமது வழக்கமாகக் கொண்டுள்ளனர். ஊர்வலங்களை நடத்துவதற்கும், ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதற்கும் இன்று இளைஞர்கள் தான் இவர்களால் பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றனர். அத்துடன் பொய்யான வாக்குறுதிகளை வழங்கி இளைஞர்களை ஏமாற்றுவதிலும் சிலர் ஈடுபட்டுள்ளனர். இதுவொரு மிகவும் அருவருக்கத்தக்க போக்காகும். இளைஞர்களது எதிர்காலத்தை அழிப்பதற்கு ஒப்பானதொரு செயலாகவும் இதைக் கருத வேண்டும்.

**வேலையற்ற பட்டதாரிகளது பிரச்சினையை அரசியல்வாதிகள் கணக்கில் கொள்வதில்லை**

வேலையில்லாத பட்டதாரிகளெனக் கூறிக்கொண்டு போராட்டங்களில் ஈடுபடுவதும் இளைஞர்கள் தான். இவர்கள் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் படித்துப் பட்டம் பெற்ற பின்னரும், தமது வாழ்வாதாரத்துக்காக ஒரு வேலையைத் தேடிக்கொள்வதில் எவ்வளவோ கஷ்டங்களை எதிர்கொண்டு வருகின்றனர். ஆனால் அதிகாரத்தைத் தம்வசம் கொண்டுள்ள ஆட்சியாளர்கள் இவர்களைக் கண்டு கொள்வதில்லை.


ஏனோதானோவென்ற மனப்பான்மையுடனேயே அரசியல்வாதிகள் இவர்களின் பிரச்சினையை அணுகுகின்றனர்.

வேலையற்ற பட்டதாரிகள் வடக்கு மாகாணசபைக்கு முன்பாகப் போராட்டம் நடத்தியபோது, முதலமைச்சர் கூறிய சில கருத்துக்கள் இன்றும் நினைவில் உள்ளன. அவரும் அவற்றை மறந்திருக்கமாட்டார். அவர் தான் இன்று இளைஞர்களைப் பார்த்து அதிகாரத்தைக் கைப்பற்றுங்கள் என்று கூறுகின்றார்.

அடுத்த மே தினம் தமிழ் ஈழத்தில் தானென அரசியல்வாதியொருவர் ஒரு மேதினக் கூட்ட மேடையில் கூறியதைக் கேட்டு அங்கு கூடியிருந்த இளைஞர்கள் கைதட்டி ஆரவாரம் செய்தமை இன்றும் நினைவுக்கு வருகின்றது. பல ஆண்டுகளுக்கு முன்னர் இந்தச் சம்பவம் இடம்பெற்ற போதிலும் அரசியல்வாதிகள் இளைஞர்களை அந்தந்த வேளைகளில் ஏதேதோ சாக்குபோக்குக்கள் கூறி ஏமாற்றி வருகின்றமைக்கு இதுவொரு சிறந்த உதாரணமாகும்.

**வடக்கு முதல்வரது அரசியல் தந்திரம்**

இன்று அதே பாணியில்தான் வடக்கு முதலமைச்சரும் செயற்படுகின்றமை தெளிவாகத் தெரிகின்றது. இளைஞர்கள் கூடி நிற்கின்ற இடத்தில் உருக்கமான முறையில் உரையாற்றி, அவர்களது உணர்வுகளைக் கிளறிவிடுவதால் பாதகமான விளைவுகள்தான் ஏற்படுமென்பதையும் அவர் உணர்ந்து கொண்டால் நல்லது. பதவிச் சுகத்தை அனுபவித்துக் கொண்டு, சகல சலுகைகளையும் பெற்றுக் கொண்டு, தமது எதிர்காலம் தொடர்பான வேதனையில் மூழ்கியிருக்கும் இளைஞர்களிடம் அதிகாரத்தைக் கைப்பற்றுங்களெனக் கூறுவதால் பயன் ஏதாவது கிடைக்குமா? இதெல்லாம் எப்போதோ காலாவதியாகிப் போன பழைய பாணி என்பதையும் முதல்வர் முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.



## ஆசிரியருக்கான கடிதம்

### யார் குற்றியாவது அரிசியானால் சரிதான்

கணித, விஞ்ஞான பாடங்களுக்கான ஆசிரியர் நியமனங்களுக்குப் போதியளவு பட்டதாரிகள் இல்லையெனத் தெரிகிறது. போதியளவு பட்டதாரிகள் கற்பித்தல் பணியில் ஈடுபட முன்வரும்வரை நியமனங்களைச் செய்யாதுவிட்டால் மாணவர்கள் நிச்சயம் பாதிக்கப்படுவார்கள். எனவே ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சையில் கணித விஞ்ஞான பாடங்களில் சித்தி பெற்றவர்களுக்கு ஆசிரிய நியமனங்களை வழங்கினால் அவர்களால் ஆண்டு 10இற்கும் அதற்குக் கீழுள்ள வகுப்பு மாணவர்களுக்குக் கணித விஞ்ஞான பாடங்களைக் கற்பிக்க முடியும். இத்தகையோருக்கு நியமனம் வழங்கி, குறித்ததொரு கால அவகாசம் வழங்கி அதற்குள் வெளிவாரியாகப் பட்டப்படிப்பைப் பூர்த்திசெய்ய வேண்டுமென நிபந்தனை விதிக்கலாம். பட்டதாரி ஆசிரியர்கள் ஜி.சி.ஈ. சாதாரண மற்றும் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு கணித, விஞ்ஞான பாடங்களைக் கற்பிக்கலாம்.

எனவே கல்வி விடயங்களுக்குப் பொறுப்பானவர்களும், இவற்றில் அக்கறை உள்ளவர்களும் இவற்றைக் கவனத்தில் கொள்வார்கள் என எதிர்பார்க்கிறேன்.

முன்னர் ஒரு காலகட்டத்தில் ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு ஆசிரிய நியமனங்களை வழங்கி, பின்னர் அவர்களை ஆசிரியர் பயிற்சிக்கலாசாலைக்கு அனுப்பிப் பயிற்றுவித்தனர் என்பதனையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

இந்த விடயத்தில் யார் குற்றியாவது அரிசியானால் 'சரி' என்ற முதுமொழி பொருத்தமானது என்பது எனது கருத்து.

க. பீற்றர்
சாவகச்சேரி.

# ஏலவிற்பனையில் புதிய நடைமுறைகள்

## பொருளாதார விவகாரங்கள் பிரதியமைச்சர் ஹர்ஷ டி சில்வா கருத்து



முறிகள் ஏலவிற்பனைச் செயற்பாடுகள் புதிய நடைமுறையின் கீழ் முன்னெடுக்கப்படுமென தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்களின் பிரதியமைச்சர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.


முறிகள் ஏலவிற்பனை தொடர்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே இந்தவிடயங்களை அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இது குறித்து மேலும் கருத்துரைத்துள்ள அவர்,

"புதிய நடைமுறைக்கு அமைவாக மாதந்தோறும் 15 ஆம் திகதி முறிகள் ஏலவிற்பனை இடம்பெறவுள்ளன. இரண்டு வடிவங்களாக இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் புதிய நடை முறையின் கீழ் மோசடிகள் இடம்பெறாத வகையில் முறிகள் ஏலவிற்பனையை மேற்கொள்ள வேண்டும்.

எந்த நடைமுறையாயினும் மோசடிப் பேர்வழிகளால் முறைகேடுகளில் ஈடுபட முடியும். அது குறித்துக் கவனம் செலுத்தப்படும்.

முன்னைய வழிமுறைகளின் கீழ் இடம்பெற்ற முறிகள் ஏல விற்பனையில் வெளிப்படைத் தன்மை காணப்படவில்லை. புதிய நடைமுறையின் கீழ் 100 சதவீதம் வெளிப்படைத் தன்மை பேணப்படும்" - என்றார். (ஒ)

> இரண்டு வடிவங்களாக இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் புதிய நடை முறையின் கீழ் மோசடிகள் இடம்பெறாத வகையில் முறிகள் ஏலவிற்பனையை மேற்கொள்ள வேண்டும்.



# அருணலு பரிசளிப்பு நிகழ்வு

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவப்படுத்தும் விதமாக கொமர்சல் வங்கி முன்னெடுத்து வரும் 'அருணலு பரிசளிப்பு' செயற்றிட்டத்தின் ஓர் அங்கமாக கொமர்சல் வங்கியின் யாழ்ப்பாணக் கிளை ஏற்பாடு செய்திருந்த அருணலு பரிசளிப்பு நிகழ்வுகள் அண்மையில் இடம்பெற்றது.

பாடசாலை மட்டத்தில் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பெற்றுக்கொண்ட மாணவர்களுக்கு முறையே 10 ஆயிரம் ரூபா, 7 ஆயிரத்து 500 ரூபா, 5 ஆயிரம் ரூபா பெறுமதியுடைய பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

கொமர்சல் வங்கியின் சிரேஸ்ட முகாமையாளர் ரி.தேவராஜன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ் வலயக்கல்விப் பணிப்பாளர் என்.தெய்வேந்திரராஜா, கௌரவ விருந்தினராக யாழ். இந்து ஆரம்ப பாடசாலையின் அதிபர் என்.மகேந்திரராஜா ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (ஒ)


பரதநாட்டிய அரங்கேற்றம்

உரும்பிராய் கலைக்கோயில்
அதிபர் கலாபூஷணம் ஸ்ரீமதி பத்மினி செல்வேந்திரகுமார்
அவர்களின் புதல்வி

செல்வி ஆரணி செல்வேந்திரகுமாரின்
அரங்க பிரவேசம்

காலம் : நாளை (30.07.2017) ஞாயிற்றுக்கிழமை
முற்பகல் 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இடம் : இலங்கைவேந்தன் கலைக்கல்லூரி,
63, கல்லூரி வீதி, நீராவியடி.

அனைவரும் இந் நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திரு.திருமதி செல்வேந்திரகுமார், அருண், சுஜேன்.
"கலைக்கோயில்" உரும்பிராய்.

தலைவர்
திரு.ச.லலீசன்
விரிவுரையாளர். கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை

பிரதம விருந்தினர்
பேராசிரியர் இ.விக்கினேஸ்வரன்
துணைவேந்தர். யாழ். பல்கலைக்கழகம்

கௌர விருந்தினர்கள்
"நடனவாருதி" ஸ்ரீமதி லீலாம்பிகை செல்வராஜா
"கலாகீர்த்தி" ஸ்ரீமதி சாந்தினி சிவநேசன்
"நாட்டியக்கலைமணி" ஸ்ரீமதி யசோதா விவேகானந்தன்
"கலாவித்தகர்" ஸ்ரீமதி வசந்திகுஞ்சிதபாதம்

சிறப்பு விருந்தினர்
திரு.அ.பஞ்சலிங்கம்
(முன்னாள் அதிபர். கொக்குவில் இந்துக்கல்லூரி. யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி)
திருமதி ஷிராணி மில்ஸ்
(முன்னாள் அதிபர். உடுவில் மகளிர் கல்லூரி)

அணிசேர் கலைஞர்கள்
நட்டுவாங்கம் - கலா பூஷணம் திருமதி பத்மினி செல்வேந்திரகுமார்
பாட்டு - தவமைந்தன் தவநாதன் றொபேட்
மிருதங்கம் - மிருதங்க ஞானவாரிதி சி.துரைராசா
வயலின் - சுருதிவேந்தன் அ.ஜெயராமன்



# தடைதாண்டல் பரீட்சைகளும் பிள்ளைநேயமும்

## முரண் நிலையற்ற கணிப்பீடு

டீ.ஆ தரன்

> பாடசாலை அதிபர்களும், ஆசிரியர்களும், பெற்றோர்களும் இது குறித்துச் சிந்திக்க வேண்டும். மாணவர்களிடையே அதிக சுமைகளைத் திணித்து பரீட்சைப் பெறுபேறு என்ற நிலை காண அவர்களின் உடல், உளப் பேறுகளைத் தண்டனைக்குட்படுத்தாதீர்கள். மாணவர்களின் புள்ளிகளுக்கு ஏற்ப மாவட்டத்துக்கு உரிய சித்திப் புள்ளியை கல்வி அமைச்சு வழங்குகிறது என்பதை உணர்ந்துகொள்ளுங்கள். பாடசாலை மட்டக் கற்பித்தலுடனே பரீட்சைகளைச் சந்திக்க மாணவர்களைத் தயார்ப்படுத்துங்கள்.



கல்வி என்பது அறிவார்ந்த கருவி. 'மாணவம்' என்கின்ற பருவநிலைகளைப் பதப்படுத்தும் இயல்.படிப்புரிமைகளின் இயலுமைகளை அறிவின் ஆர்வமாக்கி வாழ்க்கைப் பயணங்களை தெளிவூட்டும் கைங்கரியம்.பாகுபாடுகளின் இடைவிலகலின்றி அனைவருக்கும் கிடைத்திருக்க வேண்டிய தனித்துவ அலங்காரம்.இதனிடை திருவள்ளுவர் கல்வியின் சிறப்பை அழகாக எடுத்தியம்புகிறார்.

*"கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு*
*மாடல்ல மற்றையவை."* என்ற குறட் பாவினூடு கல்வியே அழிவு இல்லாத சிறந்த செல்வம்.ஏனையவை எல்லாமும் செல்வமே அல்ல என்கிறார் அவர்.

**கல்வி எனும் பேறு**


ஆக,இத்தகு சிறப்புடைய கல்வியின் பேற்றினை குற்றமறக் கற்க வேண்டும்.கற்ற கல்விக்கு ஏற்ப நல்ல வழியில் வாழ வேண்டும்.கல்வி எனும் பெருஞ் செல்வப் பேற்றினை கண்டு கொள்ள ஒவ்வோர் பிள்ளைகளும் சிறந்த வழிமுறைகளின் வழியே முன்கொண்டு செல்லப்பட வேண்டும்.அதற்கான நடைமுறைப்படுத்தல்களையும்,வழிகாட்டுதல்களையும் வேற்றுமையின் பிறழ்வின்றி சரிநிகர் சமானமாக அறிவின் பால் அர்த்தப்படுத்திக்கொள்ள வேண்டும்.இந்தச் செயல் நிலைப் பயணங்களில் மாணவர்களின் அடைவு சார்ந்து வரையறை பெறுகின்ற பாடத்திட்டங்களும்,அதனை செயன்முறைக்குட்படுத்தி ஊட்டம் செய்கின்ற ஆசிரியப் பணிகளும் முக்கியத்து வம் பெறுகின்றன.

இந்தநிலையிலே மாணவர்களின் அடைவு மட்டங்களை கணிப்பீடு செய்கின்ற பரீட்சைகள் முக்கிய செயலாற்றுகைப் பங்கினையும்,பாங்கினையும் கொண்டமைந்துள்ளன.அந்தப் பாங்கிலிருந்து விடுபடாது பரீட்சைகள் எப்போதுமே பாடத்திட்ட அமைவின் படியான அடைவு மட்டத்தையே முதன்மைப் படுத்த வேண்டும்.

'மாணவர் அடைவு' என்கின்ற வரையறைகளை எய்துவதற்கு அதிகபடியான உள்ளீடுகளையும்,மாணவர்கள் உடல் உள ரீதியாகப் பாதிப்புறும் காரண காரியங்களையும் செய்திருக்கக்கூடாது.உண்மையில் எப்போதுமே அடைவுக்கான வழிநடத்தல்களும் அதை கண்டுகொள்ளப் பயணிக்கும் மாணவர்களாது ஆற்றுகையும் சமனிலை பெற வேண்டும்.அதனைப் பெற்றிருக்கவே பணிசெய்ய வேண்டும்.

**கல்வி முறைமை**

அந்தவகையிலே இலங்கையின் கல்வி முறைமையில் முக்கியத்துவம் பெறுகின்ற மாணவர் அடைவு மட்டங்கள் குறித்து நோக்கப்பட வேண்டியவை.க.பொ.த சாதாரண தரம்,க.பொ.த உயர்தரம் என்கின்ற உயர் கல்வி அடைவு நிலைகளை முன்னிறுத்தி மாணவத் தனிமங்களிடையே பாய்ச்சப்படுகின்ற ஆரம்பநிலைத் தடை தாண்டல் வடிவமாக புலமைப்பரிசில் பரீட்சைகள் அமைவு பெற்றுள்ளன.இது குறித்து சிந்திக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.புலமைப் பரிசில் பரீட்சை என்பது என்ன..? ஏன் இந்தப் பரீட்சை..? என்ற வினாக்களுக்கு விடை கண்டுகொள்ள வேண்டும். இலவசக் கல்வி என்ற படிநிலையில் இங்கு வறுமை காரணமாக ஒரு பிள்ளை தனது எதிர்காலத்தை இழந்துவிடக்கூடாது என்ற நோக்கம் முன்னிலை பெறுவதுடன் இந்தப் பரீட்சையில் சித்தியடையும் பிள்ளைகளுக்கு ஊக்கத் தொகை ஒன்றை வழங்குவதனையும் அரசு திட்டமாகக் கொண்டுள்ளது. ஆனாலும் சில பாடசாலைகள் இதைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கின்றன.



புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திய டைந்த பிள்ளைகளைத் தமது பாடசாலைகளில் இணைத்துக்கொள்ளவும், அதற்குத் தனியானதொரு வெட்டுப்புள்ளியை பாடசாலை மட்டத்தில் அதிபர் தீர்மானித்துக் கொள்வதற்கான நடைமுறையுள்ளதாகவும் வெளிக்காட்டிக்கொள்கின்றன. இந்தச் செயல்நிலைகளின் வெளியாக பெற்றோரிடையே பல கேள்விநிலைகள் பதிலின்றி தொக்கிநிற்கின்றன.கல்வி அமைச்சு இந்தப் பாடசாலைகளுக்கு இவ்வாறான நடைமுறையின் கீழாகப் பிள்ளைகளை இணைத்துக் கொள்ளமுடியும் என்ற திட்டவரைவுகள் எதனையும் அனுப்பியுள்ளதா..? என்பதே அக்கேள்வியாக துருத்திக்கொண்டுள்ளது.உண்மையில் இலங்கைச் சட்டத்தின் பிரகாரம் பாடசாலைக்கு அருகில் வசிப்பவர்களுக்கும்,அவர்கள் இருக்கின்ற தூரங்களுக்கும் ஏற்பவுமே அனுமதி வழங்கத் திட்டம் உள்ளது.

**மாணவர் அடைவு மட்டமும் பரீட்சைகளும்**

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி யடைந்தவர்களுக்கு மட்டுமே இந்தப் பாடசாலைகளில் கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான அனுமதி வழங்கப்படுமெனில் நாடு முழுமையுமாக ஏன் பல தேசியப் பாடசாலைகள் அமைவு பெறவேண்டும். இதுசார்ந்து இலங்கையின் ஏனைய பிரதேசங்களை விடவும் யாழ்ப்பாணத்தை பிரதிநிதித்துவம் செய்யும் மாணவர்களே அதிகம் பாதிப்புக்கு உள்ளாகின்றனர். குறிப்பாக, கல்வி அமைச்சு இப்பரீட்சையை சாதாரண பாடசாலை மட்டத்திலேயே சித்தியடையக் கூடிய வகையில் பாடத்திட்டமாக்கிக் கொடுத்துள்ளது. ஆனாலும் மாணவர்கள் இறுதிப் பரீட்சைக்கு முன்பாக அதிகளவான மாதிரிப்பரீட்சைகளை பாடசாலைகளிலும், வேறு பிரத்தியேக வகுப்புகளிலும் தோற்றுகின்றனர். இங்கு கணிப்பிடப்படும் மாணவர் அடைவுப் பெறுமானங்களின் குறைவு என்பது பிரத்தியேக ஆசிரியரிடமும், பெற்றோரிடமும், பாடசாலை ஆசிரியரிடமும் தொடர்நிலை கொண்டு மாணவர்களுக்கு எதிரான தண்டனையாகிறது.

குறைந்த பெறுபேற்றினைப் பெற்ற மாணவர்கள் உடல், உள ரீதியான பாதிப்புகளை எதிர்கொள்கின்றனர். தவிர பிரத்தியேக மற்றும் குழு முறைக் கல்வி நிறுவனங்களை நடத்துபவர்களிடத்தே குறிப்பாக அவர்களின் கற்பித்தலில் 80 வீத சித்தி உள்ளதா என்று நோக்குமிடத்து அங்கு சித்தியின்மை இல்லை என்றவிதமான பார்வையே உண்மையாகிறது.இவர்கள் சாதாரணமாக சித்தியடையக் கூடிய பிள்ளைகளையே விசேடமாக இலக்கு வைக்கின்றனர். இவ்வாண்டு புலமைப் பரிசில் பரீட்சைகளை எதிர்கொள்ளவுள்ள மாணவர்களுக்கு வைக்கப் பட்ட மாதிரிப் பரீட்சைகள் சில மிகக் கடினமாக அமைந்திருந்ததை அவதானிக்க முடிந்தது.

போட்டிப் பரீட்சை என்ற நோக்கில் ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஒவ்வொரு வரையறுக்கப்பட்ட மாணவர் தொகை ஒதுக்கப்பட்டுள்ளதுடன் அகில இலங்கை ரீதியாக அவ்வாறான வரையறுக்கப்பட்ட செயற்றிட்டமே நடைமுறையில் உள்ளது. எனவே அனைத்து மாணவர்களும் அதிக கவனம் எடுத்துப் படிக்கும் போதும் வரையறுக்கப்பட்ட மாணவர்களே சித்தியடையும் வாய்ப்பையே கல்வி அமைச்சு வழங்கும் என்பதனையும் இங்கு குறித்து நோக்க வேண்டியுள்ளது. பரீட்சை எழுதும் அனைத்து மாணவர்களும் உயர் புள்ளி பெற்றாலும் வரையறுக்கப் பட்ட மாணவர்களே சித்தியடைவர் என்பதே கல்வி அமைச்சின் நிலைப்பாடாக காணப்படுகிறது.

**பிள்ளை நேயம்**

ஆக,பாடசாலை அதிபர்களும், ஆசிரியர்களும், பெற்றோர்களும் இது குறித்துச் சிந்திக்க வேண்டும். மாணவர்களிடையே அதிக சுமைகளைத் திணித்து பரீட்சைப் பெறுபேறு என்ற நிலை காண அவர்களின் உடல் உளப் பேறுகளைத் தண்டனைக்குட்படுத்தாதீர்கள். மாணவர்களின் புள்ளிகளுக்கு ஏற்ப மாவட்டத்துக்கு உரிய சித்திப் புள்ளியை கல்வி அமைச்சு வழங்குகிறது என்பதை உணர்ந்துகொள்ளுங்கள். பாடசாலை மட்டக் கற்பித்தலுடனே பரீட்சைகளைச் சந்திக்க மாணவர்களை தயார்ப்படுத்துங்கள்.அன்புக்குரிய பெற்றோர்களாக, ஆசிரியர்களாக நடந்துகொள்ளுங்கள்.ஆசிரியர்கள் மாணவர்கள் மீதும்,பெற்றோர் பிள்ளைகள் மீதும் கவனம் எடுங்கள்.கற்பியுங்கள். அவர்களுடைய உடல் உள விருத்தியை கருத்தில் எடுத்துச் செயற்படுங்கள். பாடத்திட்டத்தை மீறி வினாத்தாள்களை தயாரிப்பதை விடுத்து மாணவர்கள் பாதிப்புக்குள்ளாகாத வகையில் வினாத்தாள்களைத் தயாரியுங்கள்.

எனது பிள்ளை சித்தியடைய வேண்டும், எனது பாடசாலையில் தான் அதிக மாணவர் சித்தியடைய வேண்டும் என்ற செயல்நிலைகளை மாணவர் நலன் சார்ந்தும்,கற்பித்தலின் இலகு தன்மை கொண்டும் வினைத்திறனாக்கப் பணிசெய்யுங்கள்.இதுவே காலத்தின் தேவை.மாணவர் நலன் உரையும் பாதை. உணர்ந்துகொள்ளுங்கள்.

## பக்தி எழுத்து

### மக்களைக் குழப்புகின்ற செயற்பாடுகள் வேண்டாம்!

நல்லூரில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச்சம்பவம் தொடர்பாக வேறுபட்ட தகவல்கள் வெளிவருவதால் மக்கள் குழம்பி நிற்கின்றனர். மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் மீதான கொலை முயற்சியே இதுவென ஆரம்பத்தில் தெரிவிக்கப்பட்டது. நீதிபதியும் இதை உறுதி செய்திருந்தார். ஆனால் பொலிஸ் தரப்பில் இருந்து இந்தச் சம்பவம் தொடர்பாக மாறுபட்ட தகவல் வெளியிடப்பட்டிருந்தது. இதற்குப் பல தரப்பிலிருந்தும் கண்டனங்கள் எழுந்தன. பொலிஸார் நடந்த உண்மையை மறைக்கின்றனர் என்றும் கூறப்பட்டது. தற்போது இந்தச் சம்பவத்தில் தானே ஈடுபட்டேன் எனக் கூறி ஒருவர் பொலிஸாரிடம் சரணடைந்துள்ளார். அவர் வழங்கிய வாக்குமூலம் இந்தச் சம்பவத்தின் போக்கையே முற்றாகத் திசை திருப்பி விட்டது. பந்தயம் ஒன்றை நிறைவேற்றுவதற்காகவே தான் பொலிஸ் உத்தியோகத்தரின் கையிலிருந்த துப்பாக்கியைப் பறித்தேன் என்று அவர் கூறியுள்ளார். ஆனால் அவர் பல தடவைகள் துப்பாக்கிச் சூடை ஏன் மேற்கொண்டார்? என்ற கேள்விக்கு இதுவரை விடை கிடைக்கவில்லை. இந்த துப்பாக்கிச் சூட்டின் போது மற்றொரு பொலிஸ் உத்தியோகத்தரும் காயமடைந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, நீதிபதி. மா.இளஞ்செழியன் இறந்த பொலிஸ் உத்தியோகத்தரின் இரண்டு பிள்ளைகளையும் தான் தத்தெடுத்து வளர்க்கப் போகிறேன் என்று கூறியுள்ளார். தமது உயிரைக் காப்பாற்றிய அந்தப் பொலிஸ் உத்தியோகத்தரின் குடும்பத்துக்கு இதுவே தான் செய்யும் கைமாறு எனவும் அவர் தெரிவித்துள்ளார். இது அவரது மனிதாபிமானத்தைப் பிரதிபலிக்கின்றது. நீதித்துறையில் ஓர் உயர் அதிகாரியாக இருந்தபோதிலும் தமது கௌரவத்தைக் கூட மறந்து அவர் நடந்து கொண்டவிதம் மெச்சத் தக்கது. பாராட்டகூடியது.

ஆனால் இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பாக மக்கள் இன்னமும் தெளிவுபெறாத நிலையிலேயே காணப்படுகின்றனர். நீதிபதி சொல்வதை நம்புவதா? பொலிஸார் சொல்வதை நம்புவதா? அல்லது சரணடைந்தவர் கூறுவதை நம்புவதா? என அவர்கள் குழம்பி நிற்கின்றனர்.

இறந்த பொலிஸ் உத்தியோகத்தரின் குடும்பத்தினரின் சோகத்தை எவராலும் ஆற்றுகைப்படுத்தித் தணிக்க முடியாது தமது குடும்பத் தலைவரின் பிரிவிலிருந்து விடுபட அவர்களுக்கு நீண்ட காலம் தேவைப்படும். தேவையற்ற விதத்தில் அவரது உயிர் பிரிக்கப்பட்டதை எவராலும் மன்னிக்க முடியாது. உண்மையான கொலையாளி நீதியின் முன்பு நிறுத்தப்பட்டு உரிய தண்டனைக்கு உள்ளாக்கப்பட வேண்டும் என்பதே அனைவரதும் விருப்பமாகும். ஆனால் இந்தக் கொலை தொடர்பான உண்மைகள் மக்களுக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும்.

## வரலாற்றில் இன்றைய தினம் 29.07.2017

1567-ஸ்கொட்லாந்து அரசராக ஆறாம் ஜேம்ஸ் முடி சூடினார்.

1836-உலகப் பிரபலமான நினைவுச் சின்னமான ஆர்க் டி ட்றையோம்பி பிரான்ஸின் பரிசில் திறந்து வைக்கப்பட்டது.

1858-அமெரிக்காவும் ஜப்பானும் ஹரிஸ் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன.

1947-அமெரிக்காவின் மசுசெற்றில் கேப்கொட் கால்வாய் அமைக்கப்பட்டது.

1921-ஜேர்மனிய தேசிய சோசலிஸ்ட் கட்சித் தலைவரானார் அடொல்ப் ஹிட்லர்.

1945-மெல்லிசை மற்றும் மென்பொழுது போக்கு அம்சங்களுடன் பிபிஸி வானொலி நிலையம் தொடங்கப்பட்டது.

1957-பன்னாட்டு அணுசக்தி முகவரகம் நிறுவப்பட்டது.

1958-அமெரிக்க அதிபர் ஐசன்ஹோவர் ஒப்பமிட்டதை அடுத்து நாசா உருவாக்கப்பட்டது.

1981-லண்டன் செ ன். போல்ஸ் தேவாலயத்தில் நடைபெற்ற இளவரசர் சாள்ஸ் மற்றும் டயானா ஸ்பென்சரின் திருமணத்தை உலகம் பூராகவும் தொலைக்காட்சியில் 700 மில்லியன் மக்கள் பார்வையிட்டனர்.

1987-இந்தியத் தலைமை அமைச்சர் ராஜுவ் காந்தியும் இலங்கை அரசதலைவர் ஜே.ஆர். ஜெயவர்த்தனவும் இனப் பிரச்சினை தொடர்பாக இந்தோ- சிறிலங்கா ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

2010-கொங்கோ குடியரசில் ஏற்பட்ட படகு விபத்தில் 80 பேர்வரை உயிரிழந்தனர்.

2016-போர்க்குற்ற விசாரணைகளில் பன்னாட்டு நீதிபதிகள் தேவையென கிளிநொச்சி மக்கள் கோரிக்கை.



*1836-உலகப் பிரபலமான நினைவுச் சின்னமான ஆர்க் டி ட்றையோம்பி பிரான்ஸின் பரிசில் திறந்து வைக்கப்பட்டது.*

## ஆடி மாத பலன்

2017

பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி

### மீனம்

நீதி, நேர்மை, உண்மை என்று எப்போதும் பாடுபடும் மீன ராசியினரே, நீங்கள் எதிர்ப்புக்களை எளிதில் வெல்லுவீர்கள். இந்த மாதம் எந்த ஒரு சின்ன விடயம் கூட இலாபமாக நடந்து முடியும். முக்கிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும் அதனால் கௌரவம் உண்டாகும். நிலம், வாகனம் மூலம் ஆதாயம் உண்டாகும். பண வரத்துக் கூடும்.

தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட கூடுதல் இலாபம் கிடைக்கும். வங்கியில் இருப்பு கூடும். வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்தி மன நிம்மதி அடைவீர்கள். தொழில் தொடர்பான பயணங்களில் வெற்றி கிடைக்கும். செயல் திறமை மூலம் கடினமான பணியையும் சிறப்பாக செய்து முடித்து மேல் அதிகாரிகளின் பாராட்டு கிடைக்கப் பெறுவீர்கள். அதிகாரம் செய்யும் பதவிகள் தேடிவரும்.

குடும்பாதிபதி செவ்வாயின் சஞ்சாரத்தால் குடும்பத்தில் மகிழ்ச்சியும், அமைதியும் உண்டாகும். சுபகாரியம் நடக்கும். திருமண முயற்சி மேற்கொண்டவர்களுக்கு சாதகமான பயன் கிடைக்கும். கணவன் மனைவிக்கிடையே மகிழ்ச்சி நிலவும். கஷ்டமில்லா சுக வாழ்க்கை இருக்கும். உறவினர்கள் நண்பர்கள் ஆதரவும் கிடைக்கும். நெடுநாளைய சங்கடம் தீரும்.

**பெண்களுக்கு:** எல்லாவற்றிலும் இலாபம் கிடைக்கும். மரியாதையும் அந்தஸ்து கூடும்.. எதிர்ப்புக்கள் விலகும். மன மகிழ்ச்சி உண்டாகும்.

**கலைத்துறையினருக்கு:** வாக்கு வன்மையால் தொழில் சிறப்பாக நடக்கும். பழைய கடன்கள் கிடைக்கும். புதிய வாடிக்கையாளர்கள் கிடைப்பார்கள். பயணங்கள் செல்ல நேரலாம். புத்தி சாதூரியத்தால் மேல் அதிகாரிகள் கொடுத்த வேலையைச் சிறப்பாக செய்து முடிப்பார்கள்.

**அரசியல்துறையினருக்கு:** இருந்த குழப்பம் நீங்கும். மனவருத்தம் நீங்கும். தேவையான பொருள்களை வாங்கி மகிழ்வீர்கள். எதிலும் கவனமாக இருப்பது நல்லது. வெளியூர்ப் பயணங்கள் மனதிற்கு மகிழ்ச்சி தரும். கவலை வேண்டாம். கடன் விவகாரங்களில் யோசித்துச் செயற்படுவது நல்லது.

**மாணவர்களுக்கு:** கல்வியில் கூடுதல் மதிப்பெண் கிடைக்க எடுக்கும் முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும். ஆசிரியர்களின் பாராட்டும் கிடைக்கும்.

**பரிகாரம்:** குல தெய்வத்தை பூஜை செய்து வணங்க எல்லா காரியமும் வெற்றியாக முடியும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

**பூரட்டாதி 4ஆம் பாதம்:**
இந்த மாதம் புதிய முயற்சிகளை தள்ளிப்போடுவது நல்லது. எதிலும் கூடுதல் கவனத்துடன் இருப்பது நல்லது. எதிர்ப்புகள் விலகும். குடும்பத்தில் அமைதி நிலவும். அடுத்தவர்களுக்கு உதவப் போய் அதனால் அவதிப்பட்ட நேரலாம். எனவே கவனமாக இருப்பது நல்லது.

**உத்திரட்டாதி:**
இந்த மாதம் வாகனங்களில் செல்லும்போதும் பணிபுரியும் இடத்தில் ஆயுதங்களை கையாளும்போதும் கவனம் தேவை. செலவு அதிகரிக்கும். மனதில் இருந்த உற்சாகம் குறையும். தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் சற்று விழிப்புடன் இருப்பது நல்லது.

**ரேவதி:**
இந்த மாதம் பொருள்களை வாடிக்கையாளர்களுக்கு அனுப்பும்போது கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. எதிர்பார்த்த பணம் கைக்குவரத் தாமதம் ஆகலாம். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலைச்சலையும், வேலை பளுவையும் சந்திக்க நேரிடும். சிலருக்கு இட மாற்றம் உண்டாகலாம்.

### நாளை

**30.07.2017**

ஞாயிற்றுக்கிழமை

**ஆடி - 14**

திதி: ஸப்தமி மு.ப.11.39 வரை
நட்சத்திரம்: சித்திரை மு.ப. 11.19 வரை
சுபநேரம்: 09.03–10.33 வரை
ராகுகாலம்: 04.33–06.03 வரை

சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை


# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 2 | | 8 | | 7 | | | 3 |
| | 6 | | | | | 1 | 2 | 7 |
| 3 | | 7 | 5 | | | | 8 | |
| | | 4 | 9 | | | | | 2 |
| | 3 | | | | | | 1 | |
| 1 | | | | | 5 | 3 | | |
| | 8 | | | | 4 | 2 | | |
| | | 6 | | | | | 3 | |
| 9 | | | 1 | | 8 | | 6 | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 6 | 9 | 4 | 7 | 2 | 8 | 3 | 1 |
| 8 | 7 | 1 | 3 | 9 | 6 | 5 | 2 | 4 |
| 3 | 2 | 4 | 1 | 5 | 8 | 7 | 9 | 6 |
| 9 | 4 | 2 | 6 | 8 | 5 | 1 | 7 | 3 |
| 1 | 8 | 3 | 2 | 4 | 7 | 6 | 5 | 9 |
| 6 | 5 | 7 | 9 | 1 | 3 | 4 | 8 | 2 |
| 7 | 3 | 6 | 5 | 2 | 1 | 9 | 4 | 8 |
| 2 | 9 | 8 | 7 | 6 | 4 | 3 | 1 | 5 |
| 4 | 1 | 5 | 8 | 3 | 9 | 2 | 6 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. [உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்]. இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண் கள், இரண்டு தடவைகள் [மீண்டும் மீண்டும்] வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங் கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக் கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** பணியில் தடுமாற்றம் ஏற்பட வாய்ப் புண்டு. தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள், நிர்வாகத்தி னரின் அடக்குமுறைக்கு ஆளாகலாம்.

**இடபம்:** எதிர்பார்த்தசெயல்எளிதாகநிறைவேறும். தொழில், வியாபாரத்தில் சாதனை படைப்பீர்கள். இலாபம் பன்மடங்கு உயரும். பணியாளர்கள் விரும்பிய இடமாற்றம் கிடைக்கப் பெறுவர்.

**மிதுனம்:** பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் மறைமுகப் போட்டி அதிகரிக்கும். இலாபம் சுமாராக இருக்கும். உடல்நிலை சீராக இருக்கும்.

**கடகம்:** விலகிச் சென்ற உறவினர் அன்பு பாராட் டுவர். தொழில், வியாபாரம் வளர்ச்சிக்காண வாய்ப்புக் கிடைக்கும். ஆதாயம் பன்மடங்கு உயரும்.

**சிங்கம்:** குடும்ப விடயத்தைப் பிறரிடம் சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில் விடா முயற்சி தேவைப்படும். இலாபம் சீராக இருக்கும். பணியாளர்கள் பணியைத் திறம்படச் செய்வர்.

**கன்னி:** உறவினர் வருகையால் மகிழ்ச்சி அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் திட்ட மிட்ட இலக்கை நிறைவேற்றுவீர்கள். பெண்கள் வீட்டு உபயோகப் பொருளை வாங்குவர்.

**துலாம்:** மனதில் புத்துணர்வு மேலோங்கும். சத்தியத்தின் மீதான நம்பிக்கை வளரும். தொழில், வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் இடமாற்றம் கிடைக்கப் பெறுவர்.

**விருச்சிகம்:** பேச்சில் விரக்தியின் தன்மை வெளிப்படலாம். அறிமுகம் இல்லாதவரிடம் நெருக்கம் வேண்டாம். தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும்.

**தனுசு:** எதிர்பார்த்த செயல் நிறைவேறும். புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். தொழிலில் உற் பத்தி, விற்பனை அதிகரிக்கும். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்கி மகிழ்வர்.

**மகரம்:** குடும்பத்தில் இருந்த குழப்பமான சூழ் நிலை மறையும். தொழில், வியாபாரத்தில் அபி விருத்திப் பணி நிறைவேறும். இலாபம் உயரும். சுப விடயத்தில் நல்ல முடிவு கிடைக்கும்.

**கும்பம்:** பணியில் புத்துணர்வுடன் ஈடுபடு வீர்கள். கடினமான பணியும் எளிதாக நிறை வேறும். தொழில், வியாபாரத்தில் இருந்த இடை யூறு விலகும். உடல்நலனில் அக்கறை தேவை.

**மீனம்:** பேச்சில் நிதானத்தைக் கடைபிடிப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமா ராக இருக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். ஆபரணம் வாங்குவர்.



ஒரு புலி கல்யாணம் பண் ணிட்டு ரிஷப்ஷன் வச் சுது.......
சகல விலங்குகளும் விருந்து சாப்பிட்டுட்டு , புலி ஜோடியை நாலு அடி தள்ளி நின்றே வாழ்த்திட்டு போச்சு.
மாப்பிள்ள புலிக்கோ கர்வம் தாங்கல.
திடீர்னு ஒரு பூனை மட்டும் சரசரன்னு புலிக்கிட்ட போய்ட்டு கைகொடுத்து வாழ்த்துச் சொல்லிடுச்சு.
புலிக்கு ஆத்திரம் வந்துடுச்சு. பூனையப் பார்த்து கர்ஜனை யோட,
“டேய் இத்தனைப் பேரு என் னய தூரமா நின்னு வாழ்த் திட்டு போறானுங்க.....
உனக்கு மட்டும் எவ்வளவு தைரியம் இருந்தா என்கிட்ட வந்து வாழ்த்து சொல்லுவ ! நான் புலிடா” எண்டு சொல்லிச்சுது.
அந்த பூனையோ கெக்கபிக் கன்னு சிரிச்சுட்டே “அடேய் கிறுக்குப் பயலே !
நானும் கல்யாணத்துக்கு முன்ன “புலிதாண்டா” எண்டு சொல்லிட்டு ஓடிப் போச்சு !
கதையின் நீதி:
புலியைக்கூட பூனையாக மாற்றும் வல்லமை படைத்த வர்கள் பெண்கள்.



# அரசியல் படத்தில் கமலஹாசன்

தமிழ் திரையுலக முன்னணி நடிகர் கமலஹாசன் தற்போதைய அரசியல் பேச்சுகளுக்கு மத்தியில் அதிரடி அரசியல் படத்தில் நடிக்கவுள்ளார் என்ற தகவல் வெளிவந்துள்ளது.

கமலின் நடிப்பில் தூங்காவனம் என்ற படம் கடந்த 2015ஆம் ஆண்டு வெளியானது. இந்தப் படமே கமல் நாயகனாக நடித்து வெளிவந்த கடைசிப் படமாகும். அதற்கு பின்னர் 'மீன்குழம்பும் மண்பானையும்' படத்தில் சிறப்பு தோற்றத்தில் நடித்திருந்தார். தற்போது 'விஸ்வரூபம்2' படத்தில் நடித்து வருகிறார். அதேநேரத்தில் தனியார் தொலைக்காட்சி ஒன்றில், நிகழ்ச்சி ஒன்றையும் தொகுத்து வழங்குகிறார். கமல் அடுத்ததாக நடிக்கவுள்ள படம் தொடர்பில் சிக தகவல்கள் அதிகாரபூர்வமாக வெளி வந்துள்ளன. இதன்படி 'தலைவன் இருக்கிறான்' என்ற விறுவிறுப்பு அரசியல் படத் தில் கமல் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

இதுகுறித்து கமல் தெரிவித்ததாவது – “தற்போதைய அரசியல் சூழ்நிலையை கருத் தில் கொண்டு நான் இந்தப் படத்தில் நடிக்கிறேன் என்று எவரும் நினைக்க வேண் டாம். இந்தப் படத்தில் நடிக்க சில வருடங்களுக்கு முன்பே நான் முடிவு செய்துவிட் டேன். அதற்கான தலைப்பையும் முன்பே பதிவு செய்துவிட்டேன். எனவே இது தற்போதைய முடிவு கிடையாது” என்று குறிப்பிட்டார். (ம)












“நான் அல்ல... நீயே”
என்ற மனப்பான்மையே,
எல்லா நன்மைக்கும் அடிப்படை.
சுயநலத்தை உதறி விட்டு
பொது நலனுக்காக
வாழ்வை அர்ப்பணியுங்கள்.
- சுவாமி விவேகானந்தர்



# தனயன் கற்பித்த பாடம்



ஒரு ஊரில் கந்தசாமி என்ற பெரியவர் ஒருவர் இருந்தார். அவர் பெரிய செல்வந்தர். யார் உதவியுமின்றித் தன்னால் எந்தச் செயலையும் சாதிக்க முடியும் என்ற பெருமையில் எவரையும் அவர் மதிப்பதில்லை. அவர் மகனான தர்மனுக்கு இவரது இந்தப் பெருமைக் குணம் பிடிப்பதில்லை. அவரை எப்படித் திருத்துவது என்று யோசித்தபடியே தோட்டத்துக்குள் நுழைந்தான். அங்கே அவன் தந்தை ஒரு தடியைக் கொண்டு மிக உயர்ந்த முருங்கை மரத்திலிருந்து முருங்கைக் காயைப் பறிக்க முயன்று கொண்டிருந்தார். அவர் எவ்வளவோ முயன்றும் அவரால் அந்த முருங்கைக் காயைப் பறிக்க முடியவில்லை. இதைக் கவனித்துக் கொண்டிருந்த மகன் "அப்பா உங்களுக்கு நான் உதவுகிறேன்" என்றான். "இவ்வளவு வயதும் உயரமும் உள்ள என்னாலே பறிக்க முடியாததை, நீ நாலு அடி உயரத்தில் இருந்து கொண்டு பறித்து விடுவாயா?" என்று கேட்டார். "நான் முயற்சிக்கிறேன். எனக்கு நம்பிக்கை இருக்கிறது" என்றான் மகன்.

கேலிச் சிரிப்போடும் அலட்சியத்தோடும் தடியை மகனிடம் கொடுத்தார் தந்தை "அப்பா கொஞ்சம் குனியுங்கள். உங்கள் தோளில் நான் ஏறிக் கொள்ள வேண்டும்" என்றான் மகன் அவன் யோசனை அவருக்கு வியப்பைத் தந்தது. உடனே குனிந்து அவனைத் தோளில் ஏற்றிக் கொண்டார். தந்தையின் தோளில் இறுக்கமாக விழாதவாறு நின்று தடியைக் கையில் வாங்கி முருங்கை மரத்தின் காயை வெகு லாவகமாகத் தட்டி விட்டான். ஒரு நிமிடத்தில் மளமளவெனக் காய்கள் அவன் தந்தையின் காலடியில் வந்து விழுந்தன.

"எப்படி ராசா? இதையெல்லாம் கற்றுக் கொண்டாய்?" என்றார் தந்தை. "அப்பா இதுவரை நீங்கள் எவரையும் மதிப்பதில்லை. அதனால் உங்களை யாருமே மதிப்பதில்லை. உங்கள் நிலையிலிருந்து நீங்கள் இறங்கி ஒரு நிமிடம் எனக்காக குனிந்தீர்கள் அல்லவா? அந்தப் பணிவைப் பார்த்து முருங்கைக் காய்கள் கூட உங்களை மதித்து உங்கள் காலடியில் வந்து விழுந்துள்ளன" என்று கூறினான்.

அப்போது மகன் கற்பித்த பாடம் பற்றி அவர் நன்கு புரிந்து கொண்டார். அன்று முதல் அவரது கர்வம் குறைந்து போயிற்று. அப்பனுக்குப் பாடம் சொன்ன சுப்பனாக (முருகனாக) மகனை மதித்து அனைவரிடமும் அவனைப் பாராட்டி பெருமையடைந்தார் பெரியவர்.

**பணிவு ஒருவனை உயர் நிலைக்கு கொண்டு செல்லும்.**

## வாக்கியங்களில் உள்ள எழுத்துப் பிழைகளைத் திருத்தி எழுதுவோம்

1. நாம் ஒய்வு நேரங்களில் நூளகம் சென்று படிப்பது நள்ளது.

---------------------------------------------------

2. எப்போதும் சுற்றுப்புரத்தை தூய்மையாக வைத்திருப்போம்.

---------------------------------------------------

3. சிறுவர்கள் ஆகிய நாம் மாலை வேலைகளில் விழையாடுவோம்.


---------------------------------------------------

4. பரீட்சைப் பெருபேருகள் வெளிவறுவதற்கு கணினி துனை புரிகிறது.

---------------------------------------------------

5. அக்கிறாமத்தில் பூக்கலுக்கு குரைவில்லை.

---------------------------------------------------



## படத்தில் உள்ள பிராணிகளைப் பார்த்து வாக்கியங்களை முழுமை செய்வோம்

1. ------------------ பழம் தின்னும்.
2. ------------------ வேகமாக ஓடும்..
3. ------------------ கர்ஜிக்கும்.
4. உயரமான மிருகம் ------------------
5. மிருகங்களில் பெரியது ------------------
6. ------------------ மானை வேட்டையாடி உண்ணும்.
7. சிட்டுக் குருவி ------------------ இருக்கிறது.
8. தும்பிக்கை உள்ள மிருகம் ------------------

## குளோரின்

குழாய் நீரில் சில சமயங்களில் ஒரு வித நெடி வீசும். இதற்குக் காரணம் அந்த நீரில் குளோரின் கலக்கப்படுவதுதான். குளோரின் ஒரு நச்சு வாயு. நோய் உண்டாக்கும் பற்றீரியாக் கிருமிகளை அழிப்பதற்காகவே இது குழாய் நீரிலும் நீச்சல் குளத்து நீரிலும் கலக்கப்படுகிறது. இதனைச் சிறிதளவு கலப்பதால் நமக்குத் தீங்கு ஏதும் நேராது. ஆனால் இவ் வாயுவைச் சுவாசித்தால் தொண்டை பாதிக்கப்படும். அதிக நேரம் சுவாசித்தால் பெரும் பாதிப்பு ஏற்படும். முதல் உலகப் போரில் எதிரிகளை அழிக்க குளோரின் வாயுவைப் பயன்படுத்தினார்கள். குளோரின் மிகவும் பயனுள்ள வாயு. துணிகள், காகிதக் கூழ் இவற்றை வெளிறச் செய்வதற்கும் குடி நீரைத் தூய்மையாக்கு வதற்கும் குளோரின் பயன்படுகிறது. குளோரினில் அடங்கிய பல சேர்மங்கள் இன்று சாயங்கள் மருந்துகள் தீக்குச்சி வெடி மருந்து என்பவற்றைச் செய்வதற்கும் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகளிலும் உலோக வேலைகளிலும் பயன்படுகின்றன.





## தன் வினை தன்னைச் சுடும்

குரங்கிரண்டு ஒன்று கூடித்
திட்டம் போட்டன - பழத்தைக்
கொத்தித் தின்னும் பறவைகளைக்
கொல்ல நினைத்தன!

மரங்களெல்லாம் தமதெனவே
உரிமை கோரின - காய்க்கும்
மா, கொய்யா, மாதுளையும்
தமக்கே என்றன

வேடுவனின் வலைதனையும்
கவர்ந்து வந்தன - எடுத்து
விரித்து ஒரு மரத்தினிலே
போர்த்தி வைத்தன

கூட்டமான பறவை இனம்
சிக்கித் தவித்தது அவற்றை
கொன்றழிக்க குரங்குகளும்
குதித்துச் சென்றன

தாவி மரத்தில் குதிக்கையிலே
குரங்கிரண்டுமே - வலையில்
தாம் முடங்கிச் சிக்கி மனம்
தவித்து நொந்தன

பாவி அந்த வேடுவனும்
தேடி வருவானே - நம்மைப்
பற்றியவன் பிடித்து மிகக்
கொடுமை செய்வானே!

என இரண்டு குரங்குகளும்
ஏங்கித் தவித்தன - பிறரை
ஏய்த்தழிக்க முனைந்ததையே
எண்ணி வருந்தின!



**இரண்டு படங்களுக்கும் இடையே 10 வித்தியாசங்கள் உள்ளன. கண்டுபிடியுங்கள்**



# 'எரி'மலைகள்

## ஆக்கமும் அழிவின் தாக்கமும் தரும் வடிவங்கள்

செ.தமிழ்கோ

இயற்கையின் பல சக்திகள் இந்தப் பிரபஞ்சத்தில் அழிவையும் அதை ஈடுசெய்யும் வகையுடையதான ஆக்கத்தையும் கொடுத்திருக்கின்றன. எரிமலைகளும் அப்படியே. ஆக்க சக்தியின் அதிசயத் தருவிகள். பூமியில் உயிர்கள் வாழ்வதற்கு எரிமலைகள் உயர்ந்த பங்களிப்பினை வழங்கியுள்ளன.

எரிமலைகள் எமக்கு அருகிலயே அமைதியாக இருக்கும். ஆனாலும் திடீரென வெடித்துச் சிதறும். சில எரிமலைகள் எங்கே ஒளிந்திருக்கின்றன என்பதே தெரியாது. கடலுக்கு அடியில் ஒளிந்திருக்கும் எரிமலை ஹவாய் தீவுகளில் அதிகம் காணப்படுவதாகச் சொல்லப்படுகிறது.

**அசைவியக்கம்**

பூமியின் மத்தியில் உள்ள வெப்பம் என்பது பூமி உருவானபோது உண்டான ஆரம்பகால வெப்பமும், கதிரியக்கத்தினால் உண்டாகும் வெப்பமும் சேர்ந்ததே. பூமியின் மத்தியில் இருந்து அந்த வெப்பம் வெளியே வரும்போது 'மாண்டில்' எனப்படும் பகுதியிலுள்ள பாறைகளை உருக வைக்கின்றது. உருகிய பாறைகள் அடர்த்தி குறைவானதால் மேலே எழும்புகின்றன. மேலே உள்ள குளிர்ந்த பாறைகள் அடர்த்தி அதிகம் உள்ளதால் கீழாக பூமியின் மத்திய பகுதிக்கு இறங்குகின்றன. வெப்பமடைந்த பாறைகள் கீழிருந்து மேலாகவும், மேலே உள்ள குளிர்ந்த பாறை மேலிருந்து கீழே நகர்வதுமான மிக மெதுவான ஒரு சுழற்சி மாண்டில் எனப்படும் பகுதியில் நடந்து கொண்டிருக்கின்றது. அதாவது, நாம் ஆனந்தமாக வாழும் பூமியின் மேல் தட்டுக்கு கீழே தான் இந்த உருகிய பாறைகளின் நடனம் நடந்து கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

மாண்டில் பகுதியில் நடக்கும் அந்தச் சுழற்சியினால் அதன் மேல் அமர்ந்திருக்கும் நாம் வாழ்ந்துகொண்டிருக்கும் மேல்தட்டு என்பது மெல்ல நகர்ந்துகொண்டே இருகின்றது. மனித உடலில் உள்ள நகம் வளரும் வேகத்தில்தான் தட்டுக்களும் கோடிக்கணக்கான வருடங்களாக (Tectonic plate Movements) நகர்ந்துகொண்டே இருக்கின்றன. இதனை நாம் உணர்வதில்லை.

நாம் வாழும் பூமியின் மேல்தட்டு என்பது ஆங்காங்கே பிளவுபட்டுள்ளதாக கூறப்படுகிறது. இது ஆபத்தான நிலை.

பிளவுபட்டுள்ள தட்டுக்கள் அதற்கு கீழே உள்ள மேற்கூறிய உருகிய பாறைகளின் நகர்வினால் ஒன்றன் மீது ஒன்று மோதுவதும் பக்கவாட்டில் உரசிக்கொள்வதும், ஒன்றை விட்டு ஒன்று பிரிந்து செல்வதுமாக இருக்கின்றன. மேல் தட்டின் இந்த அசைவுகளால் அதன் கீழேயுள்ள உருகிய பாறைகள் மேல்தட்டின் பிளவுகளுக்கிடையேயும், மேல்தட்டை பிளந்துகொண்டும் பூமிக்கு வெளியாக லாவா எனப்படும் அக்கினி குழம்பாக வெளிவருகின்றது.

**எண்ணிக்கை**

உலகில் அண்ணளவாக ஆயிரத்து 500 உயிரோட்டமான எரிமலைகள் உள்ளன. பசுபிக் கடலைச் சுற்றி உள்ள 'நெருப்பு வளையம்' எனப்படும் வலையத்தில்தான் பெரும்பாலான எரிமலைகள் இருக்கின்றன. மேலும் இத்தாலி, இந்தோனேசியா, அமெரிக்கா, சிலி, கொலம்பியா, மெக்சிக்கோ மற்றும் ஆர்ஜென்ரீனா ஆகிய நாடுகளில் எரிமலைகள் காணப்படுகின்றன.

**தனித்துவமான எரிமலைகள்**


பூமியில் சூப்பர் எரிமலைகள் ஆங்காங்கே இருக்கின்றன. அவை சாதாரண எரிமலைகளை விடவும் ஆயிரம் மடங்கு அபாயகரமானவை. அவைகள் கக்கும் நெருப்புக் குழம்புகள் அதிக சேதத்தை ஏற்படுத்துவதுடன் அதனுடைய புகை பூமி முழுவதும் சுற்றிச் சூரிய ஒளியை பல ஆண்டுகளுக்கு மறைத்து ஒரு சிறிய பனியுகத்தையே உண்டாக்கி பூமியில் உயிர்வாழ்தலை கடினமாக்கிவிடும். பூமியை அழிக்கும் வல்லமையுள்ள இவ்வகை எரிமலைகளுள் சில கடலுக்கு அடியிலும் ஏனையவை பிற இடங்களிலும் ஒளிந்திருக்கின்றன. அவைகளை கண்டுபிடிக்க அறிவியலாளர்கள் முயற்சி செய்து கொண்டிருக்கின்றனர்.

**உயிர் தந்த சக்தி**

பூமியில் உயிர்கள் உண்டாவதற்கு புவியைத் தாக்கிய வால் நட்சத்திரங்களும், விண்வெளிப் பாறைகளும் அவற்றோடு இந்த எரிமலைகளும் காரணமாயிருந்திருக்கின்றன என்று அறிவியலாளர்கள் கூறுகின்றனர். ஓர் உயிர் உண்டாவதற்குத் தேவையான இரசாயன மூலக்கூறுகள், வெப்பம், மற்றும் நீர் போன்றவற்றை எரிமலைகள் கொடுத்தன.

பூமிக்கு அடியில் உள்ள உயிர் உருவாகத் தேவையான இரசாயனப் பொருள்கள் எரிமலையினால் தான் பூமியின் மேற் பரப்புக்கு வந்தன. எரிமலைகள் தான் பூமிக்கு அடியில் உள்ள நீராவியையும் வெளியே கொண்டு வந்தன. இந்த நீராவி மழையாகப் பொழிந்து புவிக்கு தண்ணீர் கொடுத்தது.

பூமியில் தண்ணீர் இருப்பதற்கு பூமியின் மேல் மோதிய சில வால் நட்சத்திரங்களும், எரிமலைகள் வெளிக்கொணர்ந்ததான நீராவியும் தான் காரணம் என்று அறிவியலாளர்கள் கூறுகின்றனர். வால் நட்சத்திரங்கள் என்பது பனிக்கட்டியாலும் பாறைகளாலும் ஆனவைதான். சாதாரணமாக சூரியனை விட்டு வெகு தொலைவில் இருக்கும் இவை தம் பாதையிலிருந்து மாறி சூரியனை நெருங்கும் போது சூரியனின் வெப்பத்தினால் இந்த பனிக்கட்டிகள் உருகி நீராவியாகிவிட அந்த நீராவியும், தூசுக்களும் வால் போல நீண்டு காட்சி தருகின்றன.




**பனியின் ஆட்சிக்காலம்**

பூமியை சில ஆயிரம் வருடங்களுக்கு ஒரு முறை பனியுகம் ஆட்கொள்ளும். பூமியின் பெரும் பகுதி பனியினால் மூடி மறைக்கப்படும். இப்போது புவியின் வட துருவமும், தென் துருவமும் பனியினால் மூடப்பட்டிருப்பதுபோல, புவி முழுமையுமாக பனி படர்ந்திருக்கும். இப்போது நம் காணும் வட,தென் துருவப் பனிப் பிரதேசங்கள் கடந்த பனியுகத்தின் தொடர்ச்சி எனவே சொல்லப்படுகிறது.

பனியுகத்தின் போது கடுங்குளிரினால் பயிர் வளர்ச்சி தடைப்படும். அதனால் உயிர்கள் வாழ்வதற்கும், பரிணாம வளர்ச்சி அடைவதற்கும் மிகப்பெரிய தடங்கல்கள் ஏற்படும். இம்மாதிரியான ஒரு பனியுகத்தில் பூமி சிக்கிக் கொண்டு உயிர்கள் எல்லாம் அழியும் நிலை வந்தபோதுதான் எரிமலைகள் அந்த சிக்கலை முடிவுக்கு கொண்டு வந்து பூமியை காப்பாற்றியிருக்கின்றன. எரிமலைகள் குமுறி அதிர்வுறும் போது காபனீரொக்சைட் என்ற கரியமில வாயு வெளிவரும். இந்த வாயுவுக்கு சூரியனின் வெப்பத்தை பிடித்து வைக்கக் கூடிய குணம் உண்டு. புவி மீண்டும் வெப்பமடைவதற்கு இந்த வாயுவே காரணமாகவும் அமைகிறது. எரிமலைகள் இந்த வாயுவை அதிகமாக வெளியிட்டதனால் புவி அந்தக் கடுமையான பனி யுகத்திலிருந்து மீண்டு கொண்டதாக அறிவியலாளர்கள் கூறுகின்றனர்.

**புதிய நிலப்பரப்புகளின் உருவாக்கமும் உணவு வழங்கலும்**

காபனீரொக்சைட்டிலிருந்து காபன் என்ற தனிமத்தை எடுத்துக் கொண்டு 'காபோஹைட்ரேட்" என்ற மாச்சத்தை பயிர்கள் தயாரிக்கின்றன. அதைத் உண்டுதான் மிருகங்களும், மனிதர்களான நாமும் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். காபனீரொக்சைட் வாயுவை எடுத்துக்கொண்ட மரங்கள் அதிலிருந்து பிராணவாயுவை பிரித்தெடுத்துக் கொடுத்து நாம் உயிர்வாழ்வதை உறுதி செய்கின்றன.

பூமியின் மேற்பரப்புக்கும் வளிமண்டலத்துக்கும் காபனீரொக்சைட்டை வழங்கியதில் எரிமலைகளின் பங்கு மிகப் பெரியது.

எரிமலைகளிலிருந்து வெளி வரும் லாவா எனப்படும் எரிமலைக் குழம்புகள் காலப் போக்கில் பயிர் நன்கு வளர்வதற்கு வேண்டிய எல்லா வளமும் கொண்ட செழிப்பான மண்ணை வழங்குகிறது. விவசாயிகள் நிலத்துக்கு உரம் இடுவது போல பயிர்கள் நன்கு வளர புதிதான வளங்களை எரிமலைகள் கொடுத்து வந்திருக்கின்றன.

ஹவாய் தீவுகள் ஒரு வளர்ந்து கொண்டிருக்கும் தீவுக்கூட்டம் என்று அறியப்படுகிறது. காரணம் அந்தத் தீவுகளில் உள்ள எரிமலைகளில் இருந்து லாவா எனப்படும் எரிமலைக் குழம்புகள் தொடர்ந்தும் பல ஆண்டுகளாக பூமியின் உள்ளிருந்து வெளியே வந்து கடலில் வீழ்ந்து கொண்டே இருக்கின்றன. இவ்வாறு கடலில் விழும் குழம்புகள் குளிர்ந்து புதிய நிலப்பரப்பாகிறது. பூமியின் நிலப்பரப்பில் பெரும் பகுதி இவ்வாறு எரிமலைகளால் உண்டாக்கப்பட்டது என அறிவியலாளர்கள் கூறுகின்றனர்.

**தேடல்**

பூமியை மட்டுமே நம்பிக்கொண்டிருந்தால் போதாது. அதற்கு ஆபத்து எப்போது வேண்டுமானாலும் வரலாம் என்று மனித இனத்திற்கு வேறொரு இடத்தை தேடிக் கொண்டிருக்கும் அறிவியலாளர்கள் கருதுகின்றனர். தவிர வேறொரு கோளை கண்டுகொண்டால் அதில் எரிமலைகள் இருக்கின்றனவா என்று முதலில் தேடுகின்றனர். எரிமலைகள் இல்லையென்றால் அந்தக் கோளை ஒரு இறந்துபோன கோளாகவே கருதுகின்றனர்.

செவ்வாயில் எரிமலைகள் இருப்பதனை முதலில் கண்டவுடன் மகிழ்ச்சியடைந்த அறிவியலாளர்கள் பின்னர் அது வெகு நாட்களாக செயல் இழந்திருப்பதைக் கண்டனர். அங்கு உயிர்கள் பரிணாம வளர்ச்சி அடைய வாய்ப்புக்கள் குறைவு என்பதான முடிவுக்கு வந்தனர். உயிர்களின் தோற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் எரிமலைகள் எவ்வளவு இன்றியமையாதவை என்பதை இந்த விடயங்கள் எடுத்துக் காட்டுகின்றன. எரிமலைகள் அழிவு சக்தியாய் இருந்த போதும், அது ஒரு பெரும் ஆக்க சக்தியாக இருந்திருக்கின்றது என்பதை மறுக்க முடியாது.

## செங்கோல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாக அறிவிக்கும் பிரகடனத்தை அங்கீகரிக்கும் பிரேரணைமீதான விவாதம் ஆரம்பமானது.

இதன்போது ஏற்பட்ட சர்ச்சையால் நாடாளுமன்றம் 4 ஆம் திகதிவரை சபாநாயகரால் ஒத்திவைக்கப்பட்டது.

எனினும், பொது எதிரணியும், ஜே.வி.பி உறுப்பினர்களும் சபை [illegible] வழமையாக நாடாளுமன்றம் கூடுவதற்கு முன்னர் 'கோரம்' மணி ஒலிக்க விடப்படும். எனவே, ஒத்திவைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்டும் நோக்கில் 'கோரம்' மணியை மகிந்த அணியினர் ஒலிக்கவிட்டனர்.

இதனால், பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இதுவரையில் நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்ட பின்னர் இவ்வாறு 'கோரம்' மணி ஒலிக்கவிடப்பட்டதில்லை.

இதற்கிடையில் பிரசன்ன ரணதுங்க அரச தலைவர் ஆசனத்தில் அமர்ந்தார். அதைப் பொது எதிரணி உறுப்பினர்கள் கைதட்டி வரவேற்றனர்.

பின்னர், நாடாளுமன்ற உறுப்பினர் பிரியங்க ஜயரட்னவை சபாநாயகராக நியமிக்கு மாறு ரஞ்சித் டி சொய்சா யோசனை முன்வைத்தார். அவரும் சபாநாயகர் கதிரையில் அமர்ந்தார்.

அதன் பின்னர் பிரசன்ன ரணவீர, ரஞ்சித் டி சொய்ஷா ஆகியோர் உரையாற்றினர். மகிந்த அணியின் ஏனைய உறுப்பினர்கள் இதை சிரித்தபடியே பார்த்து இரசித்துக்கொண்டிருந்தனர். சபாநாயகரையும், அரசையும் கடுமையாகச் சாடினர். சிரித்தபடியே ஜே.வி.பியினரும் அவையிலிருந்து வெளியேறினர்.

அரச தலைவர், தலைமை அமைச்சர் ஆகியோரின் கதிரைகளில் வேறு எவரும் அமர்வதில்லை. அது முரணான விடயமாகவே பார்க்கப்படும். அத்துடன், சபாநாயகர் கதிரையில் அமர்ந்து சபாபீடத்தை அவமதிக்கும் வகையிலும் செயற்பட முடியாது.

இது பற்றி மகிந்த அணி உறுப்பினர்களிடம் கேட்டபோது, "நாடாளுமன்றம் சம்பிரதாயபூர்வமாக ஒத்திவைக்கப்படவில்லை. அத்துடன், சபை ஒத்திவைக்கப்பட்ட பின்னர் இப்படி செயற்படுவது தவறான விடயமல்ல" என்று பதிலளித்தனர். (கு)

## மாந்தை...

குழி தொடர்பான வழக்கு மன்னார் நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு வந்தது. நீதிச் சேவை ஆணைக்குழுவின் அறிவிப்பு எதுவும் மன்றுக்குக் கிடைக்கவில்லை. எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 10 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

"மன்னார் நீதிமன்றின் முன்னைய நீதிவானும் தற்போதைய நீதிவானும் மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கு விசாரணை தொடர்பில் முரண்பாடாக காணாமல் ஆக்கப்பட்டவர்களது உறவினர்களுக்குச் சார்பாகச் செயற்பட்டு வருவதாகவும், அரச சட்டத்தரணி மீதும் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் மீதும் கடுமையாக நடந்துகொள்வதாகவும் குற்றச் சாட்டுக்கள் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளன" என்று காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களின் குடும்ப உறவுகள் சார்பாக மன்றில் முற்படும் சட்டத்தரணிகளுள் ஒருவரான வி.எஸ்.நிரஞ்சன் தெரிவித்தார்.

"குற்றச்சாட்டுத் தொடர்பில் நீதிச் சேவைகள் ஆணைக்குழு தற்போதைய நீதிவானிடம் பதில் கோரியிருந்தது. அதற்கான பதிலை நீதிவான் அனுப்பியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கை வேறொரு நீதிமன்றுக்கு மாற்றுமாறும் கோரப்பட்டுள்ளது. அதன் உள்நோக்கம் நீதிபதியை மாற்றுமாறு கோரியிருப்பதாகக் கருதமுடிகிறது" என்று நிரஞ்சன் மேலும் குறிப்பிட்டார்.

புதைகுழியில் மீட்கப்பட்ட எலும்பு எச்சங்கள் குறித்த சிறப்பு ஆய்வு செய்யும் வசதிகள் இலங்கையில் இல்லை. அதனால் பன்னாட்டு நிபுணர்களைக்கொண்டு ஏற்கனவே எடுக்கப்பட்ட மனித எச்சங்களை ஆய்வு செய்வது என்று மன்றில் முன்வைக்கப்பட்ட கோரிக்கை ஏற்கப்பட்டது. அது தொடர்பான கட்டளை ஒன்று வழங்கப்பட இருந்தது. இந்த நிலையில் தற்போதைய நீதிவானுக்கு எதிராக முறையிடப்பட்டுள்ளது. நேற்றைய இந்த வழக்கில் சட்டத்தரணிகளான எம்.எம்.சபூர்தீன், ஜெபநேசன் லோகு மற்றும் எஸ்.பிரிமூஸ் சிறாய்வா ஆகியோர் முற்பட்டிருந்தனர். (த-4-56)

## மரண அறிவித்தல்



### விஜயரட்ணம் விஜயகுமார்

உரும்பிராயை பிறப்பிடமாகவும் பிரான்சை வதிவிடமாகவும் கொண்ட விஜயரட்ணம் விஜயகுமார் (ஜிம்மி) கடந்த (20.07.2017) பிரான்சில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விஜயரட்ணம் தங்கரட்ணம் தம்பதிகளின் அன்பு புதல்வனும் யோகேஸ்வரியின் அன்புக் கணவரும் விஜயகாந்தனின் சகோதரனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**திருமதி. விஜயகுமாரும் குடும்பத்தினரும்.**

**உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.**

## மரண அறிவித்தல்

### திருமதி தங்கம்மா பொன்னம்பலம்



பிறப்பு .14 . 01 . 1932
இறப்பு . 27 . 07 . 2017

ஊரெழுவைப்பிறப்பிடமாகவும் வேலன்பராயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கம்மா பொன்னம்பலம் . கடந்த (27.07.2017) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் பொன்னம்பலத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற நாகபூரணம் (வவுனியா) மற்றும் நாகேஸ்வரி (கனடா) திரவியம் (அப்பரண்ணை)ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் கந்தசாமி (கனடா), காலஞ்சென்ற ஸ்ரீ ரஞ்சினிதேவி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னரது இறுதிக்கிரியைகள் நாளை (30.07.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது வேலன்பராய் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நாவற்குழி பிணமுருங்கை இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**வேலன்பராய்** மகன் **திரவியம்** (அப்பரண்ணை)

**077 360 5493**

## மரண அறிவித்தல்

### பொன்னம்பலம் சுப்பிரமணியம்

*(இளைப்பாறிய படவரைஞர்)*



அரசடி, கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் கனகசபை வீதி, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் சுப்பிரமணியம் நேற்று (28.07.2017) வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் தங்கரத்தினம் தம்பதியரின் மூத்த புதல்வரும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை பத்மாவதி தம்பதியரின் அன்பு மருமகனும் பாலரஞ்சினியின் அன்புக் கணவரும் விநோதினி (காரைநகர் பிரதேசசெயலகம்), சுகன்யா (அஞ்சல் அலுவலகம், மானிப்பாய்), சாந்தரூபி ஆகியோரின் பாசமிகு தந்தையும் லம்போகரனின் (வட்டுக்கோட்டை உப அலுவலகம், சுழிபுரம் பிரதேசசபை), அன்பு மாமனும் இராமச்சந்திரன் (கலைவாணி ஆடையகம், யாழ்ப்பாணம்), பாலச்சந்திரன் (ராசா), தனபாலச்சந்திரன் (லண்டன்), விக்கினேஸ்வரன் (லண்டன்), தனலட்சுமி, காலஞ்சென்ற அன்னலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.07.2017) ஞாயிற்றுக் கிழமை மு.ப.10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய், பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கனகசபை வீதி,
செல்லமுத்து விளையாட்ரங்கு,
மானிப்பாய்.**

தகவல்:
**குடும்பத்தினர்.
077 344 5200**

## உடன்பாட்டைச்...

தெரிவித்ததாவது: நாட்டின் சொத்துக்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்வதையே இந்த அரசு அயலுறவுக் கொள்கையாகக் கடைப்பிடித்து வருகின்றது. இராஜதந்திர வழிமுறையை கைவிட்டு கப்பம் வழங்கும் தந்திரத்தைக் கையாண்டு வருகின்றது.

நுரைச்சோலையைச் சீனாவுக்கு வழங்கினால் இந்தியா பகைத்துக்கொள்ளுமென்பதால் சம்பூர் அந்த நாட்டுக்கு வழங்கப்படுகின்றது. இப்படி சூரியவெல மைதானம் சீனாவுக்கும், துரையப்பா விளையாட்டரங்கு இந்தியாவுக்கும் வழங்கப்படுகின்றது. இதுவா அயலுறவுக் கொள்கை?

அம்பாந்தோட்டைத் முறைமுகமென்பது சாதாரண விடயமல்ல. நாட்டின் பாதுகாப்பு உட்பட சகல விடயங்களுடன் தொடர்புடையது. அது ரணிலினதோ அல்லது மைத்திரியினதோ சொத்து அல்ல அது. நாட்டின் வளம். அதைச் சீரழிக்க இடமளிக்கமுடியாது.

99 வருடகாலங்கள் குத்தகைக்கு வழங்கப்படுகின்றன. இதனால் நாட்டுக்குப் பெரும் பாதிப்பு ஏற்படுகின்றது. துறைமுகத்தில் இருந்து இரு புறத்திலும் 100 கிலோ மீற்றர் வீதம் சீனாவுக்கு வழங்கும்நிலை உருவாகும். குறித்த ஒப்பந்தம் கைச்சாத்தாவது ஒத்திவைக்கப்படும் என தொழிற்சங்க தலைவர்களிடம் அரச தலைவர் உறுதியளித்த நிலையில் அது நாளை (இன்று) கைச்சாத்திடப்படும் எனத் தலைமை அமைச்சர் பகிரங்கமாக அறிவிக்கின்றார். நாட்டின் அரச தலைவர் யார்? தலைமை அமைச்சரின் கைப்பாவையாக அரச தலைவர் செயற்படுகின்றாரா? எது எப்படியோ கடதாசி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டாலும் அதை நாட்டுக்குள் நடைமுறைப்படுத்த இடமளிக்கமாட்டோம் என்றார். (த)

## 04 ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 24.03.2002
விண்ணில் 13.08.2013

**ரவீந்திரன்
கேமாவதி** (சாளி)

திதி : பஞ்சமி

**இன்றும் உன் பிரிவுத்துயரை
நெஞ்சில் சுமந்து வாழும்...**

ரவீந்திரன் - சூரியகுமாரி
நவாலி தெற்கு,மானிப்பாய். (அப்பா,அம்மா ) தங்கை,தம்பி

## 8 ஆம் ஆண்டு நினைவு நாள்

அன்னை மடியில்
05 . 04 . 1986



ஆண்டவன் அடியில்
29 . 07 . 2009

### செல்வி அமலின் குயினிலினி மங்களதாஸ்

வஞ்சி நீ எம்மை வஞ்சித்தது ஏனம்மா ?
வஞ்சகமாய் காலனவன் அழைத்துச் சென்றானோ
மங்கை நீ மங்காது இறைவனடி சேர்ந்தாயோ
மகிமை நிறை மாதாவின் காலடியைப் பணிந்தாயோ
குயிலி நீ நிச்சயமாய் வான் வீட்டில் வீற்றிருப்பாய்
இயேசு பிரான் காலடியில் பணி செய்து மகிழ்ந்து வாழ்வாய்

**இ.மங்களதாஸ்
இல.19, மருதடி வீதி,யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்.
077 308 8506**

## மீண்டும்...

'தமிழரசுக் கட்சியின் மிக மூத்த தலைவர் என்ற வகையிலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சிதறடித்து விடாது இணைத்து வைத்திருக்கும் ஆற்றல்கொண்ட தலைவர் என்ற வகையிலும் தமிழ் அரசுக் கட்சியின் மிகப் பிந்திய செயற்பாடான ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சிக்குச் சுழற்சி முறையிலான ஆசனத்தை முறைகேடாக இரண்டாவது தடவையும் வழங்கும் நடவடிக்கையை உடன் தடுத்து நிறுத்துமாறு உரிமையுடனும், ஒற்றுமையின் பெயரிலும் தங்களிடம் கேட்டுக் கொள்கிறேன்' என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். இந்தக் கடிதம் பங்காளிக் கட்சிகளின் ஏனைய தலைவர்களுக்கும், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் ஆகியோருக்கும் பிரதியிடப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில், கடந்த காலத்தில் நியமன ஆசனம் எவ்வாறு வழங்கப்படுவது என்பது குறித்து எடுக்கப்பட்ட முடிவை சித்தார்த்தன் சுட்டிக்காட்டியுள்ளார். 'இரண்டு ஆசனங்களில் ஓர் ஆசனம் நல்லாட்சிக்கான தேசிய முன்னணியைப் பிரதி நிதித்துவப்படுத்தி ஐ.அஸ்மினுக்கும் மற்றைய ஆசனம் ஒவ்வொரு கட்சியையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சுழற்சி முறையில் வழங்குவது என்றும், இறுதி ஆண்டில் புளொட்டுக்கு வழங்கப்படும் என்றும் முடிவு செய்யப்பட்டது' என்று குறிப்பிட்டுள்ளார்.

ஐ.அஸ்மின், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினராகவே செயற்படுகின்றார் என்றும், சுழற்சிமுறையிலான ஆசனத்திற்கு முதலாம் வருடம் நியமிக்கப் பட்ட திருமதி மேரிகமலா குணசீலன், தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் போட்டியிட்டிருந்தாலும் அவரும் பின்னர் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியுடன் இணைந்து கொண்டார் என்பதையும் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு சுழற்சிமுறை நியமன ஆசனத்தைப் பெற்றுக் கொண்ட மயூரனிடம், ஜே.ஆரின் பாணியில் பதவி விலகல் கடிதத்தை முன்னரே பெற்றுக்கொண்டு அவருக்குத் தெரியாமலே, தேர்தல்கள் ஆணையாளருக்கு அதனை அனுப்பியுள்ளதாகவும் த.சித்தார்த்தன் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள் ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் வெற்றிடமான உறுப்பினர் பதவிக்கு புளொட்டைச் சேர்ந்தவரை நியமிப்பதில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் செயலாளர் தாமதம் காண்பித்ததையும், சூழ்ச்சி அடிப்படையில் தமிழ் அரசுக் கட்சி தன்னிச்சையாகச் செயற்படுவதாகவும் சித்தார்த்தன் விசனம் வெளியிட்டுள்ளார்.

'ஒற்றுமையையே அடிப்படையாகக் கருதி தமிழ் அரசுக் கட்சியின் அடையாளத்தையும், பெயரையும் நாம் தொடர்ச்சியாக ஏற்றுக்கொண்டு செயற்படுவதனால் ஏற்படுகின்ற பாதகமான விளைவாகவே தற்போதைய நிலைமையை நாம் பார்க்கிறோம். ஒற்றுமைக்கான விலையான எமது விட்டுக் கொடுப்புகளை பலவீனமாகக் கருதும் செயற்பாடுகள் கண்ணியமானவையோ, அரசியல் நாகரீகம் நிறைந்தவையோ அல்லது தமது பலம்என்றுபெருமை கொள்ளக்கூடியவையோ அல்ல' என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசியல் தீர்வுக்காகவே கூட்டமைப்பின் ஒற்றுமையைப் பாதுகாக்கும் வகையில் செயற்படுவதாகவும், இந்த விடயத்தில் இரா. சம்பந்தன் நீதியான தீர்வைப் பெற்றுத் தர வேண்டும் என்றும் கூறியுள்ள சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சிக்கு இரண்டாவது தடவையாகவும் நியமன ஆசனம் வழங்கப்படுவதை எதிர்த்துள்ளார்.

**பின்னணி**

வடக்கு மாகாணசபையின் சுழற்ச்சி முறை நியமன ஆசனத்தை தமக்கு வழங்குமாறு புளொட் அமைப்புக் கோரியிருந்த நிலையில், அதனை யாழ்ப்பாணம் வணிகர் கழகத் தலைவரும், வடக்கு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியடைந்தவருமான ஆர்.ஜெயசேகரத்துக்கு வழங்கியமை தொடர்பிலேயே, த.சித்தார்த்தன் மேற்படி கடிதத்தை அனுப்பியுள்ளார். (த-5)

### அரிசி ஆலை விற்பனைக்கு

நல்ல நிலையில் இயங்கிக்கொண்டு இருக்கும் அரிசி ஆலை விற்பனைக்கு உண்டு.
**தொடர்பு-**
077 378 6647, 077 4013959

### காணவில்லை

பொன்னாலையைச் சேர்ந்த தி .பொன்னம்பலவாணர் என்பவரது தேசிய அடையாள அட்டை, லைசன்ஸ், மோட்டார் சைக்கிள் ரைக்ஸ் ,இன்சூரன்ஸ் ஆகியவை யாழ்ப்பாணத்திற்கும் மல்லாகத்திற்கும் இடையில் தொலைந்துவிட்டது. கண்டவர்கள் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

[illegible]

## அம்பாந்தோட்டை...

மாக நாம் மாறவேகூடாது. 2020ஆம் ஆண்டு வரும் போது கடன் சுமையைக் குறைத்துக் கொள்வதற்கான பொருளாதார மறுசீரமைப்புகளை அரசு மேற்கொண்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

'வலுவான பொருளதாரத்தை உருவாக்குதல்' எனும் தொனிப்பொருளில் மத்திய வங்கியின் கேட்போர் கூடத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வறட்சி , வெள்ளம் உள்ளிட்ட காரணிகளால் நாட்டில் பொருளாதாரத்துக்கு நெருக்கடி ஏற்படும் அச்சம் காணப்பட்டது. பொருளாதார வளர்ச்சிவேகம் குறையும் எனவும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், பொருளதார வளர்ச்சியில் குறைவு ஏற்படவில்லை. பன்னாட்டு நாணய நிதியத்தால் வெளியிடப்பட்டுள்ள ஜூலை மாத அறிக்கையில் பன்னாட்டு நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தின் கீழ் இலங்கையின் பொருளதார முன்னேற்றம் மகிழ்ச்சிக்குரியது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பன்னாட்டு நாணய நிதியம் இலங்கைக்காக ஒதுக்கிய 501.5 மில்லியன் டொலரின் இரண்டாவது பகுதியான 167.2 மில்லியன் டொலரை விநியோகிக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

பொருளாதார அபிவிருத்தி வேகத்தை நூற்றுக்கு 6 வீதம் வரை அதிகரிப்பதை இலக்காகக் கொண்டு பல்வேறு வேலைத்திட்டங்களை நாம் முன்னெடுக்கின்றோம். 2020 ஆம் ஆண்டில் 3.5 வீதம் வரை மொத்தத் தேசிய உற்பத்தியை மட்டுப்படுத்த எதிர்பார்க்கின்றோம்.

நாம் அம்பாந்தோட்டைத் துறைமுகம் தொடர்பான ஒப்பந்தத்தை இன்று மேற்கொள்வோம். அம்பாந்தோட்டை துறைமுகத்தால் அன்று 46 பில்லியன் ரூபாவை இழந்தோம். அதேபோன்று மத்தளை விமான நிலையத்தாலும் பெருமளவு நிதியை இழந்துள்ளோம். இதன்படி இந்த வருட இறுதியில் மத்தளை விமான நிலையம் தொடர்பான ஒப்பந்தமொன்றையும் மேற்கொள்வோம். இது இரண்டையும் செயற்படுத்த வேண்டும் என்றார். (த)

## விடுதலை...

யத்தின் பேரவை, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பையும் பயங்கரவாதத்துடன் தொடர்புடைய அமைப்புக்கள் பட்டியலில் 2006ஆம் ஆண்டு இணைத்தது. தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு இதற்கு எதிராக ஆரம்பத்தில் நீதிமன்ற நடவடிக்கை எடுத்திருந்தபோதும், பின்னர் அது தொடர்பில் கரிசனை காட்டவில்லை.

ஐரோப்பியப் பொது நீதிமன்றம் கடந்த 2014 ஆம் ஆண்டு நடைமுறைக் குறைபாடுகள் காரணமாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் மீதான தடுப்பு நடவடிக்கைகளை நிறுத்தியிருந்தது. எனினும் எதிர்காலத்தில் நிதிகளை முடக்குவதற்கான சாத்தியக்கூறுகளை கருத்தில்கொண்டு நிறுத்தப்பட்ட நடவடிக்கைகளின் விளைவுகளைத் தொடர்ந்தும் பேணுவதற்குப் பொது நீதிமன்றம் தீர்மானித்திருந் தது.

இந்த நிலையில் ஐரோப்பிய நீதிமன்ற ஆயம், தமிழீழ விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியாகத் தோற்கடிக்கப்பட்டுள்ள நிலையில், அந்த அமைப்பை ஐரோப்பிய ஒன்றியத்தின் பயங்கரவாதத் தடைப் பட்டியலில் ஏன் வைத்திருக்கின்றது என்பதை ஐரோப்பிய ஒன்றிய பேரவை தெளிவுபடுத்தத் தவறிவிட்டதாகக் குறிப்பிட்டிருந்தது. இதனடிப்படையில் விடுதலைப் புலிகளைத் தடைப் பட்டியலில் இருந்து நீக்கியதுடன், நிதிகளையும் விடுவித்தது.

இதன் பின்னர், ஐரோப்பிய ஒன்றியம் வெளியிட்ட தெளிவுபடுத்தல் அறிக்கையில், 2011ஆம் ஆண்டு தொடக்கம் 2015ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதிக்கே, ஐரோப்பிய நீதிமன்ற ஆயத் தீர்ப்பு பொருந்தும் என்று குறிப்பிட்டிருந்தது.

இதேவேளை, ஐரோப்பிய ஒன்றியப் பேரவை கடந்த 2016ஆம் ஆண்டு ஜூலை மற்றும் 2017ஆம் ஆண்டு ஜனவரி மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதியை ஐரோப்பிய நாடுகளில் முடக்கி வைக்கத் தீர்மானித்திருந்தது. இதற்கு அமைவாக, ஐரோப்பிய ஒன்றிய நீதி ஆயத்தின் தீர்ப்பினால் விடுதலைப் புலிகளின் நிதி விடுவிக்கப்படாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் எதிர்காலத்தில் ஐரோப்பிய ஒன்றியம் மறு ஆய்வு மேற்கொள்ளும்போது, ஐரோப்பிய ஒன்றிய நீதி ஆயம் வழங்கிய தீர்ப்பை கவனத்தில் எடுக்க வேண்டிவரும் என்பது குறிப்பிடத்தக்கது. (த-5)

## வித்தியா...

உள்ளன. அவர்களை ஏன் இதுவரை கைதுசெய்யவில்லை?

இவ்வாறு கேள்வியெழுப்பியுள்ளது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

திட்டமிட்டு நடத்தப்பட்ட இந்தச் சம்பவத்தில் சுவிஸ் குமாரைப் பாதுகாப்பதற்குப் பண ஆறு பாய்ந்துள்ளது. அரசியல்வாதி மற்றும் கல்விமானை நோக்கியே இந்தப் பண ஆறுபாய்ந்துள்ளது என்றும் கூட்டமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. மாணவி வித்தியாவின் படுகொலை வழக்கின் விசாரணைகள் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில், மேல் நீதிமன்ற நீதிபதிகள் மூவரடங்கிய தீர்ப்பாயத்தில் நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையிலேயே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணம் புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை தொடர்பான வழக்கு விசாரணைகள் நடைபெற்றுவரும் நிலையில், குற்றஞ் சுமத்தப்பட்டுள்ள 10 பேருக்கும் மேலாக முக்கியமான பெரிய இரண்டு கழுகுகள் கைது செய்யப்படாமல் இருக்கின்றனர். இவர்கள் இருவரும் கைகோத்து சம்பவத்தை மறைப்பதற்கு செயற்பட்ட விதம் பேரதிர்ச்சியை ஏற்படுத்துகின்றது.

யாழ்ப்பாணம் மாவட்ட முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் மட்டுமல்ல, மேலும் இருவர் இந்தக் கொலைச் சம்பவத்தில் தொடர்புபட்டுள்ளனர். பன்னாட்டுப் போதைவஸ்து கடத்தல்காரர்களால் திட்டமிட்டு நடத்தப்பட்ட இந்தச் சம்பவத்தில் சுவிஸ் குமாரைப் பாதுகாப்பதற்குப் பண ஆறு பாய்ந்துள்ளது எனத் தெரியவந்துள்ளது. அரசியல்வாதி மற்றும் கல்விமானை நோக்கியே இந்தப் பண ஆறு பாய்ந்துள்ளது- என்றார். (த)

## சி.ஐ.டியின்...

மகேஸ்வரன் கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்று அழைக்கப்பட்டபோதும், அவர் விசாரணைக்கு சமூகமளிக்கவில்லை என்று தெரியவருகின்றது.

முதன்மைச்சந்தேகநபரான சுவிஸ்குமாரைத் தப்பிக்க வைத்தமை தொடர்பான வழக்கில், வடக்கு மாகாணத்தின் முன்னாள் மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் ஜயசிங்க கைது செய்யப்பட்டிருந்தார். ஊர்காவற்துறை நீதிமன்றில் கடந்த செவ்வாய்க்கிழமை இவர் முற்படுத்தப்பட்டார். லலித் ஜயசிங்கவின் சட்டத்தரணிகள் மன்றில் காணொலி ஒன்றைக் காண்பித்திருந்தனர்.

அதில் சுவிஸ்குமாரை மக்கள் மின்கம்பத்துடன் கட்டிவைத்துள்ளமையும், இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் அங்கு பிரசன்னமாகுவதும் உள்ளது. இதனையடுத்து கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினரை, காணொலியை ஆய்வு செய்யுமாறு நீதிமன்றம் பணித்தது.

இந்தக் காணொலி குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் ஆராயப்பட்டு வருகின்றது. இந்த நிலையில், இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரனை வாக்குமூலம் பெற்றுக் கொள்ளக் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு வருமாறு நேற்று அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இருப்பினும் அவர் வாக்குமூலம் வழங்கச் செல்லவில்லை என்று தெரியவருகின்றது. (த-5-26)

## சபையில்...

வைக்கப்பட்டது. நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 10.30 மணிக்குச் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கூடியது.

சபாநாயகர் அறிவிப்பு, பொதுமனுத் தாக்கல், வாய்மூல விடைக்கான கேள்விச்சுற்று, நிலையியல் கட்டளையின் 23/2 இன் கீழான அறிவிப்பு ஆகியன முடிவடைந்த பின்னர், வாக்கெடுப்பு நடத்துவதற்கான அழைப்பைச் சபாநாயகர் விடுத்ததையடுத்தே சர்ச்சை ஆரம்பமானது.

அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் கீழ், எரிபொருள் வழங்கல் மற்றும் விநியோகம் ஆகியவற்றை அத்தியாவசிய சேவையாக அறிவிக்கும் பிரகடனத்துக்கு நாடாளுமன்றத்தின் அனுமதியைப்பெறும் பிரேரணை மீதே வாக்கெடுப்பு நடத்தப்படவிருந்தது.

இதன்போது ஒழுங்குப்பிரச்சினையொன்றை எழுப்பிய ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க,

"கொலன்னாவை எரிபொருள் களஞ்சியசாலை வளாகத்துக்குள் களமிறங்கி தொழிற்சங்க உறுப்பினர்கள்மீது தாக்குதல் நடத்திய குண்டர்களின் பெயர் விவரங்களை புகைப்பட ஆதாரத்துடன் நேற்று (நேற்றுமுன்தினம்) சபையில் வெளியிட்டிருந்தேன். கேள்விகளையும் எழுப்பியிருந்தேன்.

இவர்கள் தொடர்பிலும், மேற்படி சம்பவம் குறித்தும் அரச தரப்பு இன்று (நேற்று) பதில்களை வழங்கும் என எதிர்பார்க்கப்பட்டது. இதன்காரணமாகவே நேற்றைய தினம் (நேற்றுமுன்தினம்) வாக்கெடுப்பு நடத்தாமல் இன்றைய தினம் (நேற்று) வாக்கெடுப்பு நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், அரசதரப்பின் சார்பில் எந்தவொரு பேச்சாளரும் பேசவில்லை. இது பற்றி அரச தரப்பு பதில் என்ன? இதற்குப் பதிலளிக்காமல் எப்படி வாக்கெடுப்புக்குச் செல்லமுடியும்?' என்று வினவினார்.

இதற்குப் பதிலளித்த சட்டம், ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க, "மேற்படி சம்பவம் பற்றி விசாரணை நடத்தப்படுகின்றது. அது முடிவடைந்த பின்னர் உரிய விளக்கமளிக்கப்படும்" என்றார்.

அதன் பின்னர் கருத்துவெளியிட்ட அநுரகுமார திஸாநாயக்க ,

"சபாநாயகரே, உரிய ஆதாரங்களை நான் சமர்ப்பித்துள்ளேன். கேள்விகளையும் கேட்டிருந்தேன். இவற்றுக்கு உரிய பதில்கள் அவசியம்" என்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன அநுரவின் கூற்றுக்கு வலுச்சேர்க்கும் வகையில் கருத்துகளை முன்வைத்தார்.

இதன்போது குறுக்கிட்ட சபை முதல்வர், "சபாநாயகரே அமைச்சர் பதிலளித்துவிட்டார். வாக்கெடுப்புக்குச் செல்லாம்" என்று ஆலோசனை வழங்கினார்.

"வாக்கெடுப்புக்குரிய அழைப்பை விடுத்த பின்னர் அதை மாற்ற முடியாது. எனவே, வாக்கெடுப்புக்குச்செல்லலாம்"என்றுதலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க வும் குறிப்பிட்டார்.

இதையடுத்து, "ஆம் வரிசைக்கிரமப்படி வாக்கெடுப்பு நடத்தலாம்" என்று சபாநாயகர் கூறினார். எனினும், ஆளுந்தரப்பில் எவரும் பதிலளிக்காமல் வாக்கெடுப்பு நடத்தப்படுவதற்கு ஜே.வி.பியும், மகிந்த அணியான பொது எதிரணியும் கடும் எதிர்ப்பை வெளியிட்டன.

தனது ஆசனத்தில் இருந்தவாறு, குண்டர் குழுவின் படங்களைக் காண்பித்தபடி அரச தரப்பு பதிலைக் கோரிக்கொண்டிருந்தார் அநுர.

அநுரவுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் பொது எதிரணி உறுப்பினர்களும் எழுந்து நின்று உரத்துக் குரல் எழுப்பினர். இதனால், ஆளும் எதிரணி உறுப்பினர்களுக்கிடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

இதற்கிடையில், பொது எதிரணி உறுப்பினர்கள் சபாபீடத்தை நோக்கிவந்து அதை முற்றுகையிட்டனர். இதையடுத்து படைக்கள சேவிதரும், உதவி படைக்கள சேவிதரும் செங்கோலுக்குப் பாதுகாப்பு வழங்கினர்.

"எமக்கு நீதி வேண்டும், நீதி வேண்டும்" என்று சபாபீடத்துக்கு முன்பிருந்தவாறு மஹிந்த அணியினர் கோசமெழுப்பினர். ஜே.வி.பி. உறுப்பினர்களும் இந்த விடயத்தில் உறுதியாக இருந்தனர்.

இவ்வாறு கூச்சல், குழப்பத்துக்கு மத்தியில் பெயர்கூவி வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. வாக்கெடுப்பின்போது செங்கோல் உரிய இடத்தில் இருக்கவில்லை. அதை தனது கையில் ஏந்தியே படைக்கள சேவிதர் அதற்குப் பாதுகாப்பு அளித்தார்.

வாக்கெடுப்பு நிறைவேறியதா? அல்லது இல்லையா? எத்தனை பேர் சார்பாக வாக்களித்தனர்? எத்தனை பேர் எதிராக வாக்களித்தனர்? என்ற அறிவிப்பைச் சபாநாயகர் விடுக்கவில்லை.

வாக்கெடுப்பு முடிந்ததும் சபையை ஒத்திவைக்கும் யோசனையை முன்மொழியுமாறு சபை முதல்வரிடம் சபாநாயகர் கேட்டுக்கொண்டார். இதனையடுத்துச் சபை முதல்வர் அதை முன்மொழிந்தார். பின்னர் நாடாளுமன்றம் ஒகஸ்ட் 4 ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டது.

முற்பகல் 11.20 மணியளவில் ஆரம்பித்த சர்ச்சை நண்பகல் 12 மணிவரை நீடித்தமை குறிப்பிடத்தக்கது.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவின் மேர்ச்சன்ட்ஸ் ஹோல்டிங்ஸ் நிறுவனத்துக்கு குத்தகைக்கு வழங்குவது தொடர்பாக, செய்து கொள்ளப்படவுள்ள உடன்படிக்கை தொடர்பில் நேற்று நடைபெறவிருந்த சபைஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதமும் நடைபெறவில்லை. (த)

## பன்னாட்டு...

வைற்றிங் நேற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பு நாடாளுமன்ற வளாகத்தில் அமைந்துள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்றது.

குறித்த சந்திப்பில் தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள், புதிய அரசமைப்பு உருவாக்கம் எனப் பல விடயங்கள் பேசப்பட்டன என்று எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு இலங்கை அரசு காலத்தை இழுத்தடிக்காமல் உடன் தீர்வு வழங்கவேண்டும்எனவும், இதற்குகனேடிய அரசு இலங்கை அரசுக்குத் தொடர்ந்து அழுத்தம் கொடுக்கவேண்டும் எனவும் இந்தச் சந்திப்பில் தான் தூதுவரிடம் வலியுறுத்தினேன் என்று இரா.சம்பந்தன் மேலும் கூறினார். (த)

## எதிர் பாராத...

டக்கூடுமென இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

நீர் மின்சார உற்பத்தியில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி, நுரைச்சோலை அனல்மின் நிலையத்தில் ஏற்பட்டுள்ள பழுது போன்ற பல்வேறு காரணங்களால் நாட்டில் மின்பாவனை அதிகமாகும் நேரங்களில் மின்தடை ஏற்பட இடமுண்டு என இலங்கை மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் சுலக்சன ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

நுரைச்சோலை மின்நிலையத்தில் மின்பிறப்பாக்கியில் ஏற்பட்டுள்ள பழுதால் நாட்டின் மின்கட்டமைப்புக்க 300 மெகாவோற் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கின்றது எனவும், எவ்வாறாயினும் ஒகஸ்ட் மாத முதல் வாரத்தில் அந்தப் பழுது நிவர்த்தி செய்யப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன், எரிபொருள் பற்றாக்குறையால் எம்பிலிபிட்டிய, பல்லேகல, காலி ஆகிய இடங்களிலுள்ள தனியார் மின்னுற்பத்தி நிலையங்கள் கடந்த புதன்கிழமை முதல் மூடப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார். (த)

## இந்திய...

வான் மன்றினால் தடுத்து வைக்கப்பட்டிருந்த 41 மீனவர்களும், பருத்தித்துறை நீதிமன்றினால் தடுத்து வைக்கப்பட்டிருந்த 25 மீனவர்கள், மன்னார் நீதிமன்றினால் தடுத்து வைக்கப்பட்டிருந்த 11 மீனவர்களும் விடுதலை செய்யப்பட்டனர்.

அவர்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத்தூதரக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

அத்துமீறி இலங்கைக் கடற்பரப்புக்குள் நுளைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இவர்கள் வெவ்வேறு காலப்பகுதியில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் இருந்தனர்.

இதேவேளை, இதே குற்றச்சாட்டில் இரண்டு வாரங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 15 பேர் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் பற்றிய அறிவித்தல் சட்டமா அதிபர் திணைக்களத்திடமிருந்து கிடைக்கப்பெறவில்லை.

இதுதவிர, குறித்த மீனவர்களை விடுவிக்கும் போது அவர்களது படகுகளையும் விடுவிக்க வேண்டும் என்று இந்திய மீனவர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். எனினும் படகுகளை விடுவிப்பது தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்கள அறிவுறுத்தல் எதுவும் கிடைக்கவில்லை என்று கடற்றொழில் நீரியல்வளத் துறைத் திணைக்களத்தினர் மேலும் தெரிவித்தனர். (4-8)

## நாடாளுமன்ற...

கூட்டம், நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று நடைபெற்றது. கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையில் சுமார் 45 நிமிடங்கள் இந்தக் கூட்டம் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கு மாகாணசபையின் சுழற்சிமுறையிலான நியமன ஆசன விவகாரத்தில் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுக்கு இடையில் சர்ச்சை ஏற்பட்டுள்ள நிலையில், இந்தக் கூட்டத்தில் இந்த விவகாரம் எதிரொலிக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

(த-5-101)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 30

### திக்கம் மத்தியின் கால்பந்தாட்டம்

திக்கம் மத்திய சனசமூக நிலையத்தின் வைர விழாவை முன்னிட்டு வடமாகாண ரீதியாக நடத்தப்படும் அணிக்கு 9 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சிவகுமரன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி யுத் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

### உதயதாரகையின் கால்பந்துத் தொடர்

கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகம் நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

### வெண்மதி வி.கழகத் துடுப்பாட்டத் தொடர்

வெண்மதி விளையாட்டு கழகம் வடமராட்சி கிழக்கில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையில் நடத்தும் 'கிழக்கின் போர் துடுப்பாட்டத் தொடர் செம்பியன்பற்று அ.த.க. பாடசாலை மைதானத்தில் இன்று சனிக்கிழமை காலை 8 மணி முதல் நடைபெறவுள்ளது. இன்றைய முதலாவது ஆட்டத்தில் உடுத்துறை பாரதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பிங்பொங் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. தொடர்ந்து இடம்பெறும் ஆட்டங்களில் கொடுக்கிளாய் சக்திவேல் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வெண்மதி விளையாட்டுக் கழகமும், உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து இளம்பிறை விளையாட்டுக் கழகமும் கணேசானந்தா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து றம்போ விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

### புதுக்குடியிருப்பு மத்திய சமுதாயக் கழகத்தின் ரி-20 துடுப்பாட்டத் தொடர்

புதுகுடியிருப்பு மத்திய சமூதயக் கழகத்தினால் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலிருந்து அழைக்கப்பட்ட கடினபந்து விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்தத் திட்டமிட்ட ரி-20 தொடர் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மைதானத்தில் இன்று ஆரம்பமாகின்றது. இன்று காலை 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வித்தியா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பப்ஸ்ரிக் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. பிற்பகல் ஒரு மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மகா தீபம் விளையாட்டுக் கழக அணியை நியூ ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

(ம-23)


யூனியன்


வின்ஸ்ரார்

## யூனியன் - வின்ஸ்ரார் அணிகள் இறுதியில் நாளை பலப்பரீட்சை

யாழ்ப்பாண மாவட்ட வலைப் பந்தாட்டச் சங்கத்தினால் நடத்தப்படும் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான வலைப்பந்தாட்டத் தொடரில் தெல்லிப்பளை யூனியன் விளையாட்டுக் கழகமும், யாழ்ப்பாணம் வின்ஸ்ரார் அணியும் இறுதியாட்டத்தில் நாளை மோதவுள்ளன.

வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையின் வலைப் பந்தாட்டத் திடலில் நாளை பிற்பகல் 3.30 மணிக்கு இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது. முதன்மை விருந்தினராக வலிகாமம் கிழக்கு பிரதேச செயலளர் திருமதி சுபாசினி மதியழகனும், சிவன் அறக்கட்டளை நிறுவுனர் கணேஸ்வரன் வேலயுதமும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை அதிபர் வேணுகா சண்முகரெத்தினமும், பவுண்டேசன் ஒவ்குட்நஸின் வடக்கு மாகாணத்தின் இணைப்பாளர் எட்வேட் எடினும் கலந்துகொள்ளவுள்ளனர்.

(ம-23,422)

## ஆட்டம் மீண்டும் இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 29

கைதடி குமரநகர் விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்தும் தாச்சித் தொடரில் இறுதியாட்டத்துக்குச் செல்லப்போகும் அணி எதுவென்பதைத் தீர்மானிக்கும் ஆட்டம் இன்று மீண்டும் நடைபெறவுள்ளது.

குமரநகர் விளையாட்டுக் கழகத்தின் மைதானத்திலேயே தொடரின் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் தாவடி காளிஅம்பாள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வசந்தசிறி விளையாட்டுக்கழக அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் தலா இரண்டு புள்ளிகளைப் பெற்றதை அடுத்து இறுதியாட்டத்துக்குத் தகுதி பெறும் அணியைத் தீர்மானிப்பதற்கான ஆட்டம் இன்று மீண்டும் நடைபெறவுள்ளது.

(ம-23)

## யங்கம்பன்ஸ் - விண்மீன் இறுதியாட்டத்தில் மோதல்

யாழ்ப்பாணம், ஜூலை 29

அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகம் நடத்தும் பருத்தித்துறை லீக் மற்றும் வடமராட்சி லீக் அங்கத்துவ கழகங்களுக்கு இடையிலான அணிக்கு 9 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் பலாலி விண்மீன் அணியை எதிர்த்து கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணி இன்று மோதவுள்ளது. நண்பர்கள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இன்று மாலை 4 மணிக்கு இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது.

முன்னதாக இடம்பெறும் மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் வதிரி பொம்மர்ஸ் அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி மோத வுள்ளது.

(ம-23, 108)



இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் நிறைவேற்றுக் குழு உறுப்பினராகவும், புட்சால் மற்றும் கடற்கரை கால்பந்தாட்டக் குழுவின் உபதலைவராகவும், வடமராட்சி கால்பந்தாட்டச் சங்கத்தின் தலைவர் டி எம். வேதாபரணம் தெரிவு செய்யபட்டுள்ளார். அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற இலங்கைக் கால்பந்தாட்டச் சங்கத்தின் பொதுக்கூட்டத்தில் வைத்து இந்தப் பதவிகள் அவருக்கு வழங்கப்பட்டுள்ளன. (ம-108)

## இறுதிக்குள் பாரதி அணி

கணேசானந்தாவின் கால்பந்தாட்டத் தொடரில் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது உடுத்துறை பாரதி விளையாட்டுக் கழகம்.

மருதங்கேணி கணேசானந்தா விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் உடுத்துறை பாரதி விளையாட்டுக் கழத்தை எதிர்த்து முரசுமோட்டை விளைபூமி விளையாட்டுக் கழகம் மோதியது. 2:0 என்ற கோல் கணக்கில் பாரதி அணி வெற்றிபெற்றது. பாரதி விளையாட்டுக் கழகம் சார்பில் அஜய் மற்றும் சுதாகர் கோல்களைப் பதவுசெய்தனர்.

(ம-108)

## கரவெட்டி இறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஜூலை 29

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் வெற்றிக் கிண்ணத்துக்கான ஆண்கள் பிரிவு பூப்பந்தாட்டத் தொடரில், கரவெட்டி பிரதேச செயலக அணி இறுதிக்குத் தகுதி பெற்றது.

ஞானம்ஸ் விடுதிக்கு அருகிலுள்ள பூப்பந்தாட்டத் திடலில் நேற்று நடைபெற்ற அரையிறுதியாட்டத்தில் கரவெட்டிப் பிரதேச செயலக அணியை எதிர்த்து பருத்தித்துறைப் பிரதேச செயலக அணி மோதியது. இதில் கரவெட்டி பிரதேச செயலக அணி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது.

(ம-422)



இங்கிலாந்தில் அண்மையில் நடைபெற்ற பெண்கள் உலகக்கிண்ணத் தொடரில் இறுதியாட்டம் வரை சென்ற இந்திய அணி வீராங்கனைகளுக்கும், அந்த நாட்டின் தலைமை அமைச்சர் மோடிக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. வீராங்கனைகள், தாம் அனைவரும் கையொப்பமிட்ட துடுப்புமட்டையொன்றை தலைமை அமைச்சருக்கு அன்பளிப்பாக வழங்கினர்.

(ம)

## காயத்தால் கேரத் அவதி

இலங்கை அணியின் பொறுப்புத் தலைவர் கேரத், நடைபெற்றுவரும் டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றைய நாள் ஆட்டத்தின் போது காயமடைந்தார். நேற்றைய நாளின் மூன்றாவது செசனில் கேரத் களத்தடுப்பில் ஈடுபட்டபோது அவருக்குக் காயம் ஏற்பட்டது. இதனால் தரங்க களத்தடுப்பு வியூகங்களைக் கவனித்துக் கொண்டார். இன்று கேரத் களமிறங்குவாரா என்பது தொடர்பில் சந்தேக நிலைமையே நீடிக்கிறது. (ம)



# இந்தியாவின் கட்டுப்பாட்டில் இலங்கை



இந்திய அணிக்கு எதிரான டெஸ்ட் ஆட்டத்தில் அந்த அணியின் கட்டுப்பாட்டில் இருந்து வெளியேவர முடியாமல் பரிதவிக்கிறது இலங்கை அணி. இந்த இரு அணிகளுக்கும் இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட தொடரின் முதலாவது ஆட்டம் காலியில் நடைபெற்று வருகிறது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 600 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது.

பந்துவீச்சில் பிரதீப் 6 இலக்குகளையும், லகிரு குமார 3 இலக்குகளையும், கேரத் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இலங்கை அணி 7 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் கருணாரத்ன. தரங்க ஓர் முனையில் நிலைத்துநின்றாலும் மறுமுனையில் குணதிலக 16 ஓட்டங்களுடனும், குசல் மென்டிஸ் ஓட்டமெதனையும் பெறாமலும் ஆட்டமிழந்தனர். 64 ஓட்டங்களுடன் தரங்கவின் ஆட்டம் முடிவுக்கு வந்தது. தரங்க ரண்அவுட் முறையில் ஆட்டமிழந்தார். இவரின் இலக்குச் சரிவே இலங்கைக்கு மேலும் பின்னடைவைக் கொடுத்தது. நேற்றுமுன்தின நாள் முடிவில் இலங்கை 5 இலக்குகள் இழப்புக்கு 154 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. மத்தியூஸ் 54 ஓட்டங்களுடனும், டில்ருவான் பெரேரா 6 ஓட்டங்களுடனும் மூன்றாம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர். 83 ஓட்டங்களுடன் மத்தியூஸ் ஆட்டமிழந்தார். டில்ருவான் பெரேரா ஓர் முனையில் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தினார். எனினும் மறுமுனையில் இலக்குச் சரிவுகள் இருக்கத்தான் செய்தன. 291 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது இலங்கை. டில்ருவான் பெரேரா 92 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார்.

பந்துவீச்சில் ஜடேயா 3 இலக்குகளையும், மொகமட் சமி 2 இலக்குகளையும், யாதவ், அஸ்வின், பாண்டியா மூவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

இரண்டாவது இன்னிங்ஸிற்காக இலங்கையைத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடப் பணிக்கக்கூடிய அந்தஸ்து இந்திய அணிக்கு இருந்தாலும் காலியின் களநிலவரங்களை கனகச்சிதமாகக் கையாண்டார் கோக்லி. இந்த மைதானத்தில் நான்காவது இன்னிங்ஸ்க்காகத் துடுப்பெடுத்தாடுவது இயலாத காரியம் என்பதால் இந்தியா தனது இரண்டாவது இன்னிங்ஸிற்காகக் களமிறங்கியது.

> இரண்டாவது இன்னிங்ஸிற்காக இலங்கையைத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடப் பணிக்கக்கூடிய அந்தஸ்து இந்திய அணிக்கு இருந்தாலும் காலியின் களநிலவரங்களை கனகச்சிதமாகக் கையாண்டார் கோக்லி. இந்த மைதானத்தில் நான்காவது இன்னிங்ஸ்க்காகத் துடுப்பெடுத்தாடுவது இயலாத காரியம் என்பதால் இந்தியா தனது இரண்டாவது இன்னிங்ஸிற்காகக் களமிறங்கியது.



தவான் 14 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். புஜாராவால் முடிந்தது 15. கோக்லி, முகுந்த் இருவரும் அரைச்சதம் கடந்தனர். முகுந்த் 81 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க நாள் முடிவில் இந்தியா 3 இலக்குகள் இழப்புக்கு 189 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. கோக்லி 76 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதுள்ளார். இதுவரை இந்திய அணி 498 ஓட்டங்கள் முன்னிலையில் உள்ளது. (ம)

## பாகிஸ்தானின் அழைப்பை நிராகரித்தது இலங்கை

தங்கள் நாட்டுக்கு வந்து விளையாட வேண்டும் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபை விடுத்திருந்த அழைப்பை இலங்கை கிரிக்கெட் சபை நிராகரித்தது.

இலங்கை அணி கடந்த 2009ஆம் ஆண்டு பாகிஸ்தான் சென்று விளையாடிய போது இலங்கை வீரர்கள் பயணித்த பேருந்து மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இதன் பின்னர் சிம்பாப்வேயைத் தவிர எந்த அணியும் பாகிஸ்தான் சென்று விளையாடியதில்லை. இலங்கையை மீண்டும் வந்து விளையாடுமாறு பாகிஸ்தான் அழைப்பு விடுத்திருந்தது. இந்த அழைப்பை இலங்கை கிரிக்கெட் சபை நேற்று நிராகரித்தது. (ம)

## ஆஸ்திரேலிய வீரர்களுக்கு ஒப்பந்தங்கள் தரவில்லை

### வோர்ணர் கொதிப்பு

ஊதிய ஒப்பந்தம் தொடர்பில் ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபைக்கும், வீரர்களுக்கும் இடையில் இருந்துவந்த கருத்து மோதல்கள் அண்மைக் காலமாக மிகையாகக் குறைவடைந் ததை அடுத்து இந்த விடயத்தில் இரு தரப்பினருக்கும் இணக்கப்பாடு ஏற்பட்டு புதிய ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளன என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்த நிலையில் அவற்றை அந்த அணியின் உபதலைவர் வோர்ணர் மறுத்துள்ளார். வீரர்களுக்கு ஒப்பந்தங்கள் எதுவும் தரப்படவில்லை என்று அவர் குறிப்பிட் டார்.

ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்களுக்கும் அந்த நாட்டு கிரிக்கெட் சபைக்கும் இடையிலான ஒப்பந்தம், கடந்த முதலாம் திகதியுடன் நிறைவடைந்துள்ள நிலையில், புதிய ஒப்பந்தம் கைச்சாத்திடும் வரையில், கிரிக்கெட் தொடர்களில் பங்குபற்றப் போவதில்லை என வீரர்கள் அறிவித்திருந்தனர். இதனால் ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபைக்கும், வீரர்களுக்கும் இடையில் மிகப்பெரும் குழப்பநிலை நிலவியது. தற்போதும் அந்தக் குழப்ப நிலைகள் அப்படியேதான் உள்ளது என்று குறிப்பிடுகிறார் வோர்ணர்.

“ஆஸ்திரேலிய அணியின் தொப்பிதான் எனக்கு உலகம். நான், அனைத்து வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் என எல்லோரும் அணிக்காக விளையாட விரும்புகிறோம். நாங்கள் பெரும்தொகைப் பணத்தை விட்டுக்கொடுக்க முன்வந்தோம். ஆனால் எமது கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இந்தப் பிரச்சினையை முடிவுக்கு கொண்டுவர, பேச்சு நடத்த வேண்டும் என இரண்டு முறை கேட்டோம். அதுவும் நிராகரிக்கப்பட்டது” என வோர்ணர் மேலும் தெரிவித்தார். (ம)



## ‘கொன்சல்வேஸ்’ வெற்றிக்கிண்ண முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 29

வலைப்பாடு சென். ஆன்ஸ் திருவிழாவை முன்னிட்டு சென். ஆன்ஸ் விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்படும் ‘கொன்சல்வேஸ்’ வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சில ஆட்டங்களின் முடிவுகள்:

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் செந்தாரகை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென். ஆன்ஸ் விளையாட்டுக் கழக ‘பி’ அணி மோதியது. இதில் செந்தாரகை விளையாட்டுக் கழக ‘பி’ அணி 1.0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற ஆட்டத்தில் கலைமகள் விளையாட்டுக் கழக ‘பி’ அணியை எதிரத்து ஜெகமீட்பர் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் ஜெகமீட்பர் விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

பிறிதொரு ஆட்டத்தில் கலைமகள் விளையாட்டுக் கழக ‘ஏ’ அணியை எதிர்த்து சென். மேரிஸ் விளையாட்டுக் கழக ‘ஏ’ அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் தலா ஓர் கோலைப் பதிவுசெய்தமையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 5:4 என்ற கோல் கணக்கில் சென். மேரிஸ் விளையாட்டுக்கழக ‘ஏ’ அணி வெற்றி பெற்றது.

மற்றொரு ஆட்டத்தில் நசரேத் விளையாட்டுக் கழக ‘பி’ அணியை எதிர்த்து விநாயகர் விளையாட்டுக் அணி மோதியது. இதில் நசரேத் விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.



தொடர்ந்து நடைபெற்ற ஆட்டத்தில் உழவர் ஒன்றியம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென். ஜேம்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் சென். ஜேம்ஸ் விளையாட்டுக் கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மற்றொரு ஆட்டத்தில் சென். ஜேம்ஸ் விளையாட்டுக் கழக ‘ஏ’ அணியை எதிர்த்து ஜோலிபோய்ஸ் விளையாட்டுக் கழக ‘ஏ’ அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் ஏது விதகோல்களையும் பதிவு செய்யாததனால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 5:4 என்ற கோல் கணக்கில் சென். ஜேம்ஸ் அணி வெற்றிபெற்றது.

மற்றொரு ஆட்டத்தில் சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து செபஸ்ரியன் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழக அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

பிறிதொரு ஆட்டத்தில் வட்டக்கச்சி லக்கி ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிரத்து சென். செபஸ்ரியன் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் வட்டக்கச்சி லக்கி ஸ்ரார் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற ஆட்டத்தில் அந்தோனியார்புரம் சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழக அணியை எதிரத்து பூநகரி இளந்தளிர் விளையாட்டுக் கழக அணி மோதியது. இந்த ஆட்டத்தில் சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மற்றொரு ஆட்டத்தில் முழங்காவில் சென். செபஸ்ரியன் விளையாட்டுக் கழக அணியை எதிரத்து பூநகரி நண்பர்கள் விளையாட்டுக் கழக அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் ஏதுவித கோல்களையும் பதிவு செய்யாதமையினால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 5:3 என்ற கோல் கணக்கில் பூநகரி நண்பர்கள் விளையாட்டுக் கழக ‘ஏ’ அணி வெற்றிபெற்றது.

(ம-23)

# இங்கிலாந்து வலு நிலை

தென்னாபிரிக்கா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் ஆட்டத்தில் இங்கிலாந்து அணி வலுவான நிலையில் உள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து சகல இலக்குகளையும் இழந்து 353 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக ஸ்ரோக்ஸ் 112 ஓட்டங்களைக் குவித்தார். பந்துவீச்சில் ரபாடா, மோர்கல் இருவரும் தலா 3 இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய தென்னாபிரிக்கா அணி பத்திரிகை அச்சுக்குப் போகும்போது 6 இலக்குகளை இழந்து 56 ஓட்டங்களை மாத்திரம் பெற்றிருந்தது. ஆட்டத்தின் மூன்றாம் நாள் இன்றாகும். (ம)

# சின்சினாட்டி தொடரில் வருகிறார் செரபோவா



ரஷ்யாவின் முன்னணி ரென்னிஸ் வீராங்கனையான மரியா செரபோவாவா சின்சினாட்டி ரென்னிஸ் தொடரில் களமிறங்குவது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த 2015ஆம் ஆண்டு நடைபெற்ற ஆஸ்திரேலியத் தொடரின் போது வீரர்கள், வீராங்கனைகளிடம் இருந்து பெறப்பட்ட குருதி மாதிரிகளைச் சோதித்ததில், செரபோபாவின் குருதி மாதிரியில் மெல்டோனியம் என்ற மருந்து இருப்பது கண்டறியப்பட்டது.

இத னால் அவருக்கு இரண்டு வருடங்கள் தடை விதிக்கப்பட்டது. கடந்த ஏப்ரலிலேயே தடைக்காலம் முடிந்து மீண்டும் அவர் களத்துக்குத் திரும்பினார். களந்திரும்பிய சில வாரங்களில் மீண்டும் காயமடைந்தார். இதனால் சுமார் நான்கு வாரங்கள் வரை மீண்டும் விலகினர். தற்போது காயம் குணமடைந்துள்ளதால் அடுத்ததாக நடைபெறவுள்ள அமெரிக்கத் தொடரான சின்சினாட்டி தொடரில் விளையாடவுள்ளார். தற்போதைய பன்னாட்டுத் தரப்படுத்தலில் செரபோவா 173ஆவது இடத்தில் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ம)

**வேலைவாய்ப்பு**

கிளிநொச்சியில் இயங்கும் பிரபல ரெஸ்ரோறண்டுக்கு கீழ்வரும் பணியாளர்கள் தேவை.

1. சுத்திகரிப்பாளர் (Room boy)
2. சமையலாளர் (Cook)

077 839 2107

**காணவில்லை**



நல்லூர் கோயிலுக்கு (வடக்கு) அண்மையில் உள்ள வீட்டிலிருந்து யேமன் *Lion Sheperd* வகை நாய் (கறுப்பு பெண்) 27 ஆம் திகதி இரவிலிருந்து காணவில்லை. விவரம் தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

077 621 3040

**FLC FRENCH LANGUAGE CENTRE**

பிரெஞ்சு வகுப்புக்கள்

France இல் பயிற்றப்பட்ட விரிவுரையாளரிடம் இலகுவான முறையில் French கற்றுக் கொள்ளுங்கள். (ஆங்கில அறிவு அவசியமில்லை)

2006 முதல் இன்றுவரை 1291 மாணவர்கள்.

DELF A1,A2,B1,B2 வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

40, பலாலி வீதி, அரியாலை
ஆரம்பம் 05.08.17 சனி 8am
0779 789 456
021 221 7781

181, பிரதான வீதி, நெல்லியடி
ஆரம்பம் 14.08.17 திங்.4pm
021 320 2973

IELTS Life Skills A1,B1 வகுப்புக்களும்.....

(இலுப்பையடி சந்திக்கு அண்மையில் கராஜ் முன்பாக)

**தேவை**

எமது சிறுவர் இல்லத்துக்கு
**பராமரிப்பாளர் :-**
வயதெல்லை 30-45 (ஆண் / பெண்)
**அலுவலக உதவியாளர் :-**
வயதெல்லை 25 - 35 (ஆண் / பெண்)
**பஸ் சாரதி :-** வயதெல்லை :- 25 - 45

உடன் தொடர்பு கொள்ளவும்
தொ.பே:- 071 535 4504 / 071 535 4500
எமது முகவரி :- செஞ்சோலை சிறுவர் இல்லம், கிளிநொச்சி.
மின்னஞ்சல் :- sencholai1992@gmail.com
நேர்முகத் தேர்வு :- 02.08.2017 (புதன்கிழமை)
தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
(நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்)

**வாழ்வில் வெற்றிக்கான தேடல்**

நாடளாவிய ரீதியில் இயங்கிவரும் எமது Everest pvt. (Ltd.) நிறுவனமானது வடமாகாணத்தில் புதிய கிளைகளை நிறுவ உள்ளது. அதற்கான 50 இற்கும் மேற்பட்ட திறமையான O/L மற்றும் A/L தேர்ச்சி பெற்றவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட உள்ளது. வெளிமாவட்டத்தில் இருந்து வருபவர்களுக்கு தங்குமிடம் மற்றும் உணவு வசதிகள் செய்துதரப்படும்.

தொடர்பு -
077 517 9034, 021 722 3317, 076 864 3505

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

2018 ஜனவரி பரீட்சைக்கான

aat (Sri Lanka)
(AA1, AA2, AA3)
*Qualification -G.C.E. O/L 6 Passes*
Medium - Tamil & English
ஆரம்பம் - 29.07.2017 காலை 8.00 am

Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna,
021 222 3382/ 021 222 9149

**போட்டிப் பரீட்சை வகுப்புகள்**

வடமாகாண ஆசிரியர் (3 - I) முன்பள்ளி ஆசிரியர் தெரிவுக்கு
பிரதி ஞாயிறு 11.00→3.00

SLAS
பிரதி ஞாயிறு 9.00→3.00

சட்டமாணி நுழைவு
பிரதி சனி 10.00→3.00

சுங்க பரிசோதகர்
பிரதி சனி 12.30→4.00


சமுநல அபிவிருத்தி உத்தியோகத்தர்
பிரதி சனி 10.00→2.00

தொடர்புகளுக்கு
076 688 3394
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கியருகில்)

# மரண அறிவித்தல்

## சின்னத்துரை கிருஷ்ணபிள்ளை

**(ஓய்வுநிலை தபாலதிபர் - யா/ வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலய ஸ்தாபகர்)**



வெற்றிலைக்கேணியைப் பிறப்பிடமாகவும், பருத்தித்துறையை வாழ்விடமாகவும் கொண்ட சின்னத்துரை கிருஷ்ணபிள்ளை 25.07.2017 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - உமையாத்தை (வெற்றிலைக்கேணி ) தம்பதிகளின் அன்பு மகனும், இராசையா - மனோன்மணி (பருத்தித்துறை) தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கமலவேணியின் அன்புக் கணவரும், லக்ஷ்மி, ஜெகதீஸ்வரன், உமாமகேஸ்வரன், லிங்கேஸ்வரன், அமலேஸ்வரன், அமுதாம்பிகை, நாகேஸ்வரன், ஜெயகாயத்திரி, ஆகியோரின் அன்புத் தந்தையும், நந்தகுமார், ஸ்ரீலதா, ஷாமினி, தேவதாஸ், அருள்ஜோதி, பிருந்தா, ஜேசன் ஆகியோரின் அன்பு மாமனாரும், பைரவி, தேவசுகன், தேவானந்தன், ஜனகன், ஓவியா, ஹரினித்தா, நிக்ஷித்தா, உருத்திரா, ஜெகன், சுயேன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.07.2017) ஞாயிற்றுக் கிழமை காலை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 9 மணியளவில் தகனக்கிரியைக்காக பருத்தித்துறை சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பூதவராயர் கோயில் ஒழுங்கை,**
**பருத்தித்துறை.**
077 960 5119, 076 787 7483

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.07.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.